467

பிஸ்மில்லாஹி.

ததிக்கிரத்துல் அ[illegible]ன்னும்

உபதேச மாலை.

இவை

தஞ்சாவூர் ஜில்லா திருத்துரைப்பூண்டி தாலூகா
ஆதிரேங்கம் நகரென்னும்
கட்டிமோட்டிலிருந்து வாசஞ்செய்த
ஹாஜி, மீரு ஹுஸைன் ஆலிம்சாஹிபு
அவர்களால்
பாடிய பாடல்கள்.

இதனை
கூத்தாநல்லூர்
பு. நெ. காதிர் முஹையிதீன் ருவுத்தர் அவர்களால்
பார்வையிடப்பட்டு

கூத்தாநல்லூருக்கடுத்த சேனைக்கரை
பாவாமுஹையிதீன் ருவுத்தர் என்கிற
சின்னக்கனி ருவுத்தர் குமாரர்
[illegible]கு முஹம்மது ருவுத்தர் அவர்களின்
[illegible]பொருளுதவி முயர்ச்சியால்

கூத்தாநல்லூர்
[illegible]லியா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
1927

Registered Copy Right.

விலை ரூ. 1-8-0]   [தபாற்கூலி பிரத்தியேகம்

THE REGISTRAR OF B[illegible]
17 JAN 1928
MADRAS
Q7:417
N27
85920

முகவுரை.

இஃது தஞ்சாவூர் ஜில்லா திருத்துரைப்பூண்டி தாலூகா ஆதிரெங்கம் நகரென்னும் கட்டிமோட்டிலிருந்து வாசஞ் செய்த சேக்காதி ருவுத்தர் புதல்வர்களில் சற்குணமும் மேன்மைவாய்ந்த காத்திபு ஹாஜி ஆலீம் புலவர் அவர்களால் குர்ஆன் ஹதீது பிக்குஹு, அக்காயித்து, தஸவ்வுபு, இன்னும் அனேக பல இல்முகளின் ஆதாரங்களைக் கொண்டும் ஹனபி ஷாபியி மதுஹபின் மஸ்அலாக்களும் சேகரித்துப் பாடிய பாடல்கள். இதற்குத்திக்கிரத்துல் அனுமென்னும் உபதேசமாலை யென்று நாமஞ் சூட்டினேன். இதுகளில் ரொம்பவும் கிழிபட்டுப்போய் கிடந்ததையறிந்த உடர்ப்பிரப்பான நேயர்கள் இதையச்சிடும்படி கேட்டுக்கொண்டமையால் ரொம்ப பிரயாசையுடன் இதை யெழுதி நாயன் கிருபையால் அச்சிடுவித்தனன் இதில் ஏதேனும் எழுத்து சொற்சிதைவிருந்தால் சேர்த்து வாசித்துக் கொள்ளவும். இதை கிளேஸ் கடிதத்தில் திருத்தமான எழுத்தால் அச்சிடப்பட்டது.

இங்ஙனம்,

பீ. சி. செய்யிது முஹம்மது ருவுத்தர்

சேனைக்கரை.

மன்னார்குடி தாலூகா.

சேனைக்கரையிலிருக்கும்

பீ. சீ. செய்யிது முஹம்மது ருவுத்தர் பாடிய

சாத்துக்கவி.

(1) ஆதிநாயகனே யிந்த அரும் பொரு ளடங்கியுள்ள
நீதிசேர் ததிக்கிரத்துல் அருமென்னும் பாடல்தன்னை
வீதியாய் விளங்கச் செய்து விரிஷுர ஹருளு மெங்கண்
ஹாதிநேர் வழியில் மீறுஹஸனென்னும் சாஹிபுக்கே

(2) தோங்கல்

அல்லாதனைக் கெஞ்சி நமதுடைய ஆண்டவர்பேரி லன்புவைத்து
நல்லா வெளியாக்கி ஷுரகுதன்னை நாடிஎப்போது முன்னினைவால்
பொல்லாக் குபிர்பாவம் நீக்கச்சொல்லி புந்திதனைமிக தேற்றிவைத்த
வல்லானேயந்த ஆலிமுக்கு வரிசையுள சொர்க்கம் புகுத்துவாயே

விருத்தம்.

(3) பார்க்கவே எந்தநாளும் பலபல நூலுமாய்ந்து
தீர்க்கமா யெடுத்தே எங்கள் முகம்மதின் மார்க்கந் தன்னை
கார்க்கவே இறையோன் சொன்ன கருத்துள வேதத்துற்ற
பார்க்கமே எடுத்தின் னூலின் விபரமென் றறிந்துகொள்வாய்

இன்னிசை.

(4) எத்திசையும் போற்றும் இரசூலின் சதகமதை
பத்தியுடன் பார்த்தவர்க்கு பலகா லறிவுவரும்
முத்தியரு ளுண்டாகும் முதலோன் பரக்கத்துண்டாம்
வெத்தியுள ஆலநபி விசுவதிப்பு முண்டாமே.

இதுவுமது.

(5) எல்லாப் புகழ்க்குறிய யேகன்நபி காரணமுஞ்
சொல்லாக வாழ்த்துதலுந் தூய்யன் மறை மீதிலுற்ற
வல்லா னுரைத்தசுக வழிவிலக லாணதுவும்
நல்லார்களைப் போற்றி நமக்குரைத்த மெய்ப்பொருளே.

இதுவுமது.

(6) ஆதி பெரியோனால் அஹ்மதிரசூல்நபிக்கு
நீதி மறைமீதில் நிகழ்த்தியுள ஹுக்முகளை
யோதிப் பரிகலித முலகுதனி லுள்ளவர்க்கு
ஹாதிவழி காட்டிவைக்க கருணையுடன் பாடினரே.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மானிர்றஹீம்.

ததிக்கிரத்துல் அஜம்

என்னும்

மஹ்மூதர் சதகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

மாமேவும் மக்கநகர் வள்ளல்மஹ்மூதர் தம்மேற்
பாமேவும் நற்சதகம் பாடவே—பூமேவும்
பற்பல சரூசர்மும் பத்திகொ டமைத்தருள் செய்
கற்பனைசேர் மெய்ப்பொருளே காப்பு.

நூல்.

ஆசிரிய விருத்தம்.

ஆதியுரை பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்றஹீம்
மறைதமுந்தி நாவி லோதி
அல்ஹம்ந்து லில்லாஹி யொடுரெப்பி லாலமீன்
அல்லாவை மிகப்போற்றியே
சோதியி ஞெடுக்கத்து நற்பேறு மானபெயர்
சுத்தமுட னேதுதித்துந்
துய்யவனை யுள்ளத்தி லச்சம்வைத் தனுதினந்
தொழு முத்தக் கீன்களுக்காம்
நீதிசல வாத்தருள் சலாமவையி னீடேற்றம்
நிறையறிவு நமது நபிமேல்
நீண்டகிளை யார்களசு ஹாபிமார் பேரிலும்
நிலைமைதீன் மார்க்கத்திலே
ஹாதிவழி மூமீன்முசு லீம்க ளனைவோரிலுங்
கருணையுட னுண்டாகவுங்
கதிதருஞ் சதகமென் னுவிலருள் ஹக்கனே
காருண்ய மஹ்மூதரே. (1)

பிஸ்மிலின் பயான்.

பூரணக்கடவுளைப் போற்றியே புவிமீது
    புலமையோர் கவிதை செய்தால்
பூர்த்தியாய் பிஸ்மிலை புகழும் அல்ஹம்ந்துவைப்
    புனிதமாம் சலவாத்தையும்
ஆரணமில் வருமிந்த மூன்றையுங் கோர்வையி
    லமைர்துவர விதியதாகும்
அறிமினின் பிஸ்மிலில் பருவு வாஜிபு சுனத்
    தாகும் ஹறாம் மக்றூஹவும்
பாரணத்திற்காக தபஹ்மேலே.பறுலாகும்
    பாத்திஹா தனி லுள்ளதாய்
பதியுமா யத்தெனச் சொல்வதால் ஷாபிகியில்
    பகருவது வாஜிபாகுந்
தாரணியி லொழுவிலுந் தன்புசித் துணவிலும்
    சையோக வேளை தனிலுந்
தவறுதுரைக்கும் வகை சுன்னத்திதாகுமா
    தவமுற்ற மஹ்மூதரே. (2)

இன்னமுந் தொழுகையில் பாத்திஹா சூறவி
    னிடையிலும் நடையில் மூன்றும்
இருப்பினுந் தஞ்சமென் றிறையோன் பரக்கத்தை
    யெண்ணியா வற்றிடத்துஞ்
சன்னையாச் சொல்லுவது ஷாஹில் முபாஹென்பர்
    தப்பித ஜனுச் செய்யினுந்
தள்ளிடு மயக்கமுறு.கள்ளைக் குடிக்கும் வகை
    தன்னிலும் பிஸ்மிலோதல்
கன்னும் ஹறுமென்பர் சூறுபறு அத்தில்
    கழறுவது மக்றூஹவாம்
கலியினுதம்பேரி லிறைமுன் பிறக்கினது
    கனவரிசை பிஸ்மிலாகும்
மன்னவன் பிஸ்மிலது மாமறை குறுனுக்கு
    வந்திடுந் திறவுகோலாம்.
வரிமுந்தி கலமெழுதும் மகுபூஉ பலகையில்
    வரைந்துளது மஹ்மூதரே. (3)

புகழின் பயான்.

புகழுவார் நால்வகை புகழ்க்குரிய நாயனைப்
புகழுமுறை விதியதாகும்
புவிதனில் ஹம்தைஜூம் ஆவுடைய குத்பாவில்
புகலுவது பறுலதாகுஞ்
சுகவதுவை குத்பாவி லுந்தும்ம லின்பினும்
துஆவினைக் கேட்கு முன்னுந்
துதியினைப் பேணுவது சுன்னத்தி லுள்ளதாஞ்
சுத்தமில் லாவிடத்திற்
சகிதமா யோதுவது தவருன மக்றூஹூ.
ஷர்றினைச் செய்து மகிழ்வில்
ஷறஹில் ஹறாமான வஸ்துவைத் தின்றபின்
தனிஹம்ந்து விலகலாகும்
நகமுடனுரைத்த நபி நாயக முகம்மதே
நளினமலர்த் தாள் போற்றினேன்
நற்கவிதை இச்சதக மிக்கெளிதில் முற்றிலு
நடத்தியருள் மஹ்மூதரே. (4)

ஷூக்ரின் பயான்.

தூய்யவன் றந்தநிகு மத்துகட் கனுதினம்
ஷூக்ரொனுந் துதிகள் செய்தல்
தோன்றிவரு முசுலிமீன் கட்குவிதி யாகுமென
தூங்கநபி யின் ஹதீஸ்த
வையகந் தனிலாதி லாஹிறில் பாத்தினும்
வழங்குநிகு மத்தினுக்கு
வாக்கினல் ஷூக்றுகளை யதிகரித் தோதுவதில்
வளருநிகு மத்துரிமையாம்.
ஐயமருள் நிகுமத்தி னுக்குரிய ஷூக்ரிலா
னவனுக்கு மாறு செய்லோ.
அடியோடு வந்தநிகு மத்தைப் பரித்திடுவ
னருமன வாக்கு செயலால்
உய்யும்நிகு மத்தினுக் கெதுகையுள ஷூக்றவாம்
உறை ஹம்ந்த தெண்டிப்பினுல்
உண்டாகு நிகுமத்தி னுக்குநா விற்புகழ்த
லுதவியருள் மஹ்மூதரே. (5)

ஷுக்றுவுக் குறைதுதி யெனப்புகல்வர் பெரியோர்கள்
ஷுக்ருகள் மூன்று வகையாஞ்
சொல்லுமதி லோர்பிரிவு கல்பின்ஷுக் ருமென்று
சுத்தநிகு மத்தனைத்தும்
ஹக்கனிட மென்றறிதல் நாயனைப் புகழ்வதொடு
கருணையினை வெளியுரைத்தல்
காதலிவை நாவினுள ஷுக்றுவாம் நமதுடைய
கால்கை யுறுப்புகளினல்
ஹுக்மின்ப டிக்கமல்கள் ஸாலிஹாய்க் கொடுவருதல்
கூறுமூன்றின் ஷுக்றுவாங்
கோனின் குருனிலுங் குரிசிநபி வாக்கிலுங்
குரு ஆரிபீ ஞெலிகளால்
இக்குநிகர் சொர்க்கள்பல ஷுக்றுகள் தனைக்குறித்
தெக்கலையு மிக்கறைவதால்
இருபதியி லும்பெரிய வன்கிருபை பெற்குதவி
என்றுமருள் மஹ்மூதரே. (6)

அல்லாவின் றிருநாமம்.

நாயனின் றிருநாமம் நவிலுநா லாயிரமில்
நாதனறி வானுயிரம்
நாகமே லோறினி தறிந்ததோ ராயிரம்
லௌகுதனிற் பதிவாயிரம்
தூயமறை தவுறுத்தி லெழுதிவரு முன்னூறு
சுயஜபூரில் முன்னூறு
சுருதி இன்சீல்வந் துறைத்தறியு முன்னூறு
துதிபுருக்கானில் நூறே
ஆயுமஸ் மாவுல்ஹுஸ் னுவதொண் ணூத்தியொன்
பதுவொன்று மறைவானதே
அவனையறி வாமிஸ்முல் அகுலமதை யறிவார்க
ளருமை பெரு நபிகளொலிமார்
காயமுட னந்தவிசு மின்மகிமை கல்பினிற்
கண்டுதெரி சிக்கவருளுங்
கார்முகிற் கவிகைமே நிழலிடுங் கஸ்தூரி
காதமண மஹ்மூதரே. (7)

நபிமார்களின் றுதியும், நபிநாமத்தின் மகிமையும்.

நானிலந் தனிலெலக்ஷம் நாலாறு டாயிரவ
ராகும்நபி மார்கடமையும்
நன்முறுசல் மூன்று நூற் றெருபத்து மூவரையு
நாவினுற்றுதிகள் செய்தே
மோனகுரு வாகிய முகம்மது றசூலடியை
முத்திகொடு கண்ணில் வைத்து
முகம்மதெனு நாமமது அஹ்மதெனு நாமம்விட
முந்திவெளி யானதாகும்
தேனினிய நபிநாம மாயிரம தாகுமெனத்
தேர்ந்ததிரு நாமம் ரெண்டாஞ்
ஜெகதலத்தினோர் முகம்மதுவை யகுமதைச்
சிறக்கவே பெயர்கள் வைத்தால்
வானினுள சொற்கத் தலத்தடைவ ராகாத
வன்னரகி லேவிழார்கள்
வானமே மூங்கடந் தருஷிலிறை முன்பேசி
வந்தநபி மஹ்மூதரே. (8)

தீன்குலத் தோர்கள்நபி நாமமே பெயரிடுதல்
தெரிவுதரு முஸ்தஹபுவாம்
திருநாய கன்றனது வானோர்க ளிற்சிலர்கள்
சிந்துலகில் வந்திறங்கி
மான்மதங் கமழுநபி பேர்வைத் திருக்குமனு
மாளிகைக டோறுமேகி
வந்தனை யுடன்கண்டு மினவியே போவார்கள்
வள்ளல்நபி பேரிரண்டின்
ஜீனத் தெழுத்துநா லானதல் லாஹுவின்
திருவெழுத் துளநாலதால்
திரிகால மறியுநபி நாலெழுத் துவமையால்
ஜெகமனிதர் வடிவமைத்தான்
ஈனநர கத்துறைவ னுருவத்தை மாற்றிவைத்
திறையோன தாபுசெய்வான்
யெங்கணு மிலங்குமிசு லாமறையி னுக்குரிய
யெங்கணபி மஹ்மூதரே. (9)

சலவாத்தின் பயான்.

சலவாத்தை யோதுவதி லாறுவகை யதிலொன்று
தன்வயதி லோர்விடுதலஞ்
சகலருக் குரியபறு லாகும் நபி நாமமதை
சபையினிற் சாற்றினுலோ
பெலமான வாஜிபாம் பேரின்ப தொழுகையிற்
பின்னிருப் பினிலோதலும்
பிரயோக நபிலுகளில் முன்னிருப்பிலுமரிப்
பிரேதநற் றொழுகை தனிலும்
நலவுதரும் சுன்னத்தி தாகுவகை மூன்ருகும்
நாலாவ தென்னேரமும்
நாடியே சவுகாச நேரத்தி லோதுவது
நல்முஸ்த ஹபுவதாகுஞ்
செலவழி வியாபார விற்குஞ் சரக்கினை
திறந்தபோ தையில் ஹறுமாஞ்
ஸஜிதாவி னுனதொழு கைதனில் மக்ருகும்
சமதுபுகழ் மஹ்மூதரே. (10)

வெள்ளிரு ளிரைவையிற் பகலையிற் சனி ஞாயிற்
வியாழத்தி நாள்க டனிலும்
விடியலில் அந்தியிற் பள்ளியிற் புகுதலில்
வெளிவரும் போதுமோதல்
தெள்ளுநபி யின்கபுர் ஜியாரத்து செய்வதில்
சீர்சபா மறுவாவினுந்
தெரிவுஜுமும் ஆவன்றி மற்றருத்து ப்ாவிலுஞ்
ஜெயவாங்கு சொன்ன பின்பும்
பள்ளியுள் காமத்து சொல்லிற் றுவாவினிற்
பதமூந்தி நடுவினிலும்
பறுலுபோல் வித்துறு தஆவின்பித் தடியிலும்
பலதல்பியா முடிவிலும்
விள்ளுமா னிடர்கூடி டத்திலும் பின்பவர்கள்
விலகிபிரி வாமிடத்தும்
விடிமிட்டு ணச்செய்ய ருந்தவது விடரிலா
வெற்றிபெரு மஹ்மூதரே. (11)

உளுவின் தலத்திலுங் காதினி லிறைச்சலுக
ளுண்டான போது மொருவன்
ஒருவஸ்து வைத்ததை மறந்திடும் போதையிலும்
ஒஃலுகேட் கிறவிடத்தும்
பலுலான இல்மூக ளெடுத்துரை இடத்திலும்
பலஹதீ தோது முதலும்
பறைதலது முடிவிலும் பத்வா சுவால்களை
பண்புரையை வெழுதிடத்துங்
குலவுநெறி பலகோர்வை செய்பவ ரடங்கலுங்
குருவிடத் தோதுவோருங்
குணமாக சொல்லிக் கொடுக்கிறவர் தங்களுங்
குத்பாவை யோதுவோரும்
வலியமறை யோதுநபி நாமமே சொல்லினும்
வந்தித்து கேட்குவதிலும்
வறையிரவி டத்துஞ்சல வாத்துரைத் தல்முஸ்த
ஹபுவாகு மஹ்மூதரே. (12)

சலவாத்து சொல்லப்படாத தலம்,

எழுதா னத்தில்நபி மீதுசல வாத்தோத
லேற்காத மக்றூஹாவாம்
இன்புறு ஜமாஹினு மலஞ்சல மிடத்தினு
மிறைதிறைக டற்புவியினிற்
வாழ்வுந்தொ ழிற்செய்யும் வஸ்துவைப் பிரபல்ய
மாக்கியே விற்கு நேரம்
வாட்டமொடு கால்சருகிக் கீழேவி ழுஞ்சமயம்
வனுபுதுன்மை யானபோதும்
ஆளுமா டாடுக ளறுத்திடுங் காலையினும்
அலறிவரு தும்மல்போதும்
ஆதிநா லோதையிலுங் குத்பா உரைத்தபோ
தவையெலா மக்றூஹாவாம்
நாளுமினி சலவாத்தை யாதுவைத் தோதுவது
நபிதிருமுனிற் சேர்வதால்
நாயனருள் நபிகிருபை இகபரமி லுண்டுமென்
றுடும்நபி மஹ்மூதரே. (13)

நாலு யார்களையும், பெரியோர்களையும் புகழ்வது.

ஆண்டவர்க ளுக்குரிய தோழரா முன்னிலே
யபூபக்கர் சித்தீக்கையும்
அரசுபதி யுமறுகத் தாபுரெவி யல்லாகு
அன்குமா வைப்பணிந்தே
பூண்டிடும் குறுஆனை கோர்வைசெய் யுதுமானை
புந்தியில் நாளுமேத்தி
புத்திநுட் பத்தினுஞ் சுத்தவீ ரத்தினும்
புகழ்பெற்ற அலியாரையுங்
காண்டகாப் புதுமைநபி பேரரென வந்திடும்
ஹஸனொடு ஹுஸைனரையுங்
கர்த்தாவி னருள்பெற்ற வசுஹாபி மாரையுங்
கனதிறிலு வான்றுதித்தே
தாண்டிய திரைப்புவியி லாறிபீன் குத்பினொலி
ஸாலிஹீன் பெரியோரையுந்
தகுதியுற வாழ்த்தினேன் சதகமிதைப் பாடவே
தயவருளு மஹ்மூதரே. (14)

அவையடக்கம்.

மாரிதனை யளவிடவு முடியாத வாரிக்கு
வாவிநிக ரானபோலும்
வன்னமயி லாடுதற் கிணையென்று வான்கோழி
மருவிநின் றாடல்போலும்
சிறியே படம்விரித் தாடுநற் சர்ப்பமுன்
சிறியநாங் குழுவு போலும்
சீலமுறு மறிவுடைய பெரியோர்கள் முன்சொலத்
தெரிவிலா மடையர்போலும்
பாரினிற் கதிர்வீசும் பானுவிற் கெதிராக
பரிவிளக் கேற்றல்போலும்
பளபளெனு மாணிக்க மூலமதற் கிணையாக
பண்ணிடுஞ் செங்கலென்போல்
மூறிவா மூலகமதி லறிவாளர் பாவாணர்
முத்தமிழ்ச் சபையோர்கள் முன்
மூதுநபி சதகமதைப் பாடினேன் பிழைநீக்கி
முத்தியருள் மஹ்மூதரே. (15)

ஆதிநபி ஹிஜிரத்தி லாயபதி மூன்றுநூற்
றுண்டினெடு பத்தொன்பதின்
ஆகிய முஹற்றமின் மாதமிரு பத்துமூன்
றரியதிங் கட்கிழமையில்
ஆதியாந் தஞ்சைநகர் ஜில்லா திருத்தருப்
பூண்டி அத் தாலுக்காவின்
அழகாதி ரெங்கம்நகர் சேக்காதி ருவுத்த
றன்புறும் புதல்வனுனேன்
ஹாதிநேர் வழியுடைய மீரு ஹுசைனெனுங்
கல்வியறி வில்லாதவன்
ஹனபியொடு ஷாபியீ மதஹபின் நிலையினருள்
கனமாங் கித்தாபுகளிலே
நீதிதன் யீமானு மிசுலாம் அக்கீதாக்கள்
நெறிமஸ்அலா அனைத்தும்
நிறையுமுசு லிங்களமல் செய்யவெகு தெளிவாய்
நிகழ்த்தினன் மஹ்மூதரே. (16)

தீனின் பயான்.

தெரியவறி நாயனிட மெய்யான மார்க்கமது
தேர்ந்தஇசு லாமென்றதாந்
திருநாத னுக்கது பொருத்தமாக் கப்படுஞ்
சேர்மான தெளகீதையும்
விரிஷறகு தன்னையும் பொதியுமிசு லாமார்க்க
விதமன்றி வேறில்லையால்
விதியினல் புவிவந்த ஆதநபி காலமுதல்
வேதநெயி னுர்வரைக்குஞ்
சரியந்த இசுலாமு மெஞ்ஞான வழிமற்ற
ஷற்றுயிரத் தெழுநூரையுந்
தள்ளுவழி யாநீங்கள் முசுலிமீ னல்லாது
தவறிமர ணிக்கவேண்டாங்
குருமொழிய தானஇறை திருவசன மானபொருள்
குவலயந் தனிலறிந்தே
குறைவிலா தீநெறி நடந்துவர வெங்களுக்
கொள்கைதரு மஹ்மூதரே. (17)

யேற்றமாந் தீனுடைய ருத்தமொழி யேகபர
      னேர்ப்படுத்திய வழியதாம்
ஈடேற்ற மென்றதீ னென்பதும் யீமானு
      மிசுலாம் ஷறூ இகுவெனும்
மாற்றமறு மார்க்கவிதி யாகிவரு மேவல்களும்
      வழுவிலகல் முதலாகிய
வழிதுறையின் ஹுக்குமுக ளடங்கலு மமைந்தபொருள்
      வல்லகட் டளையதாகும்
போற்றிவரு முன்னிமா மபூஹனீ பாவருளும்
      போதம்பிக்குஹுல் அக்பரில்
பூதலத் தீனோர்க ளனைவர்க் குறைத்ததால்
      புகழுமுசு லீமறிந்து
சாற்றுமேன் தீனிலையில் தரிபட்டு மாறாது
      சாதித்து நின்றுவந்தால்
ஜன்னத்தி னுறுபதவி பெறுவார்க ளமல்செய்ய
      ஷறஹுருளு மஹ்மூதரே. (18)

தீனென்ற சொல்லுக்கு வேறுமஃனா மூன்று
      சீர்வழிப்பா டொன்றதாஞ்
செய்நடை வழக்கமெனு மாதத்தி ரண்டாம்
      ஜெஸாவென்ற கூலி மூன்றும்
வான்படைத் தோனுக்கு நேமமொடு வழிபடுதல்
      வழமையா கக்கொணர்ந்தால்
மறுமையிற் கூலிதரு வானென்றி ருப்பதாம்
      வலுதீ நெடுப்பினாலுந்
தானுளது றுக்னெனுந் தூண்களுண் டாமதிற்
      றனிமையீ மானென்றது
தழுவுமிசுலாம் ரெண்டு தெளகீது மூன்றதாந்
      தலையறிவு மஃரிபாவாம்
நான்கையு மெடுத்தவர்கள் மார்க்கமுடை யோராவர்
      நடையொன்று வேறுபடிலோ
நமதுதீன் பேதமாம் நாலுமொன் றோர்மைபெற
      நன்கருளும் மஹ்மூதரே. (19)

மனிதன்பேரில் முந்தின பருலு கலிமாவென்பது.

பூருய மாகநற் சரிவயது வந்தவன்
புலூகியத் தானபிறகும்
புத்திவந் தெனவறியு முந்தியே தன்மீதில்
பூணும்விதி பருலானது
பேருன ஹறுபுநா லாறுள்ள கலிமாவைப்
பிசகறவே நாவிலோதி
பெருகுசொற் பொருளைஇதை யாசனந் தனினுன்னி
பிரியமொடு திக்று செய்தால்
மேருன பிழைகளை யகற்றிடும் பொல்லாத
மிடிமுறு பிக்வை நீக்கும்
மேல்வரிசை யாற்கூலி மிகுதியாம் கல்புதனை
மெருதுவாய் சிக்கறுக்கும்
ஆருலு மறியவிதி யாகும்கா யன்றனை
யடுத்துமே முடுகிவைக்கும்
அனுதினங் கர்த்தாவை கல்பில்தெரி சித்தருளும்
அதிகூலி மஹ்மூதரே. (20)

கலிமாக்களின் பயான்.

கலிமாக்க ளைந்துவகை யாகுவதில் அவ்வலிற்
கலிமாவெனுந் தையிபாம்
ஹக்கனருள் கோட்டையாங் கலிமா வுரைத்தல்கற்
கோட்டையிற் செல்குவானுஞ்
சலுகையொடு வாழ்த்தலாய் கோட்டையுள் சேருவது
தகுமென் னதாபைவிட்டுஞ்
சருவமதி னச்சமைத் தீருவா னென்றுதி
தன்குதுசியிற் சொன்னதால்
அலகைஜின் பணியும்நபி யருளினு ரீமா
னகீதாக்க ளிதிலுறைவதால்
அனவரத முதிரமிற் றசைஎலும் புட்சென்
றழுந்தியே கோர்க்கமட்டும்
நிலையுமொரு முன்னூறு புக்ஹா விடத்தினும்
நிறையபன் னிருவாயிரம்
நிஜகுபி யாக்களிட மிரவுபக லொன்றிற்கு
நிதமொழிதல் மஹ்மூதரே. (21)

இரண்டாங் கலிமா ஷஹாதத்தி னஷ்ஹதுவை
இன்பமுற நாவிலோதல்
இறையவனை இரசூலே யுண்மையா காணல்போல்
இம்மையிற் சாக்ஷி சொல்வாம்
துண்டான தம்ஜீது கலிமாவு மூன்ருகும்
சுபஹானல் லாவை யோதல்
துன்பமுள தீவினைக ளெல்லா மகன்றிடுந்
தூய்நன்மை மிகுதியுண்டாம்
நன்ருன தௌஹீது நாவினது கலிமாவை
நாவிலொரு பத்தோதினல்
நபியவர்க ளிசுமாயில் மைந்தர்களில் நின்றமே
நாலுபே ருரிமை போலாம்
அன்ருடும் ரத்துகுபி ரைந்தெனுங் கலிமாவை
அந்திசந்தியு மோதினல்
ஆகாத குபிறுறை ஷிருக்கையும் போக்குமென்
றருளினர் மஹ்மூதரே. (22)

இவ்வேழு வசனத்தையும் ஓதி வருபவருக்கு பலன்.

முன்னோர்களால் சொன்ன வசனமோ ரேழினையும்
முறையாக யோதிவருவோர்
முன்னே ளிடத்தினு மலக்குக ளிடத்தினு
முழுவரிசை பெற்றிருப்பார்
இன்னமுஞ் செய்பாவ மேழுகடல் நுரைபோ
லிருக்கினும் பிழை பொருத்தே
இபாதத்தி லின்பமு மிருக்கையில் மௌத்தினிட
மேகனழ காக்கிவைப்பான்
அன்னறிவி லொன்ருகு மெவ்வேலை செய்துவர
ஆரம்ப மித்தபோதும்
அஹதுடைய நாமமென் பிஸ்மிலேச் சொல்வதாம்
அவையில்ரெண் டாவதெனிலோ
யுன்னுமெவ் வேலேகள் முடிந்தபின் ஷுக்ருக்கா
யோதும்அல் ஹம்ந்து லில்லா
ஒஹியினைக் கொண்டுலகி லெல்லா நடத்துநபி
உத்தமர்கண் மஹ்மூதரே. (23)

முன்வசன மூன்றுகுந் தவறலாய்ப் பாதக
மொழிந்தபிழை யைத்தவிர்க்க
முறையோடஸ் தகுபிருல் லாஹுவென் ரோதுவது
முயலுநா லாவதெனிலோ
இன்சொலொரு வர்கருமம் நிறைவேற்ற நாளையெனில்
இன்ஷாஅல் லாவென்கவும்
இயலுமைந் தாவது பொருத்தமில் லாக்கரும
மெதிருவதை நீக்கல் செய்ய
தஞ்சமல் லாஓழிய பவம்விட்டு மீளத்
தவஞ்செய்ய பெலனுமிலையால்
சார்புடைய ஹௌக்கலா வன்னேர மோதவும்
சாருமாருவ தெனிலோ
பென்சலன் முசீபத் தடுத்தலால் சபுருசெய்
இன்னாலில் லாஹியைச் சொல்
லேழாவ திரவுபக லென்றுமே திக்ருசெய்
இறைபுகழும் மஹ்மூதரே. (24)

ஈமானின் விபரமும் சிபத்துகளும்.

ஈமானெ தீனென்ற ஹூப்பில்முன் னுள்ளதாய்
ஈமானின் பருவு ரெண்டாம்
இறைவனொடு தூதரிர சூலினையு மிதயத்தி
லின்பமா யுறுதிசெய்தல்
தாமோது நாவினால் சொல்வதுவும் யீமான்
றனக்குறு சிபத்துகளிலே
சாதுரிய முஜ்மலு முபஸ்ஸலென ரெண்டாந்
தலைமுஜ் மலுக்குமூடல்
ஆமான தாகுமென விபரித் தெடுத்தவகை
யறைவது முபஸ்ஸலீமான்
ஆமன்த்து பில்லாகி யெல்லாம் படைத்தவனை
யன்புவைத் தீமான்கொளல்
சீமான் மலக்குமறை ஜெயநபி யொடுக்கநாட்
டமைநய நஷ்டமெல்லாம்
ஜெம்மலிறை கற்பனையி னிச்சியமெ னக்கொணர்தல்
சீர்பரமெய் மஹ்மூதரே. (25)

அல்லாவைக்கொண்டு ஈமான்கொள்ளுதல் விபரம்.

அல்லாஹூ வின்பேரில் முந்திஈ மான்கொள்வ
தாலம் படைத்ததொருவன்
அவ்வல் துவர்க்கமிலை முடிவில்லை பூர்வீக
னவனுக்கொ ரொப்பொன்றிலான்
வல்லானெவ் வஸ்திலொரு ஹாஜத்து மில்லையவன்
வஜுபூர்வ முள்ளமையெனும்
வன்னிப்பு தன்னிலுந் திருநாம மென்னினும்
வலியவன் செயல்கடனினும்
இல்லாது இணையுதவி தாய்தந்தை மனைவிமக
வெனபந்து இல்லையென்றும்
இதமுணவு தின்பது குடிப்பது வுறக்கமொடு
இகல்மரதி யமுகை நசலும்
நல்லாங்கு சுகமகலம் கெட்டையொடு கட்டைபோல்
நடுமட்டு திட்டம் விட்டே
நாயகற் றாய்மையா னென்றுஈ மான்கொள்க
நறைகமழு மஹ்மூதரே. (26)

தாத்து சிபாத்தின் விபரம்.

விதியினை யமைந்தவன் குன்ஹூதாத் துள்ளமையை
விபரிக்க ஒருவராலும்
விள்ளமுடி யாமாதி தாத்திலே கவனித்தல்
வீணன மடைய ரென்றும்
பதவிதரு நபியினுரை தாத்தினுள பேச்சுகளைப்
பகருதிருக்க விதியாம்
பலபொருள் சிபாத்திநெறி புரமதால் மஃரிபா
பாதைவழி யறியவேணும்
மதியொளி சிபாத்துமொரு மட்டினி லடங்காது
மண்மீதி லெவருமறிய
மாத்துறீ தியாவின் மதுஹபில் சொல்விவரு
மன்னுன் சிபத்து எட்டாம்
முதல்வனருள் பூர்வீக வன்னிப்பு தாத்தினது
உள்ளமை கொண்டு நிலைவாம்
முன்கண்ட தாரமது பின்காணு மூதறிவு
முடியறுஷூ மஹ்மூதரே. (27)

அந்தவித மாஞ்சிபத் தாகும்வகை தாத்தியா
அப்ஆலி யாவிரண்டாம்
அவனருள் சிபாத்துதாத் திய்யாவு மென்றது
ஹயாத்து குதரத்து இல்மாஞ்
சந்ததமி ருதத்து ஸம்உபச ருங்கலாம்
சகலமிவை யேழதாகும்
ஷக்கன்றி யப்ஆலிய் யாவின் சிபாத்துகள்
தக்வீன தாகும்விபரம்
வந்தஉல கங்கள்தனை யவைகளி லிருக்குவகை
வஸ்துக ளனைத்தையுந்தான்
வல்லமையா லாக்குத லளிக்குதலு மிரணங்கள்
வாகாய்க் கொடுத்து வருதல்
சிந்தனையால் சீமானு மேழைபல வாக்கலாய்ச்
செயல்கனிது போலநாயன்
செய்வதடி மைக்குவுப காரமே கடனில்லை
செயலிஹ்சான் மஹ்மூதரே. (28)

இதில் 7வது சீர் முதல் மலாயிக்கத்துகளின் பயான்.

சாவுபிணி இழிவனுவி லான்சிபாத் தவனின்தாத்
தல்லவே றுளதுமல்ல
தன்தாத்தை விட்டுமொரு போதினும் பிரிவிலான்
தனதிநறு வைஷப்படைத்து
கோவறுஷி னுக்குமேற் றரிபடுதல் படலன்றி
குதரத்தி லிஸ்திவானுன்
குழுமலக் கவனடிமை சங்கையோர் பூதமின்
குழைவுசே ராதபடையோர்
தாவும்றா ஹானியத் தானபல ரூபமுற்
றகுதிபெற் ஷேரொளிவினிற்
ருன்படைப் பெண்ணுணு மல்லஅவ ரணுவளவு
தப்புமொரு மாறுசெய்யார்
நாவிலிவ ரெண்ணிக்கை நாயனறி வான்சிலதில்
நரர் ஜின்னு ஷெய்தான்களும்
நன்றுவொரு பங்குநவ பாகது மலக்கென்று
நவிலுவார் மஹ்மூதரே. (29)

மலக்குகளின் விபரம்.

தீன்குடிப் பொன்றுமிலை துயில்வதுஞ் சேர்க்கையிலை
செய்துமலை எழுதொணுது
செய்கையின் கேள்விகள் கணக்கில்லை மூன்சூறில்
சிலதுவா னவர்மௌத்தாம்
தான்சிலது உம்பர்பின் னல்மவுத் தேதவிர
தமதிடையில் சாகமாட்டார்
தனியவனி னறுவைச் சுமந்தவர்க ளிப்போது
தவமருளும் நான்கு மேலோர்
வான்சூறு வூதியபி னறுவைச் சுமந்திடு
மலக்குகளு மெட்டதாகும்
வஸ்தொருவ னும்பர்க்கு ரெவ்வெண்டு மும்மூன்று
வரிசைநா லிறகுமுண்டே
ஆண்மைஜிபு றீலினுக் கெண்ணிக்கை இறகுமே
அறு நூறு தானுள்ளதே
ஆடுமிற குக்குமிடை யஞ்ஞூறு வருடத்தி
னடிதூர மஹ்மூதரே. (30)

ஜிபுறியீல் அலைகிஸ்ஸலாம் வந்த கணக்கு விபரம்.

இமையவர்க ளுக்கரசு வஹியினைக் கொடுவருவ
ரேற்றமுள ஜிபுறியீலே
யின்று ரிலாதுவரும் ஆதநபி பால்வந்
திறங்குமுறை இருபதாகும்
அமரர்பதி யுயிரிஞெடு வாழுமிது றீஸுநபி
அண்ணலிடம் நாலுமுறையே
அவதியால் பொறுமையும் கப்பல்வைத் திடும்நூஹு
நபியினெதிர் அன்பதாகும்
நமதுதீன் மார்க்கவழி இபுருஹீம் நபிமுன்பு
வந்தமுறை நாற்பதாகும்
நற்கலீ முல்லாவி நானூறு தரமுமென்
னபிமஸீ ஹின்ஞெருபதாம்
எமையாளு மிறசூல் முனில்வந் திறங்குமிரு
பத்துநான் காயிரமதே
இமைமூடு முன்போயி வண்வருவர் பிலமுடைய
ரிவர்மிகவு மஹ்மூதரே. (31)

ஒவ்வொருவர் மூமீ னனைத்தையுங் கார்க்கின்ற
உம்பர்ஹப லத்தென்பவர்
ஓயாம லிரவுபகல் பகரம்வரு வாரவையி
லுறுதிச்சொ லேந்துபேராம்
வெவ்வுறை ஹதீதில்வரும் ரெண்டுபே ரறுபதென
வேறுநூற் றிருபதென்றும்
விந்துதாய் கெற்பமதி லுருவான காலமுதல்
வீறுவரை நாநூறுபேர்
செவ்வையுற மூமீன்க ளனைவரையும் விட்டுஷெய்த்
தானகலச் செய்துவைப்பார்
தேவர்காப் பன்றியடி யன்மீது சாட்டிலோ
ஷெய்த்தானி ருஞ்சல் செய்வான்
கவ்வைபக லிரவிற் கிருமினொடு காத்திபீன்
காவல்முறை யாகிவருவார்
ஹக்கனி னருட்குரிய மெய்க்குமதி னுவரசு
காக்ஷியருள் மஹ்மூதரே. (32)

இன்சொல்மனு வுயிராயி ருக்குவரை யிற்பிரிந்
திடையினிற் புறமதேகார்
யெவரேனு மரணமா னலவன் கபுர்மேலி
ருப்பா ரெழுப்புமளவும்
தஞ்சமாம் தஹ்றமீது தசுபீஹு த ஹ்லீலுந்
தக்பீறு வாழ்த்தல் செய்வார்
தருமின் தவாபையவ னுக்கெழுது வாருண்மைத்
தன்வலம் றகீபிருந்து
நன்செயலை எழுதிடுவ ரிடந்தில்அத் தீதுபல
நடைபாவ மெழுதிவருவார்
நவிலிரு மலக்குகளும் மலவாதை சேர்க்கையில்
நஜிஸால் பிரிந்து நிற்பார்
அஞ்சிதமா யுற்றசுர ரன்னேர மனிதர்செய்
யமலுகளை எழுதுவார்காண்
அவதிரோ யால்வருமு னக்கமுள் படவரைவ
ரன்புதரும் மஹ்மூதரே. (33)

வேதங்களின் பயான்.

வேதம்நான் கென்றசொற் சுகபுகளும் நூறுண்டு
மெய்யலது நூறெருபதாம்
மேலவன் றிருவசனம் அச்சரமு மோசையது
வில்லேஎன் றுண்மைகொள்ளல்
நாதனு னுஞ்சுருதி யறிவதுயர் வாஜிபாம்
நமதுகுரு ஆன்தவிரவே
நல்குமுன் னரணஞ் சுகபுடைய கட்டளேயி
னடைசியலே மாற்றலாச்சு
கேதமொன் றில்லா குருனுடைய கட்டளே
கியாமவரை யில்ஜாரியாங்
கிதமெனும் குருஆன் படைக்கப்ப டாததால்
கேள்முகுஜி ஸின்காரணம்
பாதையொரு வடையாளம் மாலமெவை யுங்கூடி
பதிவுசிறு சூறத்துபோல்
பண்ணலா முன்னவர்க ளோசித்து முடியவிலே
பணிபணியும் மஹ்மூதரே. (34)

சுகுபுகளி னெண்ணிக்கை விபரமறி கடனில்லே
தொகுதிகளே யறிதல்போதும்
சுன்னத்து ஜமாகிடந் திருவசன மாதியின்
ஜமயமான தாத்தருளினர்
சகலபொருள் தரிபட்ட பூருவ சிபாத்தெனுஞ்
சஹீகலாமுல் லாவினைத்
தரையினிற் படையுணப் பட்டதாய்ச் சொன்னவன்
தணலிடுங் காபருவான்
தகடெனுந் தட்டேழு வானமே லந்தரந்
தனிலுள்ள மகுபூலெனுந்
தாளமாம் பலகையி லிருந்தொரு விடுத்தமாய்
தணியுமுன் வானிருக்குங்
குகையிரோ் பைத்துல்உஸ் ஸாவெனும் வீட்டினிற்
கூறும் லேலத்துல்கதறில்
குருனை இறக்கிஇரு பத்துமூன் றுண்டினுயர்
கோன்வந்தர் மஹ்மூதரே. (35)

நபிமார் றசூல்மார்களின் பயான்.

நபியெனப் புவியில்முன் வந்தநபி யாதமுதல்
நபிகள்நா யகம்வரைக்கும்
நபிகளிற சூல்மார்கள் யாவரு மனுப்பிறவி
நல்லஹக் கானமார்க்கஞ்
சபைமுனங் கொடுவந்த நாயன்விடு தூதராஞ்
சமதைவிசு வாசமுடையோர்
சருகலைச் செய்பெரிய சிறுபாவ மதைவிட்டு
சலுகையொடு காவல் பெற்றோர்
கபியாயி னும்பொய்சொ லாதவர்க ளாண்டவன்
கட்டளைப் படிஏவுவார்
கனதிநாட் டான்மக்க ளாகுமவர் மேனியில்
கருவியுரு குறைவிலாதோர்
அபிமான மிகுதிநபி யாடவர்க ளப்தல்ல
அமலால் கிடைத்ததல்ல
அல்லாவின் வரிசைபெற நாடினேற் கருளினன்
அரியபுகழ் மஹ்மூதரே. (36)

றசூலெனச் சொல்பவரை நபிகளென் றோதலாம்
நபிமார்க ளெல்லாரையும்
றசூலென்று பெயர்சொற் றகாமையா மொருமிக்க
நபிகள்தொகை சொல்ல முடியா
நசிபுரிய நபிகளொரு சொற்படியும் லெக்ஷத்து
நாலாம்றே டாயிரவராம்
நான்குலெக்ஷத்து இரு பத்துநா லாயிரவர்
நபிகளென ஒருசொல் வர
ஹிஸாபிலா நபிகள்பனி ரெண்டு லெக்ஷம் பெயர்
கிதாபுகளி னொரு கிலாபே
கியானமுறு முறுசல்முன் னூத்திப் பதின்மூவர்
கிளாபில்முன் னூர்மூவைந்தாம்
றஜாக்குதந் திடுநாய னுக்குநபி மார்களும்
றசூலவர்க ளுண்டுமென்று
நாளுமன தினிலுண்மை கொள்வதியல் வாஜிபாம்
நயமருளும் மஹ்மூதரே. (37)

25 நபிமார்களின் விபரம்.

ஆறுலு நபிமாரி லிருபத்தி யைந்தினரை
யறிவதுவும் வாஜிபாகும்
அவர்கள்திரு நாமமது நமதுகுரு ஆனிலே
யறியவரு மினியோதுவாம்
தீனை ஆதநபி இதுறீசு நூஹொடு
சிறந்த சாலிகு லூத்துடன்
தேரும்இபு றாஹிம்நபி இசுமாயி லிசுஹாக்கு
தெளியும்யஃக் கூபுயூசூப்
கோனுறை நய்யூபு ஷுஐபுமூ சாஹாரூன்
குறியசகு துல்கிபுலியும்
குரல்நல்ல தாவூது சுலைமா னில்யாசு
ஹூதுயூ னூசும்ஷக்கர்
ஆனத ரெஹியாவு யீசாவு மேற்றநபி
இரசூல் முகம்மதென்னும்
இவர்கள்தனி லுலுல்அஜிமி யைந்துபே றலதாறு
வென்றறிதல் மஃறூமுதரே. (38)

உலுல் அஜமி ஆறு பேருக்கு விபரம்.

உலுல்அஜிமி யாறுபே ருதமுட னாகுநபி
யுண்மைஇபு றாஹிம் நபியும்
உறுதிமூ சாநபியும் யீசாவு நமதிறை
யுகப்பா முகம்மதிறசூல்
மலஞ்சல மிலாதநபி மற்றநபி மாரினு
மல்குகள் படைப்பெவையினும்
வரிசையில் மிகுந்தவர்க ளவர்தமக் குப்பிறகு
மறுநபி பிறக்கமாட்டார்
கலையறிவு பெற்றநபி கட்கெலாம் பின்வருங்
காத்திமுன் னபியானவர்
கருவிகுடை நெயினரி னுக்குமுன் னாத்திசில
காரியந் தனதானபோல்
பலவன்பி யாக்களின் காசான சிலகருமம்
பதிலுறுவர் கூட்டமொகார்
பசிமிகுந் தஹஜ்ஜத்தும் வித்துறுமிசு வாக்குபோல்
பருலான மஃறூமுதரே. (39)

ஒடுக்கத்து நாளைக்கொண்டு ஈமான்கொள்வதின் பயான்

அஞ்சாகும் யீமா னொடுக்கநா ளுண்டுமென்
றவனியினி லொவ்வொருவரும்
அறுதிமுடி வானவரை கபுரினி லடக்கியபின்
முன்கர்நக் கீரெழுப்பி
தஞ்சமென் றருமான கேள்வியை கேட்பதுஞ்
சாலிஹா னோர்தமக்குத்
தரமதா லின்பமும் பாவிக்கித் துன்பமுந்
தகுதிபோற் செய்தபின்னர்
யெஞ்சுகுழல் சூறாதி கல்குக ளூழிந்துபோய்
யீரிருப தாண்டுசென்றே
ரெண்டான சூறாதி கல்குகளெ ழுப்பிவைத்
திடமஹ்ஷர் வழிநிறுத்தி
கெஞ்சவெதி ரில்கேள்வி கேட்குமு மீன்வலது
கைக்கெதிப் பட்டோலையுங்
கெடுகாபிர் கட்கிடது கைநீட்டி யோலைக்
கிட்டுமென் மஹ்மூதரே. (40)

மீஜான் தராசினிற் சகலபே ரமல்களையு
மெச்சமனி றுத்துவல்லோன்
மேல்நாடி னோர்களை கணக்குவகை யுங்கேட்டு
மெய்நன்மை யதிகமானா
காசான மார்களினை முஸ்தகீம் பாலங்
கடத்திமின் மறைதல்போல
கசியுங்க வுலல்கவுதர் நதியினிற் பருகியே
கனலிவா வுல்ஹம்தெனும்
பாசான கொடிநிழலு மருஷ-நிழ லும்பெற்று
பரமகதி சேருவார்கள்
பாவியில் வெகுபேரை நமதுநபி மன்றாடி
பவமற கலாசு பெறுவார்
தாஜான மூமின்கள் வரிசையொடு சொர்க்கமுன்
றவரிடுங் காபர்கட்கோ
சரிநீத மாநரக மூழிகா லத்தீர்ப்பு
தருமிறைவன் மஹ்மூதரே. (41)

தன்பவ நிறைந்தவர்கள் பாலங் கடக்கார்
ஜஹன்னமிடை யிற்சேருவார்
தன்கல்பி லணுவளவு யீமானு முள்ளவர்கள்
சதாகாலம் நரகமடையார்
கன்பெருங் காபிர்க ளொருக்காலு மழல்விட்டு
ஹக்காக விடுதலை பெறூர்
கடவுள்நபி மார்களுல மாக்கள்ஷுஹூ தாக்களுங்
கனஷபா அத்தருளுவார்
வன்பெருங் கேள்விகள் கணக்குடைய கோரமும்
வலுவந்த பாரதூரம்
வாளிலும் கூர்மையுள முஸ்தகீம் பாலமது
வடிவுமுக் கோணவளைவுங்
துன்பநர கத்தமளி சொர்க்கலங் காரமிவை
சுருதியொ டதீதில்வருதல்
சுத்தமென் றுண்மையீ மானுளங் கொண்டனன்
றுயர்நீக்கு மஹ்மூதரே. (42)

இறைவனருள் கற்பனைக ளுண்மையாய்க் கொள்வதியல்
யீமானி லாறதாகும்
யெந்தவடி யார்களுஞ் செய்நன்மை தீமையு
மிலாபமொடு நஷ்டமெல்லாந்
துரையாதி யேபடைத் தானடிமை யவைகளைத்
தொழில்பாடு செய்வதாலே
துய்யநன் மைக்குப்பொ ருத்தமே யல்லாது
தொல்தீமை யைப்பொருந்தான்
உறையடிமை யெஜமானி னுத்தரவு தனைஎடுத்
துபயமொ டிறைஞ்சல்தவிர
ஒழுகினேன் கட்டளை யறப்பேசி யுந்தொழுகை
யொழுவணக் கமுமிகழ்ந்து
நறையணிபு லீசினெடு சேர்வதுஞ் சரியல்ல
நற்செயலி றப்பளவிலும்
நமதுடைய நற்செயலை நபுசினிற் சேர்க்குமிவை
நற்பாதை மஹ்மூதரே. (43)

ஈமான் விருக்ஷத்தி னசலான அடிமூ
டிதற்குமேன் கிளையுமுண்டே
இந்தஅடி மூடாவ தாதிதனை யறிவதொடு
இனியவனை யுண்மைகொள்ளல்
தாமேவும் நிண்ணயங் கொள்ளவிதி யானதைத்
தன்மனதி லுறுதிசெய்தல்
தரையிலிதை விட்டவன் காபிரும் அமல்களை
தான்வழுவில் காபிருகான்
சீமான ருட்சிலதை விடுவதும் பெரும்பாவிச்
செயலதுபோ லேந்துநேரம்
தினந்தொழுகை வகையரு போலதின் பருவுகள்
சீர்போனு மாகுமென்றும்
யேமாப் பெரும்பணர்கள் சாலிஹா ணவையமல்கள்
லெழுபத்தியேழுள்ளதே
இதையறியும் சுஹாபுல்யீ மான்பாடல் பார்த்தறிய
வெனையாளும் மஹ்மூதரே. (44)

தன்னுறுதி யீமானில் மூன்றுவகை விபரிக்க
தக்லீது ஒன்றதாகும்
தனியவன் வலிமையை தலீலன்றி செயலதாய்
தந்தைசொல் கேட்கும் யீமான்
இந்தவித தக்லீதி லீமான் பொருந்துதலி
லிமாஞ்சிலர் கிலாபு சொன்னர்
இருவான பிரிவினது யீமானல் இருத்தியா
றிரையவன் வல்லாண்மைய்ய
தன்னறிவி லாராய்ந்து பார்த்துறுதி கொள்ளுவது
தன்மீது பறுலுஜனும்
தக்லீதின் நிலையன்றி இருத்திறறி யும்முறை
சகலபேர் கடமைஎன்றுங்
கன்னல்தரும் மூன்றுக்கு மொவ்வொரு நொடிப்பொழுதும்
ஹக்கைமற வாதிருந்து
கைதரு முருக்கபா முஷாஹிதா செய்துவர
காக்ஷிதரும் மஹ்மூதரே. (45)

கல்குகளில் யீமான் ஹயாத்தா யிருக்கையில்
கல்பிலொளி வரஇருக்கும்
காசினியில் மூமீன் மவுத்தினு லவனுவைக்
கார்க்கும்யீ மானும் றாஹாம்
யெல்கையெழின் மேலறுஷி னுக்குங்கீ ழிலங்கு
மில்லீன் சொர்க்கமில்
ஏகசுக மாவீற்றி ருக்குஞ் சடத்திலே
டீமானின் வேறும் சீபுறில்
நற்கலாம் நிற்குமது ஷறகின்ப டிக்கீமான்
நற்சயன மறதியுடனும்
நலிபோத கேட்டுடனு மாயுமர ணித்துடனு
நாளுமே நீங்காதுகாண்
வல்வதீ மானுக்கு மாற்றமெ னுங்கரும
மனதறிய செய்வதனிலோ
வாகுவில் லாதீமா னீங்கிடும் சரியாகு
மாதவர்கண் மஹ்மூதரே. (46)

ஜவாபு யீமானுக்கு.

ஆருகி லினியொருவர் மூமீனு யென்றுன்னை
யறியவுங் கேட்பாரெனில்
அனுமூமி னுன்ஹக்க னல்ஹம்து லில்லா
அமைத்துள ஜவாபுரைப்பான்
பாராளும் ஷாபிஹிபி லின்ஷாஅல் லாவொடு
பரக்கத்தி னுக்கோதலாம்
பலிதெந்த மார்க்கம்நீ யாருடைய உம்மத்து
பாதையைக் கேட்பாரெனில்
ஏராள மச்சம்நபி இபுருஹீ மார்க்கமென்
றிரகுலும்மத் தெனச்சொல்
எந்தமது ஹபுவென்று கேட்கிலோ அன்போடு
இமாம்ஹனபி மதுஹபைச்சொல்
பேரான ஹனபிமா லிக்கி ஷாபிஹி ஹன்பல்
பிரிவொன்றி. லுறவாஜிபாம்
பேசும்நா லும்ஹக்கு எழுபத்தி ரெண்டுமுழு
பிதுஅத்தாம் மஹ்மூதரே. (47)

ஈமான் கொண்ட காலத்தின் விபரம்.

யெப்பயீ மான்கொண்ட தென்றனைக் கேட்கிலோ
இன்பமீ தாக்குநாளில்
யேகனருள் ஹலரத்தி னிறையவரு வாரெலா
மெதிரினிற் றுனிறுத்தி
நட்புரிய நானுங்கள் நாயனல வோவென்று
நாதனெதிர் கேட்கவன்று
ஞானகுரு வேளங்கள் மெஞ்ஞான ரெப்பென்று
நத்தியுரை சொல்லிற்றதே
அப்பொழுது யானும்யீ மான்கொண்டே னென்றுசொல்
லமைதலீ மானென்றது
அதிகம் குறைத்தலுள தோவென்று கேட்டிடில்
அதிகமும் குறைவில்லையாம்
காப்புநே ரமல்கள்மிக செய்வதால் மூமீன்கள்
காமிலாம் அமல்குறைந்தால்
கழிவுபெற் றிடுமூமீன் நாக்கிசா வானெங்கள்
ஹாதியாம் மஹ்மூதரே. (48)

கனதியீ மானுடைய தலையதாம் தய்யிபுக்
கலிமாவ தன்கல்பது
கற்பனை குருஞேத லீமானி ருக்குமுடல்
காட்சிதிக் றுந்தொழுகையும்
நினைவிலீ மான்றனை வளர்த்துவது முதலுள்ளோர்
நேரஞு சகாத்தையீதல்
நிதியிலா ரென்றதை சதக்கா வழங்கிவர
நிருவாக மொன்றமில்லார்
தனதினிய வாயுதவி கையுதவி செய்வதுந்
தனிமையீ மான்றாஹது
தலையினி குலாசுள கலதலத ஞெளிவுதான்
கனசுற்ற மதுசினேகன்
அனையறிவு மதிலதர்க் குரியபெறு கட்டளைக
ளாசைறகு மத்தைவைத்தல்
அதாபைப் பயப்படுத லதுதவசு நோம்பாகும்
அறிவுதரும் மஹ்மூதரே. (49)

ஈமானி னுபத்துகள்.

நேர்வழியி னீமா னினுபத்து மேதென்று
நிலமீதி லறியவேணும்
நிலைபெறாத லீமானைச் சுட்டுக் கரித்திடும்
நெருப்பான பொய்பொறாமை
கூரிய விருள் ஹசது கோபமப் படியதாங்
குறைபகை முனபிக்கது
குருடரின் றன்மைபோ லுள்ளொன்று புறமொன்று
குபிரைவிட கொடியதாகும்
ஈரிலா னவர்களை முகத்திச்சை யோரென்று
யேழிலுங் கீழான தின்
எரிநரகி லுற்றதீ யதாமிதைச் செய்வதென்
றேகன்மறை கூறலாலே
பேர்பெருமை யீமானை வளரவொட் டாமலப்
பிணியாற் றிரங்கிநிற்கும்
பின்னுமது வேர்ப்பூச்சி போலே கெடுத்திடும்
பிணிதீர்க்கு மஹ்மூதரே. (50)

முனபிக்கடையாளம்.

மூமீன் றனக்குமா றாகிய முனபிக்கின்
கட்குமூன் றடையாளமாம்
முன்தனிற் பேசினால் பொய்சொல்வ னொருவர்க்கு
மொழியவார்த் தைப்பாடதை
ஓம்னு மாறுவா னமானமது வைக்கிலோ
உடனுமோ சஞ்செய்குவன்
ஊன்றுதல் முனபிக்கின் றீதிய விருள்கல்பி
னுறுபுள்ளி பதிவாகிடும்
யீமான் றனக்கிடரி னமல்களை செய்துவரி
விழிவுறுங் கருமை நிறைவாம்
இகமதில் செய்யமல்க ளகமதிற் கரைபற்
றிருக்குமவ் வாறதற்கு
ஆமான முத்திரை யளுத்தமா யுற்றிடு
மதற்காக வோதுமறையில்
ஆதிதிரு வசனத்தை யருளின னறியுமென்
றன்புதரு மஹ்மூதரே. (51)

குபிருன சொற்களைப் பேணுதல்.

சொல்லினுற் செயலினுல் நினைவினு லாமதைச்
சொல்லொணுக் குபுறு வார்த்தை
சோதியீ மானெனும் விருக்ஷத்தை யடியோடு
சுளுவாய்ப் பிடுங்கிடுங்காண்
வெல்லரிது கொடியகு ருவளிக் காற்றுக்கு
விதமொரு சமானமென்ன
விலகவரு முறுத்தத்தான கருமமிற் கூரிவரு
விரிவுகா னூற்றிசில்வான்
மெல்லமூ மீனெந்த நேரமின் னதைவிட்டு
மிகுபேணி வர கடமையாம்
மேலோ னிடங்கெஞ்சி சாளயத் தோடுமிக்
கருமமதை விட்டு காக்க
நல்லறிவு யீமானை கல்பில் தரிக்கவருள்
நாயன்முன் கையேந்தியே
நற்சிந்தை யோடுந் துஆவினைக் கேட்குமுறை
நமது கடன் மஹ்மூதரே. (52)

மூமீன்கள் அடையாளம்.

குணசாலி ஹென்னுமூ மீன்களுக் கடையாளங்
குருஆனில் வந்த முறையே
குலவுநே றுண்மையும் நெஞ்சினில் பயமதுங்
குதாமேல் பறஞ்சாட்டலும்
மணமதுர முந்தொழுகை யொடுஜக்காத் சதக்காவீந்து
மனம் நாவை யும்பேணிடில்
பருலுநோம் பும்வைத்தல் வேதமுள ஷற்முன
மற்றும் துடர்ச்சி நீங்கல்
கனஹதீ திற்சிலதை யடையாள மென்றவர்
கலாவைப் பொருந்தி வருதல்
கன்மப் பலாய்சபூர் செய்துமிகு மத்தினுக்
கனஷுக்று செய்து வருதல்
புணருவிசு வாசமொடு வாக்குநிறை வேற்றலும்
புந்தியில் நம்புதலுமே
பூபதியி னுக்கமா வாசையி லழைதவம்
புரிபுகழு மஹ்மூதரே. (53)

வரிசை கிரமப்படி நிர்ணயங்கொள்ளவேண்டிய விபரம்

கதியடைய மூமீன்கள் நிர்ணயங் கொண்டுவருங்
கருமத்தி லுள்ள தாகும்
கடையுக படைப்பளவுங் கல்குகளி லேற்றமுறுங்
ஹக்கருள் முகம்மதிறசூல்
பதியிநற் றேழரிபு ருஹிம்நபி மூசா
பரஞ்சோதி றாஹு நபியும்
படுவெள்ள முடையநபி நூஹினுக் குப்பிறகு
பண்ணவரெ சூலனைத் தும்
முதல்வநபி யொடுமிக்க ஜிபுறியீல் மீக்காயில்
போலமுக் காலமான
முன்னிலை யபூபக்க ருமறிபுனு கத்தாபு
முதன்மையுது மானுமலியும்
அதிகபல னஷரத்து முபஷ்ஷரு வில்லுறு
வறுவைஷச் சுமந்தவானோர்
அதனையுஞ் சூழ்வர்போ லெல்லிராம் புகழ்மிக்க
ஆக்கமருள் மஹ்மூதரே. (54)

அன்பிமாம் ஹசனுசனும் ஹம்ஜாவோ டப்பாசும்
பெருமான் முஹாஜிறீனும்
பிசகிலா மதிஞவி னன்சாரி மார்கள்பின்
பேணுமசு ஹாபியாவுங்
தம்பிறுன் தாபிகூன் தாபிஅத் தாபிகூன்
தருவிநிகர் காலிமாம்கள்
தவறிலா னெங்கள்முஜ் தஹிதூன்க ளென்றபேர்
தனியவன் குத்புமார்கள்
அம்புவியி லுள்ளவொலி மார்கள்பின் சாலிஹீன்
அதிகதிற மானசொல்லில்
அரிவைகளி லேற்றமா மறியமொடு பாத்திமா
ஆயிஷா கதீஜாவை நல்
நம்புதாய் மாரென்ன நபிநாய கந்தேவி
நம்பிருட்டிகள் யாவரும்
நாளுமிவ் விதமனதில் நிர்ணயங் கொண்டுவர
நலமருளும் மஹ்மூதரே. (55)

ஊரில் இமாமை நிறுத்துவதும், முஸ்லீமை தொழுவித்து அடக்குவதும், நல்லவன் பொல்லாதவன் பின் தொழுவதும்.

ஒவ்வொருவ றாரினும் ஹாக்முகளின் விதியறிந்
துயர்ஹத்து நிலைநிறுத்தி
பவ்வமற கண்டிப்பு செய்யுமொரு காலியை
வுறவின்முறை யோர்கள்கூடி
செவ்வையி னிறுதிவைத் தவரேவல் விலகலைத்
தெரியமுசு லீங்கள் கேட்டு
சீராய் நடந்துவர கடமையாகும் நமது
தேசமிற் கலிமாச் சொனேன்
யெவ்வகைப் போலொத்த பாவியா ஞகிலவ
னிப்புவியில் மரணமானல்
யெல்லவர்க ளுங்கூடி தொழுவித் தடக்குவது
யேவும்பரு லுல்கிபாயா
நவ்வுறைசெய் நல்லவன் பொல்லாதோ னெவரையும்
நடுமுன் னிமாமதாக்கி
நாமெலாம் பின்சென்று தொழுகலாம் பிது அத்தி
நராகு மஹ்மூதரே. (56)

மிஃருஜின் பயான்.

ஹஜரத்து நபியிரவில் மிகுருஜு போய்ஹக்கை
கண்டுவந் தனர்கள்மெய்யாம்
ஹஜ்ஜரிய மக்கநகர் தொட்டு பைத்துல்மு
கத்திசு பள்ளிவரையில்
நிஜமா முளிப்பினு மிலங்கும் சரீரத்தி
னிறைநுகு ரெண்டினுடனும்
நிமைநேர மிற்சென்று வந்ததுங் குருஆனி
னேர்ஹதீ தின்படிக்கும்
இஜுமாகு கொண்டுசொல் தரிபட் டிருக்குமதை
இல்லையென் றோன்காபரும்
யேகனின் பைத்துல்மு கத்திசிலி ருந்தேழு
வான்கடந் தருஷு வரையில்
விஜயமாய் சென்றுவந் ததுவுமஷு ஹூருன
விரிஹதீ தில்வந்ததாம்
விருதா வெனச்சொல பெரும்பாவி றத்திஹோர்
வீண்காபர் மஹ்மூதரே. (57)

ஒலிமார்களின் கராமாத்துகளின் பயான்.

நாயனை துன்யாவில் காண முடியாது, கியாமத்தில் கண்கொண்டு காண்பது நிஜம்.

ஒலிமார்க ளனைவர்க்கு முலகமிற் காரணம்
உண்டுமென் றுண்மைகொள்வோம்
உதகமே லடிவைத் தழுந்தாம லேகவும்
உயருமா காசமீதில்
உலவிப் பரக்கவுந் தேவையுறு சமையத்தி
லொஜீபனமும் நீராடையும்
உபயமெய் கற்பனைக ளிதுபோல் கருமத்தை
யுண்மையென் றிஜ்மாஹதாம்
வலிமைநபி நாயனையு மிகுறூஜி னிற்கண்டு
வந்ததே புவியில் மற்றோர்
வல்லவனை யுங்காண முடியாது வெங்கினு
மறுமைநா ளாகிறத்தில்
நிலவுபதி ஞனும்போற் றீதாரை மூமின்க
ணிறைசொர்க்க மிற்காணுவார்.
நிருமத் தடங்கனு மறந்திடுவ ரப்போது
நெறியருளு மஹ்மூதரே. (58)

மவுத்தினர்க்கு நன்மை சேருமென்பதும் பல சேதியும்.

மவுத்தடையு மானிடர்கள் பேரால் ஹயாத்தவர்கள்
மாசதக் காபுரிவதும்
வாயினு லோதியும் கேட்குந் துஆவினும்
வந்தபிர யோஜனங்கள்
இவையினு லிருவர்க் குறும்பலன் சேருமென்
றிதயத்தி லுண்மை கொள்வோம்
யேகன் பரத்திலின் றுசையை முறித்துமன
மச்சமில் லாதுகுபிறும்
அவலமின் ஸிஹ்ருவகை பில்லியுங் கண்திஷ்டி
யதற்செய்யும் நாயன் விடையால்
ஆகிலா பாவிகெத் தினவையுள் ளோனென்று
மவனைவிட் டேவல்விலகல்
தவசலாய் வீழ்ந்துபோ கும்பதவி சேர்ந்திடான்
சகலவொலி நபிமார்களின்
தறஜாவை யெத்தமாட் டாரென்றக் கிதாக்கள்
சரதமா மஹ்மூதரே. (59)

பெரும் பாவத்தின் பயான்.

பெரியபா வங்களி னிறம்பும் பெரும்பாவம்
பெரியகுபி ருயிருக்கும்
பெரியநா யன்றஜா ஷிறுக்கென் னு மிணைவைத்தல்
பிரமாண மாய்ப்பொருக்கான்
அரும்பனை இணைவைத்த பாவமைத் தவிரமற்
றப்பெரும் பாவமெல்லாம்
அறியுமதி லெழுநூறு சிறியது பெரும்பவ
மனைத்துமிரை நாடினோர்க்கு
கிருபையொடு தாங்கிப் பொருத்திடுவ னிகூஷயங்
கிரமமில் லாக்காபிர்கள்
கிரிகையுட னன்மைபிர யோஜனஞ் செய்யாது
கிட்டுந்தவாபு மிலையால்
வருமதா புங்கடுமை லேசாக மாட்டாது
வன்மிசில பேஃரவிடவும்
வாட்டமாஞ் சிலபேர்க் கதாபுடைய கோரமாம்
வழியருளு மஹ்மூதரே. (60)

பல சேதிகள்.

மூமீன்க ளனைவருஞ் சுவர்க்கவா திகளென்று
முறைதெரிந் தறியவேணும்
முறுதாரு காபிறீ னரகவா திகளென
மூனிந்துறுதி சொல்லலாகும்
ஆமீன்க ளோதிவா முசுஹா பனைத்தாரை
யவமான முறை ஹறுமாம்
அலியாரு மாயிஷா நாயகியின் கிஸ்ஸாவை
யன்பா யுரைக்க நலவாம்
ஓமான அலியார்மு ஆவியா இருவர்க்கு
மோதுஞ்சிப் பீன் சண்டையும்
உண்மையுது மானிபுனு அப்பான் ஷஹீதா
மூவப்பான சங்கதியையும்
கோமான் குசைனவரெ ஜீதுக்கு மிடையினிற்
கூபாவில் கருபலாபோல்
கூட்டிக் குரைக்கா துரைப்பதா மென்ன
கூறுதுநல் மஹ்மூதரே. (61)

நபிநாயகத்துக்கு பின் கிலாபத்து பட்டம் பயான்.

முஸ்தபா நபியாண்ட பிறகாங் கிலாபத்து
முப்பதே வருடமாகும்
முதல்வரிசை யபூபக்க ராளுகை இரண்டேகால்
முதிறுமரு கத்தாபவர்
உத்தியொடு பத்தரைய தாமாண்ட தன்பிறகு
உதுமானதின் னூறையின்
னூரினி லாளுகை யீறாறு வருடமது
உயறலிப் புலிஎன்பவர்
கஸ்தியொன் றில்லாது நாலேமுக் கால்வருடம்
ஹசனவர்க ளாறுமாதம்
கணக்கிட கிலாபத்து மூன்றுபத் தாண்டுதாங்
கலனறவே சென்றபின்பு
சொஸ்தரா ஜாங்கமுடி பணியமுட னுண்டதாந்
தோன்றுமக்கா இதுவினில்
சுத்தமொடு பாரஉல மாக்களுஞ் சொல்லினர்
சுபமருளு மஹ்மூதரே. (62)

இஸ்லாத்தின் பயான்.

ஈடேற்ற மாக்குநம் தீனுடைய றுக்னுகளி
லிசுலா மிரண்டாவதாம்
யேவலை எடுப்பதொடு விலகலைத் தவிருவது
மிசுலாமி னின்பொருளது
ஆடாத தேகநபி யுரைபுனியல் யிசுலாம்
அலாகம்ஸி னின்ஷஹாதா
அன்லா யிலாஹா இல்லல்லா கூவ அன்ன
முகம்மதன் றசூலுல்லாஹி
பாராகு மைந்துகரு மத்தினை லிசுலாமை
பருலெனை வெடுத்தவாராம்
பண்புறு ஷஹாதத்தி ரண்டுகலி மாமொழிய
புவிமீதில் பருலதாகும்
நாடொறுங் கலிமா ஷஹாதத்தி னின்பொருள்
நயனமில் கண்டுசொல்வாம்
நம்மவர்கள் காணு துரைப்பதும் பொய்சாக்ஷி
நவிலுவார் மஹ்மூதரே. (63)

ஆனதா லாலமிற் கண்காணு மவுஜூ
தனைத்துமல் லாவினுடைய
அசுமா சிபாத்துவெளி யாகுந் தலங்களா
மவனன்றி வேறில்லையால்
ஞானயோ கத்தினல் நற்சுஹூ தூஞ்செய்து
நாம் ஷாஹிதுஞ் சொல்வதோ
நத்துமை னுல்யெக்கீன் ஹக்குல்எக் கீனில்வந்
தாலல்லோ நடவாதுகாண்
மோனமது உண்டாக வேணுமால் நபியுடைய
முறைசொல்லி னுஞ்செயலினு
முதலிற் றடர்ந்துயெல் லாஹாலி லவனளவில்
முன்னேக்கு முன்னேக்கலாய்
நானெனுமெ னிய்யத்தை யறபனு வாக்கலொடு
நாளுமப் படியலாது
நமதுசெய லேசிறிது உண்டாகி வருவதிலை
நன்றியருள் மஹ்மூதரே. (64)

எங்கினுமி லாலமிற் காண்பதென் பனவகை
இலாஹூடை யுஜூதருளினல்
இப்படியு மானதென அறியுமத் தாக்ஷிக
ளிருப்பதா லதுகொண்டவன்
தங்குமுண் டென்பது நமக்குறு துலாம்பரந்
தனியனைத் தோணுவதினல்
சமதுவைத் தெரியாத போதிலுங் காணல்போற்
றருமஷ்ஹூதின் சொல்லினைச்
சங்கைபெற கலிமாவிற் சொல்லலா மென்று நல்
ஷறகுமே ரிமாம்கள் சொன்னர்
சாக்ஷிநாம் சொல்லஅல் லாவுமல் லாதுவேற்
றனியவொரு நாயனிலையால்
துங்கநபி யவர்களல் லாவுடைய தூதரென
துவிசாக்ஷி யுஞ்சொல்கிறேன்
துதிநாய னைக்கல்பில் கண்டுதெரி சிக்கவருள்
துணைசெய்யு மஹ்மூதரே. (65)

கலிமாவிற்கு நாலு பாதையில் நாலு மருளு.

நாயனின் கலிமாவ தற்குநால் பாதையில்
நாலுமரு ளுக்களுண்டாம்
நாலுமொவ் வொன்றினை விடாதுஷீ அத்தெனது
நாதநபி சொல்லதாகும்
தாயமுட னுண்மையில் வணக்கமி னதர்க்குரித்
தானுமிலை யவனை யொழிய
தவநிலை திரீக்கத்து நபியினருள் செயலாகுஞ்
சகலசெய லியாவற்றையுங்
காயமாய்ச் செய்துமுடி வாக்குரவ னுருமிலை
ஹக்கனல் லாவையல்லால்
காக்ஷியின் ஹக்கீக்கத்து நபிமௌன ஹாலாகுங்
கருதிநா டப்படுகிறேன்
மாயமுடனுருமிலை யவனொருவ னல்லாது
மஹரிபா நபிசிர்றதாம்
வஸ்துவி னுஜூதுடையா னுருமிலை யல்லா ஹா
வல்லாது மஹ்மூதரே. (66)

கலிமாவிற்கு நாலு பறுலு.

இந்தநா லின்பொருளை யறிவுடைய குருவான
இல்மெனுங் காமிலைப்பார்
இனியகலி மாவிற்கு நாலுபறு லுண்டுஇது
பாத்து தாத்துல்லா ஹியின்
எந்தமிறை யுள்ளன்பைத் தரிபடச் செய்தல்இது
பாத்தின் சிபாத்தில்லா ஹி
இறையவன் வன்னிப்பை தறிபாடு செய்வது இது
பாத்துஅப் ஆலில்லா ஹி
சந்தத மவன்செயலை நிலையாக வைப்பதுஞ்
சதுவினது பருலாவது
சரதஇது பாத்துசிதுகுற்றகூ லவனுடைய
சருவரெகூலுரை மெய்யதாம்
வந்தநால் பறுலினு மொவ்வொன்று பத்தசலின்
வகைதெரிய எஹ்யாவினில்
வண்மைஹஸ் ஸாலியி மாமவர்கள் விரிவாய்
வழுத்தினர் மஹ்மூதரே. (67)

இசுலாத்துடைய பறுலுகள்.

நேசமிசு லாத்தின்பறு லந்தினி லிரண்டாகும்
நிலைபடவே தொழுது வருதல்
நெறியருளுஞ் சக்காத்து விதியினாற் பதிலொன்று
நிதியினெழு வர்க்கிவதாம்
மாசமொரு பனிரெண்டில் வருநோம்பு முப்பதினும்
வயரபம் ரெண்டைவிட்டு
மனதாசை யூண்தீன் ஜிமாகுதனை யும்விட்டு
வல்லவனி நோம்பு விதியாம்
காசுபண முள்ளபேர் கப்பலே றிச்சென்று
கரையில்ஜித் தாவிறங்கி
ஹக்கனருள் மக்கநக றுற்றுகஃகு பாவினிடம்
ஹஜ்ஜுசெய் பருலதஞ்சாம்
வாசமண முள்ளதல மதினாவி னிற்சென்று
வள்ளல்நபி பள்ளிதனிலே
மனதுருகி வந்தனை ஜியாரத்து செய்துவர
மன்றாடு மஹ்மூதரே. (68)

ஈமானும் இசுலாமும் ஒன்றென்பதும், ஈமானின் கொம்புகளின் விபரமும்.

இசுலாமும் யீமானும் வேறல்ல வோர்வடிவம்
யினமுதுகு வயிறு போலாம்
ஈமானி னெழுபதே சொச்சமாங் கொப்புக
ளிருக்குமுயர் கொப்பினுமம்
முதலாயி லாஹஇல் லல்லாகு வெனநன்
முகம்மது றசூலுல்லா ஹி
முந்தியுள கலிமாவ தாகுமீ மானதில்
மொய்தணிவு கொப்பானது
திசையின் றஸ்தாக்களின் பாதைவழி யெதிரினிற்
சிதறிக் கிடக்குகின்ற
சிறுமுள்ளு பெருமுள்ளு முறடுமண் ணுங்கட்டி
சேர்சகதி முதலாகிய
நிஜமாக நோவுசெய் வஸ்துகளை விட்டுமுன்
னேராம லப்புரமதை
நீக்கியே வைத்திடுத லிறசூலு மருளினார்
நேர்மைதரு மஹ்மூதரே. (69)

அல்லூறுத ஆலாவுக்கு வாஜிபான சிபத்துகள்.

அல்லாவின் வாஜிபு சிபாத்துகளு மெவர்மீதி
றியவிதி இருபதாகும்
அஃஅறிய் யாக்ளிட மவைநாலு விதமாகும்
அதிலொன்று நப்ஸானிய்யா
வெல்லுமது ஸல்பியா அஞ்செனச் சொல்வதாம்
விபரமேழும் மஆனி
விரிமகுன விய்யாவி னேழெனத் தெளிவதாம்
மேல்வாஜி பிருபதாகும்
சொல்லொணு முஸ்தஹீ லிருபதாம் ஜாயிஸுகள்
சுத்தனுக் குளதென்னிலுஞ்
சோரவில் லாததுஞ் சரியான தின்சூழ்
சிபாத்துக ளனேகமுண்டே
நல்லநபி கட்கெலாம் வாஜிபுகள் மூன்றுண்டு
நவில்முஸ்தஹீலு மூன்றும்
நடுவு ஜாயிஸுகளு மனேகமுண் டாமதை
நமக்கருளு மஹ்மூதரே. (70)

இசுலாத்துடைய வாஜிபுகளின் பயான்.

ஏவுமிஸ் லாத்திலேழ் வாஜிபுக ளென்பதை
இயம்புவாம் ஈதுல்பித்ரு
யென்றபெரு நாளிலோர் மரக்கால் தொலிகோதுமை
ஈவதெல் லார்க்கும்விதியாம்
நாவுபுகழ் குடற்வாய் ஜனத்தின ற் குணவுதுணி
நாமுதவ வாஜிபாகும்
நன்மைதரும் வித்துருத் தொழுகையைக் கொண்டுவரல்
நமதுமேல் வாஜிபாகும்
காவ்லுலூ ஹிய்யா வறுத்துக் கொடுக்குமுறை
ஹஜ்ஜுபெரு நாள்வாஜிபாம்
காதல்தாய் தந்தையர் தமக்குரிய கிதுமத்து
கனமக்கள் மேல்வாஜிபாம்
ஆவலுறு பெண்சாதி புருஷனுக் கடிபணித
லவளுக்கு வாஜிபாகும்
அவனிதனி லிசுலாத்தின் வாஜிபா மதிபேசும்
அதிதூதர் மஹ்மூதரே. (71)

இசுலாத்தின் ஹக்குகள்.

இசுலாமி னுக்குரிய ஹக்கதைச் சொல்குவா
மிருவர்சந் தித்தபோது
இடையில்திரை யுற்றாலும் நிரைசலாம் சொல்வதாம்
இனிதாய் விருந்துசெய்து
பசியாற வரவேணு மென்றழைக் கும்போது
பக்தியொடு போகவேணும்
பதியிவை ருபதேசம் நமதிடங் கேட்கிலோ
பயனையுப தேசிக்கவும்
இசியென்று தும்மினவ னல்ஹம்து லில்லா
யெனப்புகழ்ந் திட்டபோது
யெறஹமுக் கல்லா புறத்திசொல் கூறுவது
மிதுவாஜி பென்றதாகும்
நசலாளி யைக்கண்டு மெனவுதல் ஜனஸாவை
நட்பினொடு பின் செல்லுதல்
நானிலமி லிதுவாறு மிசுலாத்தின் ஹக்குகள்
நமக்கருளு மஹ்மூதரே. (72)

இசுலாத்தின் சுன்னத்துகள்.

இசுலாத்தி னடைபடியி லுள்ளசுன் னத்தாகு
மெவர்செய் யமல்களெல்லாம்
ஏகனுக் குச்சொந்த மென்றறிய் யத்தோடு
மிவைகலப் பறவேசெய்தல்
உசிதவாய் கல்பிலென் னுளுந்திக்கிர் செய்ய
லுறைபிழையை பொருதிகேழ்க்கல்
ஒருவனைக் கெஞ்சியருள் கேழ்க்குந் துஆச்செய்தல்
உரியசல வாத்துரைத்தல்
விசன மாஷூராவி நாளினைக் கொண்டாடல்
வெள்ளியொ டிரண்டுபெருநாள்
விதியென்ற ஹஜ்ஜினர பாவிநாள் மூழ்குதல்
மிடியண்டை போட்ட துணியை
அசடுப் பரும்புடவை மோட்டாவை யணைதலும்
அஹதுக்கு தாகூதிசெய்தல்
அறியசில நேரமில் வெறுமைகா லால்நடந்
தடிவைத்தல் மஹ்மூதரே. (73)

சினேகமா முசிலீங்கள் யாவுஞ் சகோதரரை
செறுப்பினில் நடக்கவைத்தல்
சிலவுக் கிலாதமிடி யர்க்குதன் பாலுளதை
சேர்த்துணு வைக்கொடுத்தல்
வினையென்ற பீசபி லொடுசண்டை செய்வதும்
விசுவாசமுடைய முசுலீம்
விடுதியின் கபுர்களை ஜியாரத்து செய்வதும்
விருந்துகள் கொடுத்து வருதல்
தனதுநே சங்கண்டு மகிழ்வமென வந்தவரை
சங்கைமிகவாச் செய்தலுந்
தன்மையுறு மவர்கள்பின் புரமதிற் சாய்மானை
தலையணிகள் சார்ந்துபோடல்
இல்மிலான் பணிவிடையை கொண்டுநிலை நிற்குதல்
இவையிநிகர் பறுலு வாஜிப்
பிதுகளைப் பேணல்போல் சுன்னத்தைப் பேணவிசு
லாம்நிறையு மஹ்மூதரே. (74)

தௌஹீதின் பயான்.

தானொருவ னேர்வழித் தீனுடைய றுக்னுகளில்
தௌஹீது மூன்றுவதாம்
தௌஹீதி னுடையபொருள் தனியொருவ னென்பதைத்
தன்சிந்தை யிற்றரித்தல்
தானமுறு தௌஹீதி னுவகை நாயனை
தௌஹீதி லுலூஹிய்யாவாம்
தனதுசெய லிலையேக நின்செயலை தாபிதந்
தௌஹீதபுஆலி ரெண்டாம்.
மானம் தௌஹீதுஸ் ஸிபாத்து மூன்றுகும்
வன்னிப் பெவர்க்குமிலையால்
மன்னனுக் குடையதென சொந்தமென் றுக்கல்லு
லானதௌ ஹீதுதாத்து
கோனவனி னுள்ளமையை வொன்றுப் படுத்துவது
குவலயங் கல்கு நிழல்போல்
குருபானு ஜாதினை ஹகீக்கிய்யு ஜாதெனக்
குறிப்பறிதல் மஹ்மூதரே. (75)

மஹ்ரிபாவின் பயான்.

மார்க்கமாந் தீனுடைய றுக்னுகளி லேஏற்ற
மஹ்ரிபாகான் காவதாம்
மன்னுமுதி ரண்டுவகை முந்தினது தன்ஜீஹு
வல்லதாத் துடைய புரமால்
பார்க்கயினி யவனுக்கு மட்டளவு திட்டமாம்
பத்தியுட னறியவேணும்
பகருவதி ரண்டான மஹ்ரிபத் தஷ்பீஹு
பண்புதாத் துடையபுரமால்
தீர்க்கமா தன்ஜீஹி லில்லையென் பதுவெலாந்
திகழ்ஜல்லி யாத்தின் வழியால்
திருபொருட் குண்டாயி னுஞ்சூக்ஷ மாமென்று
சிந்தையினி லறியநன்றும்
ஏற்கைதன் ஜீஹது நிறப்பமில் லாதுவென
யிருவில்தஷ் பீஹாவது
இடரான குபிரென்று மோசமுள தென்றறிதல்
யீடேற்று மஹ்மூதரே. (76)

ஆகையால் மகுரிபா தன்ஜீஹு தஷிபீஹும்
ஆரிபீன் சிலர்சொல்லிறு
லவையிரண் டுங்கூட்டி சேகரித் துக்கொள்ளு
மறிவுதன் ஜீஹுமஹுலாம்
யேகவஸ் தாங்கலப் பற்றதன் ஜீகுமகு
லென்றறிதல் நேரதாகும்
எம்பிரா நபியவுலி யாசாலி ஹீன்களெல்
லாருமிதை யுண்மைசெய்யும்
மோகமெஞ் ஞானவழி யென்பதினி விபரமது
மொய்கல்கை வெளியாக்குமுன்
முதலவன் றாய்மையா மெவ்வண்ண முந்தியோ
முற்றுமிப் போதிருக்குஞ்
சாய்கையற வெளிவருந் துறைமலு ஹறுக்கித்த
ஜல்லிகொண் டேயாகிறுன்
சகலதுவி லொட்டியினும் ஒட்டாம லிணையற்ற
தனியொருவன் மஹ்மூதரே. (77)

உஜூதுடைய மருத்தபாக்கள்.

அறியவுமு டன்பிறந் தானவரே யல்லாவை
அறியும்வகை யொருவனுக்கே
அடைவுநிரை மதியா உஜூதுள மருத்தபா
அத்தனையு மறிவதல்லால்
நிறையுமதி லேழாகும் உண்மையஹ தியத்து
உற்றநிலை வஹதத்தெனல்
உர்ப்பன மருத்தபா வாஹீதிய் யத்தாகும்
உரியமூன் றும்கதீமாம்
நிறையுயிர்க ளுண்டான ஆலமரு வாஹான
நிலைறாப ஆலமீதால்
நிருவிவரு மாறு மருத்தபா வரிசை முதல்
நிலவரையில் ஆலமஜீசாம்
புரந்துலவு மேழா மருத்தபா காமிலீன்
புலனையறு ஆலமின்சான்
பூரணமி நடுவஞ்சை யின்ஸான் ஷூஹூதினால்
புரியவருள் மஹ்மூதரே. (78)

தக்குவாவின் பயான்.

தக்குவா வினின்பொருளி லாஹைப் பயந்துவர
தானவன் சிபத்தானதாம்
நன்புத்தி மானஸைத வேண்டுமாய் நிற்பதும்
நம்பீதில் வாஜிபாகும்
இக்கிலா மூன்றுவகை இடையொன்று தாள்வொன்று
இன்பமே லானதொன்றே
மிக்கதாள் வென்கிறது பாவத்தை விடுவதும்
மிரண்டான விதமானதோ
தொக்கிலாக் கருணையை மரப்பதை கார்ப்பதுந்
துதிமேலதான தக்குவா
சுத்தமுயி ருரிபீன் காமிலீ னவர்களுஞ்
சுயநன்மை வருபாதையிற்
பக்கநம் மிமாமெனப் பகர்சொல்லைப் பேணுவது
பலதீமைவந்த துரையில்
ஹக்கனைக் கார்ப்பதாம் மூன்றில்தாழ் வாகிலும்
படியுதவு மஹ்மூதரே. (79)

இல்மின் பயான்.

மேலான இல்மெனும் மார்க்கவகை நன்றாய்
விளங்கியறி வாகும்நபியின்
மேல்நபி ஹதீதினிய இல்மைப் படித்தறிதல்
வெகுமோடி வந்த முசுலிம்
சூலாகும் ஆண்பெண் ணடங்கலின் மேல்விதிய
தாகுமென வருவதாலே
சுத்தமுள இல்மைப் படித்தறிதல் நம்மீது
சுருதிமறை வந்த விதியாம்
துன்யாவி லோர்மனித னுக்கில்பா லிஹாஉளோ
னகத்தியம் மானதுளதில்
பாலினிய பிக்ஹிலே இருக்குமென் றறிவுகள்
பலிதமாப் பறைதல் வேண்டும்
ஏலுதனில் இல்மன்றி யமலினைச் செய்வது
லவணமில்லாச் சோறுபோல்
இல்முஅடி மூடாகும் இல்முமேன் பணரென்
றெவர்க்கும் விதி மஹ்மூதரே. (80)

பிள்ளைகளுக்கு பிதா செய்யவேண்டிய ஹக்குகள்.

தனதுடைய மைந்தர்க்கு செய்யவேண்டிய ஹக்கு
தன்விதியின் பேரிலுளதால்
தன்பிள்ளை பேசத் திருணிபின் கலிமாவை
சலியா துரைத்துவைத்தல்
அனைவருக் கழகாக பேர்வைக்க வேண்டுவதி
லன்றுமுத லேழுநாளிற்
கப்துல்லா அஹமது முஹம்மதென் றுருகுவதும்
பெண்களுக் குரியநாமம்
மாதுரிய அமத்துல்லா பாத்திமா ஜெயினபாம்
வலுகுரா ஞேதிவைத்தல்
வரிசையாந் தீனுடைய இல்மைப் பயிற்றுதலும்
வந்தநா ளேழுமுதலாய்
தனிமைதச வயதுக்குள் சுன்னத்துச் செய்வதுந்
தனதாறி லதபுறுத்தல்
தவசுநல் லோர்களொடு சேர்த்துப் பத்தில்தொழுக
தாக்கருளு மஹ்மூதரே. (81)

இபுறாஹிம் நபீயை 10 கருமத்தைக்கொண்டு சோதித்த விபரம்.

தனியவன் ஹேருமுரிபு றுஹிம்நபி தலையினுஞ்
சடமிருந் தெளிதாக்கெனத்
தசமான கருமத்தைக் கொண்டு சோதித்த
தவத்திலுறு கருமமதிலே
முன்வினை யகன்றுவிடு மதிலொன்று வாய்தன்னை
முசிதமாய் கொப்பளிக்க
மூக்கெனும் நாசிக்குத் தண்ணீர் செலுத்துவது
மூன்றாகு மிசுவாக்கிடல்
இனிமைதரும் நாலாகும் மீசைமயிர் வெட்டுவது
இதிலைந்து தலைசிறைத்தல்
இனியாறு நகமறுத் திடுதலொடு இருகைக்
கமுக்கட்டு மயிரெடுத்தல்
கனதிஎட் டாங்கோச மயிர்முடி இறக்கலுங்
கத்னவு மொன்பதென்றே
கதையொருப திஸ்திஞ்சா செய்யல் சுன்னத்தாம்
கலீல் மார்க்கம் மஹ்மூதரே. (82)

தொழுகையின் வரிசையின் பயான்.

தொழுகையின் வரிசையைச் சுருதிநபி மொழியினுஞ்
சுஹபுமுன் மறைநபிகளுந்
தொகுதியசு ஹாபிகளி மாம்களொலி மார்களுஞ்
சொல்லிவரு மிகுதமுண்டே
யெழுதாது கல்விதா னகமறை யோதுநபி
இனியசொல் லைந்துவக்தும்
இந்தஜமாம் ஆதொட்டு மறுஜமாம்ஆ வரையினும்
இடையில்வரு பாவமுக்கே
வழுவிலா தெண்டமா கிப்பெரும் பாவத்தின்
வழிதவிர்க்கும் போதெலாம்
வள்ளல்நபி யருளினு ரொருங்களி லொருத்தன்மனை
வாசல்முன் னோடும் நதியில்
கழிவுகா ளொன்றிர்க்கு ஐந்துதர மூழ்கினல்
கரைபோகு மேனியைப்போல்
கசடுபல தீவினையை நாயகன ழித்திட
ஹாதிதருளு மஹ்மூதரே. (83)

ஹஜ்ஜால் விதாக்கெனுங் கடசியா கபிநாதர்
　　ஹஜ்ஜாக்கு வந்தபோதே
கலைஞான வாயினற் றெழுதுவரு மூமீன்கள்
　　கத்தனரு ளவுலியாவாம்
நிச்சயம தாகஒரு வன்றனது நாயனின்
　　நிலைகட்டளைப் படிக்கே
நிதமைந்து தொழுகையைத் தொழுது ரமுலான்மாதம்
　　நிறையநோன் பும்பிடித்தே
மெச்சுபரு லானஜக் காத்துங் கொடுத்துநம்
　　மிறைவனைக் கொண்டுநிகருய்
வேறிணைகள் வையாமல் ஹக்கன்றி மூமீனை
　　வினைவதைகள் செய்யாமலுந்
துக்ஷணப் படையைவிட் டகலவோ டாமலுஞ்
　　சுத்தமுள பத்தினிகளைத்
துகள்படரு சொல்லாமல் வஞ்சனைகள் செய்யாமல்
　　துணையருளு மஹ்மூதரே. (84)

கெட்டமுதல் பலிசையாம் வட்டியுண் ணமலுங்
　　கிருபையெத் தீங்கள்சொந்தக்
கெடிசொத்தை யனியாய மாயாசி யாமலுங்
　　கிரகதாய் தந்தையோரைக்
கிட்டுமைகள் செய்துநோ விக்காது நேறுங்கள்
　　கிபுலாவின் கஃபாத்தனை
கேவலமாய் சங்கைகே டாக்காம லிவைகளைக்
　　கிரமமாய்க் கொண்டுவந்தால்
முட்டுகளி லாதுநா விர்க்கலிமா சொல்வதொடு
　　மூமீன் மவுத்தாகினல்
மோக்ஷமுறு மறுமையிற் றங்கத்தினல் செய்த
　　முன்வாயிலுடைய மேலாம்
அவ்ஷடசொர்க் கத்தினடு மாளிகை இருக்குமிரு
　　வழகா முஹம்மதர்க்கே
அருகே திருக்கற்றி ருப்பனென் றருளின
　　ரூதியருள் மஹ்மூதரே. (85)

தொழுகையை விட்டவர்கள் வேதினையின் பயான்.

தொழுகைவரும் வக்தைவிட் டேபின்பு தொழுகிறவர்
சுடுவயிலு வோடைதனிலே
துய்யோ னதாபுசெய் வானந்த வோடையது
துற்கதி ஜஹன்ன நரகில்
மழுவுமோ ரோடையம் மீதில்துன் யாவிலுள
மலைகளைப் போடுவதினுல்
மன்னுவத கோரத்தில் சாம்பருய் நீறிவிடும்
மனுடர்க டொழுகைதனினும்
முழுதுமற் றமல்களொடு முகஇச்சை யுடையோர்க்கு
முன்சொன்ன வோடையாகும்
மொத்தக் கிடாரங்கள் மண்வெட்டி பீங்கானு
முனையூசி கூந்தாலிபோல்
இழிவிலா சொந்தமென் றிரவல் கொடுக்குமதை
இகமதில் விலக்குவோர்க்கு
இம்மரையில் வயிலென்னு மோடையென் றருளிஞ
னெம்பிறுன் மஹ்மூதரே. (86)

தொழுகையின் றக்கிதை யறப்பழுதி லாக்கிஞேர்
துன்யா சுகங்களெல்லாஞ்
சொந்தவை ஹலாலென்று தொல்வினை ஹறுமென்று
துங்கவறி யாதுபோல
சுழியின் சரீரமின் பத்தினிற் பின்சென்று
துடர்ந்தார்களே யவர்களுந்
தும்பநவ் வோடையினை மேலைக் கெதிர்ப்படுவர்
சுத்தமரை வந்தபொருளாம்
கழறுமவ் வகழிதனை விட்டந்த வோடையும்
காவல் தேடிய வோடையாங்
கள்ளுக் குடித்தவன் கெடுஜஞச் செய்தவன்
கரைவட்டி முதல் தின்றவன்
பழிதரும் பொய்சாக்ஷி சொன்னவன் தாய்தந்தை
பலஞேவு செய்தபேரும்
பலநாளி னுந்தொழுகை விடுபவரை யோடையில்
பாழ்செய்தல் மஹ்மூதரே. (87)

தொழுகையின் ஹுக்முகள்.

இனிவருந் தொழுகைநம் மீதுபரு லென்பதற்
கிசையும் ஷறுத்து மூன்றும்
இசுலாமும் ஆகிலும் பாலிஹா னவர்கள்மே
லிறுதிவரை பருலுஜ்ஜனும்
பனிஆதம் மக்கள்மேல் விதிபருல தல்லவென
பணிகையல் லத்தட்டினேன்
பாரினில் காபருஞ் சோம்பலாய் விட்டவன்
பாவியும் பாவிக்காவான்
நிலைவுடன் தொழுகும்வரை சிறைச்சாலை வைப்பதும்
ரெத்தம்வழி கிறவரைக்கும்
நிஜமா யடிக்கவும் ஷாபியீ மதுஹபில்
நிறையஒரு தொழுகைவிட்டால்
மனுநீதி ஹத்தாக கொல்லவும் மாலிக்கி
மதுஹபில் ஹம்பல்தனிலும்
மார்க்கமிது போலாகும் பிக்ஹில் மேல் வருவதால்
மறைநீதி மஹ்மூதரே. (88)

ஜமாஅத்தின் பயான்.

இமாமொடு ஜமாஅத்து டன்கூடி தொழுகைஇரு
பத்தேழு வரிசைமேலாம்
யெவனொருவ நாள்நாற்ப தில்இமா மத்துட
னிடையிலா முன்தக்பீறினில்
சமானமிற் சேர்ந்துதொழு வானுகி லவனுக்கு
தணலுள்ள நரகம்விட்டு
சருவுதல முனபிக்கீன் தன்மையினை விட்டுரிமை
சலுகைபெற் றேஇரண்டு
தமாலமென் பட்டோலை யெழுதி யச்சிடுவதென
ஜெகதநபியின் ஹதீதாம்
தகுதியாண் பிள்ளைகட் கனமான சுன்னத்து
தனிப்பெலச் சொல்வாஜிபாம்
சுமாரென்னு மோர்தடவை மிடையன்றி விடுபவன்
தூகள்செயும் பாவியாவான்
சோதிநபி மார்களுக் கரசா முகம்மதிற
சூலெங்கண் மஹ்மூதரே. (89)

ஜூம்ஆவின் வரிசையின் பயான்.

ஜூம்ஆவு மென்பது பக்கீர்கட்கு ஹஜ்ஜாகும்
சுத்தஐ வேஜியன்றி
தோன்றுமிஸ் கீன்கட்கு பெருநாளு மாகுமென
தூங்கநபி யின் ஹதீத்
நம்ஆல நபியருளும் பொழுதுதய நாட்களில்
நன்றுபகல் ஜூம்ஆவிநாள்
நாடியவ னுதமுவை யதிலே படைத்தநாள்
நர்ப்புவி இரக்கும் நாளே
ஐம்ஆகி இருவர் தௌபாகபூ லானநாள்
தலைநபி யுபாத்தினுளே
சருவமுமழிந்ததில் கியாமமுடி வாகுநாள்
சங்கமனு ஜின்தவிரவே
ஆம்ஆக ஜெந்துகள் கியாமமுடி வன்றுவென
அச்சமுடன் வழிபார்க்குநாள்
அவையிலொரு ஸாஅத்து நேரிடிற் கேள்கஇறை
யருள்புரிவன் மஹ்மூதரே. (90)

யேற்றமுறும் நாள்களில் ஜூம்ஆவி னோர்நா
ளிரண்டுபெரு நாளைவிடவும்
இனிமைதரும் வளமைநா ளவையிலுங் காணயெஜ
மானநாள் யாவனொருவன்
பேய்த்தனம் பொடுபோக்காய் மூன்றுஜம் ஆதொழுகை
பிசகிவிடு வானுகிலோ
பிறளரிது கல்புனிற் முனுபிக் கீனென்றே
பிலமான முத்திரையுறும்
வேறில்லை இஜுமாகு பறுலுஜ னுகுமதை
விடஹலா லென்றுகண்டால்
விறுதாவெ னுங்காபி ருகிவிடு வானதனை
விடுமவன் கிரிகையெல்லாம்
போற்றிவர பொலிவில்லை ஹஜ்ஜில்லை நோம்பில்லை
புரியுஞ்சதக் காவுமில்லை
பூரண வணக்கமதை யொப்பவுங் கூடாது
புனிதமாம் மஹ்மூதரே. (91)

பரக்கத்துண்டாகும் பயான்.

பாரினிற் பொலிவுதரும் வகைபரக் கத்துபற்
பலவிதமாய் நேர்வதுண்டு
பதியில்வாழ் மனையையும் முன்னிலும் பின்சுற்று
பக்கங்கள் யாவற்றையும்
வாறுகோ லால்கூட்டி சுத்தப் படுத்திவரும்
வளமைதுப் பரவானது
வான்பதவி யீமானி லுள்ளதா மவையினல்
வந்திடுஞ் சீமான் தனம்
மாரணமி லான்முஹப் பத்தையுண் டாக்குமென
வள்ள லுரை வந்ததாலே
மனையிற் புளங்கிடும் பாசனை தூயதாய்
வைத்துநட மாடவேண்டுஞ்
சேருமவை சுத்தங்க ளில்லாத செய்கையாற்
செல்வமது மாறிடுங்காண்
செய்யிதி றசூல்நபி முகம்மது மொழிந்தபடி
ஜெகதகுரு மஹ்மூதரே. (92)

நயமுகமு மதிகமாய்ச் சந்தோஷம் வைப்பதும்
நட்புமண மானபேச்சும்
நாயனைப் பணிவதற் காகஸஹர் நேரத்தில்
நன் னிமை திறந்து நிற்கல்
ஜெயமுடைய பஜிர்தொழுகை பின்பள்ளி வாயலிற்
சேவித் திருந்துவருதல்
சீறலம் நஷ்றகு வாக்கிஆ சூறு
தெரிந்துசல வாத்துரைத்தல்
பயனுடன் தொழுகையில் பருலையுள் ளச்சமாய்
பலனைநிறை வாய்ப்பேணவும்
பாக்கியம் பெருகிவரு கிறதற்கு பேர்பெரிய
பரிவுகா ரணமதாகும்
இயலிருள் காலையில் கண்ணுறங் கலைவிட்
டெழும்பிஎன் றுங்தொழுகுதல்
இகபர மிரண்டிலும் யீடேற்ற மெய்யென்
றெனக்கருளு மஹ்மூதரே. (93)

மிடிமையுண்டாகும் வகை விபரம்.

மிடிமைகளை யுறவாக வைக்கும்வகை மனுடர்க்கு
விரிவுடன் சொல்லி வருவாம்
மெய்யிடையில் கலையன்றி நிறுவாணி நித்திரையும்
மிதிமுழந் தாளுக்குமேல்
உடைகளை யுயர்த்தியிரு கண்ணுறக் கஞ்செய்த
லுறியானு சிறுநீர்விடல்
உடல்சுத்த மன்றியே ஜானுபாளி யுண்ணலும்
யுதிர்வதன் போஜனத்தை
பொடுபோக்கா லொடுவிடுதல் வெள்ளீ ருள்ளியை
பொரிநெருப்பிற் சுடுவதும்
புகுமனையி லிறைவையிற் குப்பையைக் கூட்டலும்
புக்கில் கூளங் குவித்தல்
அடிதொட்டு தாய்தந்தை செய்குமார் முன்னிலையி
லதபன்றி யேநடக்கல்
அவர்களின் பெயர்சொல்லி கூப்பிடுதல் வறுமைக
ளகற்றியருள் மஹ்மூதரே. (94)

சரசரப் பென்றதோர் வஸ்துவில் வாயினுள்
சதையினிற் பற்குத்தலுஞ்
சவதிமண் சேர்த்துதல் கைதனை கழுவுதற்
சமதைவாயற் படிதனில்
விருதா இருப்பதும் நிலையினிற் சாய்வதும்
மெய்யினி லுடுத்து முடையை
மெனவியொரு வர்க்கொருவர் மாற்றீறலாய் மூழ்கலும்
மேனியிலு மாடைதன்னை
தரித்திடையி ருக்கையிற் தைத்தலுந் தீபமைத்
தன்வாயி னூலமத்தல்
தானுடுத் தும்புடவை யால்முகந் தடவலுஞ்
சளிமூக்கினிற் சிந்தலும்
பொருந்திட மிடுப்பிலுள புடவையை சொர்ப்பமாய்
பூசனை தலைக்குவைத்தே
புரளும் நித்திரை செய்த லார்க்குமிவை வறுமையாம்
புனிதமருள் மஹ்மூதரே. (95)

வீடுதனில் வைக்குஞ் சிலம்பிநூலாம் படையை
விடிவுபண் ணுமல்விடலும்
விதியினிலே தொழுகையை பழுதுவரப் பொடுபோக்கு
மேலவன் பள்ளிதன்னில்
பாடம்வரு காலையில் பஜிற்றொழு திருக்காமல்
பதறியே சென்றேகுதல்
பக்ஷமுட னுதயமில் கடைவீதி செல்லல்பக்
கீரையணி யாயமுற்றல்
நாடோறும் பேணினை கொல்லாமல் விடுவதும்
நம்பாத்தி ரங்கள் தன்னை
ஞாயமா மறையாமல் வெளிதெரிய வைப்பதும்
நடுமுடிச்சான கலமால்
பாடல்களை எழுதலும் பல்லுடைச் சீப்பினால்
பத்தியே மயிர் சீவலும்
பார்தனி லிவைகளால் மிடிமைவரும் நீக்கியே
பதவியருள் மஹ்மூதரே. (96)

மறதியுண்டாக்கும் வகை.

தாமத மெனப்புகலு மறதியுள செயலினைச்
சரிவரச் சொல்லிவருவாம்
சகலரிஸ் திஞ்சாவை சுத்தமிடு தானமதில்
சமமுலு செய்துவருதல்
காமனுகர் ஜுனுபாளி ககனமே நோக்குதல்
கால்சட்டை சுருவந்தினை
கண்தலை கீழ்வைத்து றங்கலு மூமீன்கள்
கபுருஸ்தலத்தில் முறுவல்
சேமுற்ற மனிதருட னதிகவுர வாடலு
சீலையால் வீடுகூட்டல்
திருமுகமை இருகரவை முந்தியால் வருடலுந்
தேவர்வரு பள்ளியுள்ளே
தூய்மையுடை யுதருதல் இடதுகால் புகுதமால்
தூம்பியுள் வைத்துசெல்லல்
துணைபடியில் வலதுகால் வெளிவைத்து வாரதுஞ்
சுகமருளு மஹ்மூதரே. (97)

சிகரிவாய் வைத்ததை தின்னலும் பேணினைச்
செவ்வைகொல் லாதுபோடல்
சேர்கிடையி நடுவினிற் சென்றுபிரி வாக்கலுஞ்
செல்லாத நிலைதண்ணியில்
சுகமதை யமுறிவிடல் குந்திரிக் கஞ்சுவைத்
தோதுமாடவர்க ளுண்ணல்
சுக்கில மிறங்குவரை கையின லாண்குறிபை
தொட்டசைத்தே யாட்டலும்
அகல்ஜமா அன்றிபெண் குறிபார்த்தலுந் தெருவில்
அலதுநீ ருஞ்சாம்பலில்
அமுதகனி வர்க்கதரு நிழலிலுஞ்சிறுநீரும்
அசதியோ டிருந்த செயலும்
முகமினிய மடவாரி னல்குலைக் காண்பதும்
முறிவுசிப் பால்சிவலும்
முடிவினை கண்ணுடி யால்முகம் பார்ப்பதும்
முதலருளு மஹ்மூதரே. (98)

புளிப்புசேர் ஜேபுப் பழத்தைப் புசிப்பதும்
புவிமன்னவன் தீர்ப்பினல்
பூண்டகழு விற்போட். டிருந்தவனைப் பார்ப்பதும்
புதுமல்லி இலை தின்பதும்
யெழுத்துகள் வரைந்தகபு ரின்பலகை பயிலல்பின்
னிருபிடரி பள்ளமீதில்
இரத்தமிட குத்தல்காய்ந் துப்பிடுங் கண்டமதை
இன்பமாய் தின்றவருதல்
முழுதுமே சூட்டிட ஞெஜீபனந் தின்னலும்
மொத்தக்கிடாரத்தினில்
முறைமைபோல் தின்பதுஞ் சலமதிக மேற்கொண்டு
மோகதாகஞ் செய்வதும்
கொழுத்திடுந் தொண்டையில் கோழையுண் டாம்வஸ்தை
கூசாமலே யுண்பதும்
கோடானு கோடிமனு வுக்குமன் றுடும்அனு
கூலமருள் மஹ்மூதரே. (99)

இதில் 4வது சீர் முதல் பாடம் வருகிற பயான்.

மறதியுண் டாக்கும்வகை யாலதிக வலிமையாம்
மண்ணினிற் செய் பாவமாம்
மாநில வுவப்பினுல் சஞ்சல மிகுத்தல்மன
மாயதுன் யாவினுடைய
குறியிடுங் கருமமிப் பலநினைவு கொள்வதுங்
கூறுமிவை மாதியாகும்
குரையுணவு தின்பதுங் குரூஹ்ஞேதி வருவதுங்
குச்சியால் பல்தீட்டலுங்
குறயனிய தேனினைச் செவ்வையுற நக்கல்வெண்
சீனியொடு குந்தருந்தல்
தின்மும்வெறு வயிறதிற் காலைஇரு பத்தொன்று
செப்லம்பே ரீந்து திண்ணல்
இறைவனருள் சலவாத்தை யதிகமா யோதுவது
மெப்பொழுதும் பாவம்விடுதல்
இவைகளெட் டுங்கொணர்தல் பாடமிக வுண்டாகு
மெங்கள்குரு மஃறூதரே. (100)

நாயனே எனதுபிழை தாய்தந்தை யுஸ்தாது
நல்ஷெய்குமார்கள் பிழையும்
நமதுகிளை யோர்கள்பிழை மூமின்முசி லீமனைவர்
நவிலுமாண் பெண்கள் பிழையும்
காயமதி லுயிருள்ள பேர்கள்பிழை யும்வயது
காலமுடி வோர்கள் பிழையும்
காதலொடு பாடுபவர் பிழையுமிப்பாடலைக்
காதினிற் கேட்பர் பிழையும்
நேயமொடு பொருள்சொல்லி விபரித்த தைக்கேட்டு
நினைவினுள் வைப்பர் பிழையும்
நெறியினிச் சதகமைப் பார்த்தபேர் கேட்டபேர்
நெட்டுருச்செய்வர் பிழையுங்
தாயினுங் கிருபையருள் செய்நபி பொருட்டினுற்
றனியவ னெலாம்பொறுத்தே
ஜன்னத்தி னுறுபதவி தந்தருள்க ஆமீன்
ஜகம்புகழு மஃறூதரே. (101)

(மஃறூதர் சதகம் முற்றிற்று.)

700

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நாகூர் ஹஜரத் செய்யதலி சாஹிபவர்கள்

இளைய குமாரரான

மௌலவி செய்யது ரஹ்மதுல்லா ஆலிம்சாஹிபு

அவர்களால் உரைகொடுக்கப்பெற்று

மீரு உஸேன் ஆலிம்சாஹிபு அவர்களால்

பாடிய

பாபு மஹ்ரிபாமாலை.

காப்பு நேரிசை வெண்பா.

சொல்லி லடங்கா னின்றுய்ய வியல்புகளை
யெல்லவருந் தானறிய யேத்தமாம்—நல்லறிவு
பாபு மஹ்ரிபத்தைப் பாடவே மாலையதாய்
ஆபியத்தை தந்தருள்வா யாதி.

தோங்கல்.

பூபதியெங்குந் தனிமுதலாய்ப் புனித றகுமானைப்
புகழ்ந்து போற்றி
தாபிதவழி நபிமீதிலே தனியன் சலவாத்தென்
னுளு முண்டாங்
கோபம் தனைவிடக் கிருபை மேவுங்
குருவையறியவே விதியாகிய
பாபுமஹ்ரிபா மாலைபாட படைத்த நாயனே
துணைச் செய்வாயே. (1)

அல்லா தனக்குத்தான் தாத்துமுண்டு அரியசிபத்துண்டும்
அசுமா வுண்டும்
மெல்லா அபுஆலும் அஹ்காம்களும் இவைகள் உண்
டென்றும் அறிகிறது
யெல்லார் மீதிலும் பருலாகிய இனிய் கடமையா
யிருக்கு மென்றுஞ்
சொல்லால் மேல்வந்த ஐந்திலேயுந் தய்யோ
னைப்பில்லான் றனித்தவனே. (2)

நாயனிகரில்லா ஞெப்புகமை நவிலும் இணை துணை
இல்லாதவன்
சாயலில் லாதோன் சமனற்றவன் சக்குசந்தேக
மில்லையென்றுந்
தாயிமாகவே யுண்மை கொள்வீர் சங்கையவனுட
தாத்தென்றது
தூயபுகழ் சேரும் ஹக்குடைய சுத்த உஜூதுக்கே
பேராகுமே. (3)

பெருமைதருஞ் சிபாத்தென்பதுதான் பெரியோனவனுக்கு
லெக்ஷணமாம்
திருவினிறை யசுமாவென்பது சிறந்த நாயகன்
றிருநாமங்கள்
வரிசைதரும் அபுஆ லென்பது வல்லோ னுரியவன்
செயல்களாகும்
புரியும் அஹ்காம்க ளென்பதுதான் புகழுமவன் செய்யுந்
தீர்மானமே. (4)

தாத்தின் விபரம்.

ஒப்பில்லா நாயன் தாத்தானது உண்மை யொன்றுதான்
ரெண்டல்லவே
யெப்போதுமவை யுள்ளதுதான் இல்லாதிருந்து
வுண்டானதல்ல
தப்பி வளராது தளராதென்றுஞ் சாய்ந்து ஒடுங்காது
மலராதென்றுந்
தப்பிதமென்றூர் பங்குபண்ண சகல பேர்க்கெல்லாம்
யெடங்கொடாதே. (5)

பார்க்கச் சிதறியே பலதாகாது பலதுமதிலேதான்
சேர்ந்திராது
தீர்க்க இரங்காது ஏறுதென்றுந் திரும்பவு சும்பாது
ஒடுங்காதென்றும்
நோக்கமா யொருதல மிருந்து நவலுமறுதலம்
நகராதென்றும்
போக்குத் தானமுங் காலமில்லை புதினமானதா
மறிவீர்களே. (6)

மேவுந்தாத்துக்கு சுவையுரிசை வேண்டும் வாசங்கள்
மணமிராது
தாவும் பலநிறந் தண்மைக் குணஞ் சாதரூபமும்
மட்டுதிட்டந்
தேவை நீளமும் அகலங்கனஞ் செயர்க்கை இவைஎல்லா
மிருக்காதென்றும்
ஆவிபல கோலம்படைத்த பிரான் அவனை தூய்தாக்கி
வணங்குவீரே. (7)

இந்த ஆலத்தை படைக்குமுந்தி யெழிலாயெவ்வித
மிருந்திட்டானோ
சொந்தமாயதின் விதமாகவே தூய்யோ னிப்போது
மெப்போதுமே
சந்ததந் தரித்தா னென்பதில் ஷக்கு சந்தேக
மில்லையென்றூர்
முந்தியிவனுகும் பிந்தியவன் முழுதும் லாகிறும்
பாத்திறுேன். (8)

ஆலத்தின் விபரம்.

ஆலமென்பது படைத்த பிரான் அல்லா வொருவனு
முண்டென்பதை
காலமனுவுக்குப் பிசகறவே காட்டக்கூடிய
ஆதாரமா
யோலமா யொரு அடையாளமா யுண்மையாகவே
அறிந்து கொள்வீர்
சீலமனுவோரே நாயன்றன்னை ஜிகத்திலறியவே
விதியாகுமே. (9)

ஆலமெனபதின் பொருளாவது அல்லா வொருவனைத்
தவிர மற்ற
கோல மவையெல்லா வஸ்துகளுங் குறிக்குமேலோகங்
கீழ்லோகமும்
யேஃனும்புதியதா வுண்டானதோ இவைகள் தனக்கெல்லாம்
பேராகுமே
ஆலம் படைத்தவன் ஆலத்தின்மேல் அங்கு கீழிலு
மில்லை என்றூர். (10)

ஓதும் நாயகன் ஆலத்துக்கு உள்ளே வெளியினும்
புறமுமில்லை
நீதியோறல மெங்கெங்கினும் நிறைந்தே இருக்கவு
மில்லை பின்னுஞ்
சோதியவனுக்கு தாய்தகப்பன் சொந்த மனைவியு
மக்கள்களுங்
காதல் கூட்டாளி யொத்தாசைகள் கனத்த உதவிகள்
சபை யோசனை (11)

ஆகஇவைமுத லானதில்லை அவனுக்கூண் தீனும்
அசதி இல்லை
தேகமறதியும் யேலாத்தனந் தெரியாத் தனமுறு
மினங்க ளெல்லாம்
மாகை யடியார்க ளெக்ஷணத்தில் வகையில் யாதொன்று
மில்லையென்றும்
யூகமனுவோரே இவைகள்போல உண்மை நாயனை
யறிவீர்களே. (12)

சிபாத்தின் விபரம்.

அசலாம் பெரியவன் சிபத்துகளை யறியும் விபரத்தை
யருளக்கேளீர்
நிஜமா யுரியவன் தன்னைக் கொண்டு நிலையுள்ளோ னெல்லா
வஸ்துக்களும்
பிசுமில்லா இரை தன்னைக் கொண்டு பேசுகிலைமையா
யுள்ள தானன்
பசியில்லாவொரு வஸ்துவிலும் கபருந்தேள்வை இல்
லாதவனே. (13)

யெல்லாவஸ்துவு மவனளவில் இன்பமாத் தேவை
யுள்ளதென்றும்
இல்லாமையன்றி பூர்ப்ப மானேன் யெல்லா வஸ்துக்கும்
ஒவ்வாதவன்
அல்லா றாஹன்றி ஹயாத்துள்ளவன் அக்லில்லாமலே
அறிவுள்ளவன்
நல்ல மனதன்றி கல்பன்றியே நாட்டமுள்ளவன்
நாயனுமே. (14)

நாயன் கைகாலு ருருப்புமில்லான் நவிலும் புலன்பொறி
யில்லாதவன்
நேயத்துணையன்றி திராணியுள்ளோன் நிலேத்தசெவியன்றி
கேள்வியுள்ளோன்
தூயன் கண்ணன்றி பார்வையுள்ளோன் தொனியும் அச்சர
மில்லாமலே
தாயுமாகவே பேசுறவன் சங்கை சிபத்தேழு
மிவையாகுமே. (15)

இந்த சிபத்தேழு வகையில்நின்று யெழிலாமொவ்வொரு
சிபத்துகளும்
உந்துசேரடி யாருடைய ஒவ்வோர் சிபத்துக்கு
மாற்றமாகக்
குந்தி இருக்கிறத்துடனடியான் கூடும் சிபத்துக்கும்
ஒப்பல்லவாம்
அந்த சிபத்திலே அடியானுக்கு அணுவும் பாத்தியம்
கூட்டுமில்லே. (16)

மேலே சொல்லிய சிபத்துகளில் மேலோன் தனித்தவன்
ஒன்றித்தவன்
கோலங் குறியில்லா னென்பதிலே கொஞ்சஞ்சந்தேக
மில்லேயென்றூர்
யேனுமுடையவன் அபுஆலென்னும் யெல்லா செயல்களின்
விபரம் சொல்வாம்
நாலாம் வேதத்தை யுடையோர்களே நாயன் செயல்களே
நவிலக்கேளீர் (17)

அபுஆலின் விபரம்.

தனிமை யிறையவன் கல்குகளே தனது நாட்டம்போல்
நாடும்போது
கனதி பிரயாசை யுதவியன்றி கவனும் ஒத்தாசை
கூட்டன்றியே
ஜனமும் இணைதுணை யில்லாமலே தானுண்டாக்கியே
யழிக்கின்றவன்
மனுக்கள்முதல் ஹயாத் தாக்கின்றவன் வாழ்வையறமவுத்
தாக்கின்றேனே (18)

இனிய சீமானு யாக்கின்றவன் யேழை யாக்கின்றோன்
வியாபாரத்தில்
அனந்தம் லாபத்தை கொடுக்கின்றவன் அதிலோஷ்டத்தை
செய்கின்றவன்
சினத்து நசல்தன்னை விடுகின்றவன் க்ஷேமமாநசல்
தீர்க்கின்றவன்
தனிய ருஜாங்கங் கொடுக்கின்றவன் சருவ ருஜாங்கம்
நீக்கின்றோனும். (19)

நாடியபேரை பெருமை செய்வான் நாடியபேரை
தாழ்மை செய்வான்
கூடும்வைகள்போல் ஞாயமாகக் கொள்ளுஞ் செயல்களைச்
செய்கின்றவன்
ஆடுமவன்செய லெல்லாத்திலும் அனியாய மில்லை
யொருபோதிலும்
தேடுமடியார்க்கு அனியாயங்கள் ஜெகத்தின் பாத்திலுஞ்
செய்யானென்றார். (20)

நாடுமவன்செய்யும் செயலெல்லைக்கும் நடுவேயொருத்தருங்
கூட்டாளியாய்க்
கூடஇருந்துதான் துணையாகவே கோருமுதவி யொத்
தாசையாகச்
சாடசேர்ந்துதான் செய்யமாட்டான் தனித்தநாயகன்
செயல்களிலே
ஊடே தனித்தவனாயிருந்தே ஒன்றித்தேயதில்
செய்பவனே. (21)

ஆதிஇறையோனுக் கசுமாவென்னும் அரிய திருநாமம்
விபரங்கேளீர்
நீதியுடையவன் றனையறிந்து நித்தம் பெருமைக்குத்
தக்கபடி
யோதித் திருநாமம் அழகாகவே உறுதி சுருதியாய்
வைத்துக்கொண்டான்
நாதனவனுக்கே யனேகந்திரு நாமங்களுண்டு
மென்றறிவாய் (22)

அந்தத்திரு நாமம் தன்னில்நின்று அரியஉறுதிருப்
பேராவது
சொந்த அடியார்க்கு தானுமில்லை சுத்தமவர்க் கொப்பு
உவமை இல்லை
யெந்த வகையாலும் புகல்வதிலும் யார்க்கும் பாத்தியம்
யாதொன்றில்லை
சந்ததம் அவன் அஹ்காமென்னும் சகல தீர்மானம்
சாற்றக்கேளீர். (23)

அஹ்காம்களின் விபரம்.

நாயனுடைய பேர்கள்பேரில் நவிலும் தீர்மானம்
செய்கிறதில்
தூய ஒருவரு மறுத்திடவும் சொல்லித் தடுக்கவும்
யேலாதுகாண்
காய மொருவருங் கூட்டாளியாய் கருணையுதவியா
யிருக்கவில்லை
ஞாய மாயதின் விஷயத்திலே நாளும் ஒன்றித்தே
தனித்தவனே. (24)

இன்சானுடைய தாத்தின் விபரம்.

எனது பிறவியா மூமீன்களே இன்சான் தனதுட
தாத்தானது
தனதினும் இல்லாமையிலிருந்து தனியன் புதியதாய்
படைக்கப்பட்ட
அனைய ஒருவஸ்து வென்றதாகும் அந்த மனுவுடன்
தாத்தானது
கனிவுபொருந்தமு றக்கபாகும் கத்தன் தாத்துத்தான்
பருதாகுமே. (25)

பருதானது ஒன்றை தனித்ததாகும் பகுமுறக்கபு
வஸ்து ரெண்டாம்
இருமை சேர்ந்து உண்டாக்கப்பட்ட இலங்கும் றாகுடன்
கபுசதுவாம்
அருமைசேர் இன்சான் தாத்ததற்கு அசலு அதமென்னும்
இல்லாமையாம்
பருமைஇன்சான் தாத்தின் முடிவு பக்காவின் தரிப்பிடம்
பனுவில்லையே. (26)

ஆலம் படைத்தவன் சமுகத்துக்கு அஜலி யென்னும்பே
    றஃதாவது
காலமுடன் தான மில்லாதவன் காதலடியாரின்
    சமுகத்துக்கு
காலந்தானமும் உள்ள பேராம் கனதி இறையவன்
    தாத்தானது
மேலும் நம்முட தாத்திலில்லை விளங்கும் நம் தாத்து
    அவனிலில்லை. (27)

நம்மி லவன் தாத்து தங்கவில்லை நம்தாத் தவனிலும்
    தங்கவில்லை
செம்மை சிபத்தெல்லாம் அவைபோலவாம் சிறந்த நாயகன்
    நம்முடனே
பொம்மை குலூல் இச்சிக் காத்ன் றியே பிடரி நரம்பிலும்
    றாகூவிலும்
தம்முடனடுத் திருக்கின்றானும் சரியா நிண்ணயங்
    கொள்வீர்களே. (28)

ஆனாலவ்வித நிண்ணயத்தால் ஆதிஇறையவன்
    நல்குணத்தை
தானஅடியான்தான் யெடுத்துக் கொள்வான் தனியோன்
    குணமிந்த அடிமைகளில்
மோன வெளியாகுங் காலமெல்லாம் முதலோன் செய்யிற
    செயலும் சொல்லும்
தானே இவன்சொல்வான் செய்வானென்றே தவத்தின்
    சூபியோர் அருளிச்செய்தார். (29)

நாடுநேரத்தி லிவ்வடியான் நாயனிலடங்கி
    யொடுங்கி
சாடும் அதிகார மற்றவனாய் தவத்தி லாகுவன்
    ஆனதினால்
யிடுதவறான நினைவுகொண்டு இவனை நாயனென்
    றெண்ணொண்ணாது
ஆடுமெய்வையெந்த சமையத்திலும் அடிமை நாயக
    னாகமாட்டான் (30)

நாயனடிமையாய் போறதில்லை நாயன் நாயன்தான்
அடிமையென்போன்
தாயஅடிமைதான் இதற்குவமை தண்ணீருடன் செம்பை
அடுப்பில் வைத்தே
னேயமுடிவறக் காச்சும்போது நெருப்பின் குணத்தை நீர்
செய்வதுபோல்
காயமாயதின் தன்மைபோலும் ஹக்கன் குணத்தையே
அடிமை செய்வான். (31)

இந்த வகைகளில் விரித்து சொல்ல யெழில்சேருவமான
மிகுதியுண்டு
சிந்துசூழ் நாகூர் தன்னில்வாழும் செய்யிது றகுமதுல்
லாசாகிபு
பந்தமுறும் ஆலிம் உரையினுலே பகர்ந்தேன் மாலையை
மீரு உசேன்
முந்தாயிரமுன் னூத்திருபதான மூன்றும் றஜபினி
லியற்றினேனே. (32)

பாபு மஹ்ரிபாமாலை முற்றிற்று.

இதுவும் அவர்கள் பாடிய

சலவாத்துப் பதிகம்.

சிந்து கோச்சகக்கலிப்பா.

எவ்வுலக மனைத்தும் படைத்தருள்
யேகனையுனை யேற்றிப் புகழ்ந்தனன்
திவ்விய நபிபேரில் சலவாத்தைச்
செப்பினே னவ்வரிசை யுரைக்கவே
செவ்வையாய்ச் சொல்லும் செய்யு ளறிகிலேன்
செந்தமிழ்க்கவி இன்பஞ் சிறக்கவே
செவ்வையிற் புகழ் தாரும் அல்லாஹும்ம
சல்லி அலன்னபிய்யி முஹம்மதே. (1)

அல்லாஹ்தானும் அவன் மலக்கோர்களும்
ஆண்டவர்மேல் சலவாத்து சொல்வதால்
யெல்லா மூமின்க ளேசல வாத்துடன்
யேற்றமான சலாமு மியம்பெனச்
சொல்லரும் பொரு ளாகிய வேதத்தில்
துய்யநாயன் றிருவுளமானதால்
சல்லாபந் தனைத் தாரும் அல்லாஹும்ம
சல்லி அலன்னபிய்யி முஹம்மதே. (2)

சாலிஹீ னயல் வீட்டினன் பாவியாய்த்
தானிறந்தமனு வைக்கன விற்கண்
டேலமேலவ னேதுசெய் தானென்ன
யென்பிழை பொறுத் தானவை யேனெனில்
ஆலமீநபி நாமமெழுதும்போ
தன்றுநான்சல வாத்தை யியம்பினேன்
சாலவும் புரிந்தாரு மல்லாஹும்ம
சல்லி அலன்னபிய்யி முஹம்மதே. (3)

வையமீதில் மனுவுக்கோர் ஹாஜத்து
வண்மையன்றி வருத்தப் படுத்திஞல்
பையவே மிகுந் தோதசலவாத்தைப்
பாரிற்றுக்கம் வருத்த மகன்றிடும்
மெய்யவன் றிஜக்கென்றும் பெரிகிடும்
வேண ஹாஜத்தெல்லாம் நிறைவேறிடுஞ்
செய்யிதே செல்வந்தாரும் அல்லாஹும்ம
சல்லி அலன்னபிய்யி முஹம்மதே. (4)

நாயகன் றிருத் தூதாருளினர்
நானிலத்தி லொருவ னென்பேரிலோ
ராயிரம் சலவாத்துகளோதினு
லானவன்குடி சொர்க்கப்பதி என்று
னேயமாயவன் கண்டல்லலாதவன்
நிக்ஷயம் மவுத் தாகப் பொருந்திடான்
தாயகம் புரிந் தாளுமல்லாஹு ம்ம
சல்லி அலன்னபிய்யி முஹம்மதே. (5)

மெத்தப்பாவி யொருவ னிறக்கவும்
மேடுவீங்கி முகமுங் கருமையாய்
செத்தவன் மகன் றுஞ்சநபிவந்து
செங்கையாற் றடவித்திடப் பாலதாய்
சத்தியார் நீங்க ளென்க நபிஎன்றூர்
சாற்றினன் சலவாத்தை இரக்ஷித்தேன்
சத்திய வாக்கருளும் அல்லாஹு ம்ம
சல்லி அலன்னபிய்யி முஹம்மதே. (6)

மீண்பர்மேல் நபி ஆமீனுரைக்கவும்
மெய்மஆதிவை கேள்க நபிசொன்ன
ரும்பர் வந்து முகம்மதே யுங்கள்பே
ரோதக்கேட்டு சலவாத் துரைத்திட்டான்
றம்பிருன் மவுத் தானல் நரகத்தில்
தான்புகுவதற் காமீ னியம்பினேன்
சம்பிரமாயென்னை யாளும் அல்லாஹு ம்ம
சல்லி அலன்னபிய்யி முஹம்மதே. (7)

சூபியாக்க ளொருவ ருலமாவை
தூங்கயிற் கண்டிறை யோனென் செய்தானென்
ருபியா கேள்க அன்னவர் செப்பினு
ரண்டு பாவமென் னுயன் பொருத்ததோ
ஞாபகமென் கித்தாபி லெழுதினேன்
நட்புறும் சலவாத்தின் பொருட்டதால்
தாபதம் புரிந் தாளும் அல்லாஹு ம்ம
சல்லி அலன்னபிய்யி முஹம்மதே. (8)

சங்கை சாலிஹீ னென்பர் சலவாத்தை
தான் கணக்குவைத் தோதிவருகையிற்
றிங்கள் போல்நபி வந்துகனவிலே
செப்பும் வாயைக் கொடுமென்க வன்னவர்
றுங்க நாணியுங் கன்னத்தை காட்டினர்
தொட்டு முத்தவுங் கஸ்தூரி வாசமாம்
தங்களின்காக்ஷி தாரும் அல்லா ஹூம்ம
சல்லி அலன்னபிய்யி முஹம்மதே. (9)

ஆதிதன்னை இபாதத்து செய்வதி
லாகும்டாறு வகையின் வணக்கமாம்
நீதமாசல வாத்ததி லொன்றதாம்
நேமமாயோதி னோர்நபி தோழராம்
பாதகந்துலங் தேகமன் றூடுவார்
பையல் ஹாஜத்தெல்லாம் நிறைவேற்றுவார்
சாதிவேதரே யாமூம் அல்லா ஹூம்ம
சல்லி அலன்னபிய்யி முஹம்மதே. (10)

சலவாத்துப் பதிகம் முற்றிற்று.

சபைவணக்க விருத்தம்.

ஆதிமுதல் தானாகி யஹதுஹது வாஹிதிய்
யனைத்துயிர்க ளுக்கருவதாய்
ஆலமஜிஸாமதில் ஸ்தூலமொடு காரண
மடங்கலுஞ் சூக்ஷமாய்நின்
றனபல ஜாதியால் பலபாஷை பேசவும்
அமைத்தாளும் அரிய பெரியோன்
ஆளுமுன் னடிமையில் அறிவிலா நாவினால்
அருளதிக பிஸ்மிலோதி

நீதிசெந்தமிழா லுனைத்தொழுது போற்றியே
நேர்தரு முகம்மதிறசூல்
நெறியடியை முடிமீதில் வைத்தினிய சலவாத்தை
நிலைமாரி போல் நவின்று
நிற்கும் நால் யார்களையும் மொக்க ஹசனுசனையும்
நீதிமா ரசூஹாபையும்
நிகரிலான் றிலுவான் பொருத்தமென் னாளுமே
நிலைபெற மனத்துகந்தே

சோதிஇர சூல்நபி வழிதனில் வந்திடுஞ்
சுயஞ்சோதி முகைய்யிதீனை
சுருதிநபி கிலுறுவின் சொற்படிநா கூரில்வாழ்
சுடர்மணி ஹமீதொலியையும்
சுத்தமுள மௌனியாம் நத்ஹறொலி தம்மையும்
சூரர்இபு றாஹீமையும்
சுந்தரமிகும் செய்கு தாவுதொலி நெய்னா
முகம்மதொலி சூபிதமையும்

நாதனருள் பெற்றவொலி மார்களுல மாவையும்.
நார்க்கவிப் புலவோரையும்
நமதுதாய் தந்தைகுரு மார்களைப் போற்றியே
நர்ச்சபையினோர்கள் முன்னே
நாமமீறுஹ-சன் தேன்மொழி சலாஞ்சொல்லி
நற்றமிழ்க் கவி பாடலில்
நழுவலாய் சொர்ப்பிழை இருந்தால் பொருந்துவீர்
நாயனருள் பெருக ஆமீன்.

சபை வணக்க லாவணி.

1. ஆதிஇலாஹி என்றும் யஹதாயருவுருவை
யரியமெய்ப் பொருளெனும் முதலோனே—உன்றன்
நீதி திருநாமத்தை துடங்கிக் கவிதை பாட
நேர்மை யருள்புரிவா இறையோனே (ஆதி)

2. சோதி யுனைப்புகழ்ந்து தூய்ய முகம்மதுற்ற
சூலின் திருவடியில் முடிசேர்த்து—தினம்
மோதும் சலவாத்துடன் னுயரும் சலாமுறைத்து
ஒருபொருளுட னீமா னிறப்பிக்கொண்டு (ஆதி)

3. காதல்கொண் டிறையவன் கலிபாவா யனுப்பின
காரணராதநபி முதல் தொடுத்து—வந்த
ஜாதியி லுயர்லெக்ஷத் திருபத்து நான்காயிரஞ்
சரகு நபிமார்களின் பதம் பணிந்து (ஆதி)

4. மேதொரு நபிகள் இல்முல்ல துன்னிருக்கும்
மேலவ ஒலிகளுக் கரசரென்றும்—பாரில்
ஹாதிவழியில் நின்றும் ஹயாத்தா இருக்கும்நபி
ஹிலுரு அலைஹிஸ்ஸலாம் பதம் போற்றி (ஆதி)

5. தாவிப் புகழ்பெருகுந் தீன்முத லீமான் கொண்டு
தரணியில் வீணுறைகள் தனைவிடுத்து—கல்லை
நாவில்வைத் திருந்திடும் நபிதோழ ரபூபக்கர்
நாளும் சரணமதை தலைமேல் கொண்டு (ஆதி)

6. மாமுனபிக்குவந்தோர் மகன் அபூ ஷஹமாவை
மடித்து ஆற்றை திருப்பி நடத்தியருள்—பெரும்
ஷாமுநகர் பலதும் பிடித்து தீனைவளர்த்த
சங்கை யுமர்பதத்தை சிரத்திற்கொண்டு (ஆதி)

7. யாதிமிகவிருக்கும் லௌகுல் மகுபூலுவை
யறிந்து மகுலூக்கல்ல வெனுங்குருஆன்—தன்னை
யோது முதுமானெனும் நூரைனியெனும்பேரை
யுகந்தினி யகமதில் நட்பு வைத்து (ஆதி)

8. படிமீதிற்கிடுகிடென் றதிர்ந்து படைபொருதும்
பருதிநபிநிறுத்தி அசர்தொழுகும்—நாகம்
முடிநெறு நெறவாசி நடத்தும் நபிஇரசூல்
முரையாம் மருகாலி தாழ்போற்றி (ஆதி)

9. சொர்க்கக் கனியருந்தி சொர்க்கத் துயிலணியுஞ்
சுருதிநபி இருகண் மணியெனவுந்—திரு
மக்க முகம்மதர்க்கு வரிசைப்போருன பாத்தி
மாமகன் ஹசனுசன் பதம் பணிந்து (ஆதி)

10. தொனியாக வாங்கு சொல்லி தொழுகையில் வஹிவந்து
துதிமறை நேர்கஃருபா பார்த்துதொழும்—இந்த
துனியாவில் சொர்க்கங்கொண்டு துணிந்து மாராயம்பெற்ற
துணைவர்கள் பதின்மரை துதிகள் செய்து (ஆதி)

11. நாயக னபிதிரு தோழரெனும் நேசரில்
நல்மக்க முஹாஜிறீன் மதினந்தனி—லுள்ள
தாயக மன்சாரிகள் தகுதிப்படி யாவர்க்கும்
தனியவன் பொருத்தமி னகத்திருத்தி (ஆதி)

12. காசினி தனிமுதல் ஹனபி இமாம் பிறகு
கர்த்த இமாம் மாலிக்கு ஷாபிகியும்—வந்து
பேசிடும் ஹன்பலியின் நால்வர்கள் பதம்போற்றி
பின்பு மற்றும் இமாமைத் தினம் வாழ்த்தி (ஆதி)

13. தேசம்புகழ்பகுதா துறெலிகள் நாயகஞ்
செய்பிதி ரசூல்பேர ரெண்டிசையும்—மேலும்
வீசும் பரவும்பதி நாலாந்தலைமுறையில்
வந்த முகைபிதீனைச் சிந்தைசெய்வாம் (ஆதி)

14. மாணிக்கப்பூரில் ஹசன் குத்தூசி னருள்பாலர்
மாதவர் கௌதிடத்தில் முறீதுபெற்றே—நாளுங்
காணிக்கை வைக்கும் நாகூர் தனில் மறைந்திடும் அப்துல்
காதிறெலி இருதாள் பணிந்தேத்தி (ஆதி)

15. சுந்தரக் குடைமேவுங் காசி முகம்மதர்க்கு
கருணையா யுகந்திடுங் கார்முகில் போல்—வருஞ்
சுந்தரந்தரு மெங்கள் சுல்தானுல் ஆரிபீன்
சுகமலரடிகளை துதித்துக்கொண்டு (ஆதி)

16. அத்தர் பன்னீருபல வாசமிகுந்து வீசும்
அருமைசேர் திருச்சியூர் தனில்வாழு—மெங்கள்
வித்தகர் நத்ஹறெலி சுத்தப் பதமலரை
விரும்பிக்கொண் டனுதினம் மிகத்துதித்து (ஆதி)

17. பாண்டிய விராஜன் றன்னை தோன்றிடும் மதுரையில்
பத்தியுடன் பீசபீல் போர்புரிந்துப்—படை
க்ஷேமமா தீன் பயிரை வளர்த்திடு மேர்வாடிவாழ்
செய்யி திபுரூஹீமை சிந்தைவைத்து (ஆதி)

18. முத்து நகரைச்சேர்ந்த வித்தை சாம்பாநகரில்
முன்னில் வருபவர்க்கு வழியருளும்—பல
எத்திசை புகழ் செய்கு தாவூதொலி யவரின்
இணையடி தனைத்துதித் திருத்திக்கொண்டு (ஆதி)

19. மண்டலம் புகழ்ந்திடும் மரைக்கா பள்ளியில் ஞரும்
மதுரசா வைத்தூதி தவம்புரியும்—பல
தண்டலைப் பொழில்சூழும் அதிவீரராமன் நகர்
தலமிகும் ஹாஜாவொலியை வாழ்த்தி (ஆதி)

20. காயமுட னிருக்கும் காக்ஷி கோட்டை நகரில்
கருதும் ரூவுத்தர்ஒலி கழல்பணிந்து—எங்கள்
நாயக மெனவருந் தாயகப் பாசிநகர்
நெய்னுமுகம்மதரை நினைவில் வைத்து (ஆதி)

21. பூதலந் தன்னிமாமாய் பதினன்கு இல்முபெறும்
புகழுங் கிதாபனேகங் கோர்வை செய்து—நபி
நாதர்மேல் வித்தூரியா காதலாய்ச் சொல்லுமொலி
நவிலும் சதக்கத்துல்லா பதம் நினைந்து (ஆதி)

22. வேதமொலி முழங்கும் வெகுபேர் ஆலிம் ஹாபிலு
விளங்கும் காயல்நகரில் புகழ்பெருகும்—ஞானப்
போத மொலிமார்களின் பாதமிரண்டுமெந்தன்
புத்திதனிலிருத்தி சுத்தஞ்செய்து (ஆதி)

23. தேன்மலர் காவுஞ்சூழுந் திருமங்க லக்குடியில்
தீனோர்கள் புகழ்ந்திடும் திருமணியாய்—வரும்
மான்மதங் கமழ்நபி மருமூது தீனிஞெலி
மவுலா அபூபக்கரின் தாழ்போற்றி (ஆதி)

24. கார்ப்பா ரெனப்பிணிகள் தீர்ப்பா ரெனக்கருதி
கதியுறுந் தீனோர்க ளனைவர்வந்து—நலஞ்
சேர்ப்பா ரெனப்புகழும் பாப்பாவூர் தனில் வாழும்
செய்கு அலாவுத்தீனைப் பணிந்திருந்து (ஆதி)

25. பேறைப்பெற ஆணுவம் வேரைக்களைந்து நின்று
பேதப்பொறி புலனை யடக்கிவைத்து—நாளும்
காரைக்கால் தன்னில்வாழும் காமில்மஸ்தா ஞொலியை
கருதி மனதில்வைத்தே யுறுதிசெய்து (ஆதி)

26. வேதவொலி மாரு தோதும் பலபேர்வந்து
விருத்திசெய்திடுங் கூத்தா நல்லூர்தனிலே—வாழும்
ஆதார வாகப்பிறந் திருந்துமறைந்த ஆலிம்
அப்துல் மகுமூதொலி அடிபணிந்து (ஆதி)

27. வேதியர் பலசூழ்ந்து நாளும் மவுலூதோதி
வின்னமில்லாப் புவியில் சென்னல்தரும்—வாழும்
ஆதிரெங்கமும் கட்டிமோடு மூமின் முசுலிம்
அன்புறும் பீர் முகம்மதொலியை வாழ்த்தி (ஆதி)

28. உருபுதனைமறந்து உலகில் மூவாசை விட்டு
ஒருபொரு ளுணர்வோடில் லறந்துறந்து—உயர்
குருபுக்குமேலாம் உகூல் அதுவது சிதுகினில்.
குணங்குடி மஸ்தாஞொலி யைப்போற்றி (ஆதி)

29. இந்த நபிகளொலி மார்கள் பரக்கத்தினுல்
என் பிழை தாய்தந்தை குருமார் பிழை—யொக்க
வந்துமூமீன் முசுலிம் யெல்லார் பிழைபொறுக்க
வல்ல நாயனிடத்தில் துஆவிரந்தே (ஆதி)

30. பேர்பெருகும் சபையில் பெரியோர் சிறியோர்களை
பேணி யுகந்தவர்க்கு சலாமுரைத்தேன்—யானுங்
கார்மழை யெனப்பாடுங் கவிதைகளிற் பிழைகள்
கண்டறிந்தோர் திருத்திப் பொருப்பீரே. (ஆதி)

31. ஆதிநபிமதினத் தேகும் ஹிஜ்ரத்தான
ஆயிரத்திமுன்னூத்தி பதினெட் டாண்டில்—வரும்
நாதன் ரமுலான்மாதம் நடக்கும் முதல் தேதியில்
நாகூறொலி முன்னிலை யறங்கேற்றி (ஆதி)

32. நானிலமதில் நன்னூல் காரிகை இலக்கணம்
நவிலுமகராதிகள் படித்தறியேன்—இன்பு
பானல மீறுஹஸன் பாடுங் தமிழ்க்கிரங்கி
படைத்தோன் கபூல்செய்வானல் லருளாமீன். (ஆதி)

சபை வணக்க லாவணி முற்றிற்று.

பதங்கள்.

இப்பதங்களில் சிலது முன்னர் பாபுமஹ்ரிபா மாலைக்கு உரைகொடுத்த றஹ்மத்துல்லா ஆலிம்சாஹிபு அவர்களின் தகப்பனூர் செய்யதலி சாஹிபவர்களால் உரைகொடுக்கப்பெற்று பாடிய பதங்களும் சிலதுண்டு. அவைகளை அப்பதங்களின் முடிவில் காண்க.

இன்னிசை.

துய்யோ னருஷூம் குருசும் சொர்க்கநக ரஞ்சமைத்து
வெய்யவான் மேழதுவும் வில்புவியும் வாரிமலை
ஐயமன்றியே நாயன் ஆறுநாளையி லனைத்தும்
மெய்யன் மஹ்மூதொளிவில் மேல்மனுவுக்காய்ப் படைத்தான்.

இராகம்-சங்கராபரணம்-ரூபக தாளம்.

பல்லவி.

துய்யோனின் மஹ்மூதே தங்களின்
ஒய்யாரப் பதந்தாருமே துணை (துய்)

அநுபல்லவி.

மெய்யோர்கள்மகி ழும்மதி னாவினில்
மேலரசாளும் மன்னேன்மணியே நபி
மேலவா அரசாளவா யெனையாளவா
தயாளப் பதந்தாரும் (துய்)

சரணங்கள்.

1\. அன்னைவயற்றில் தரித்தது முதல்
பின்னையொன்பதும் நிரைவதில்
மன்னராதம் நபி யீசா வரையில்
சொன்ன மாநயங் கனவினில்
அன்னது கெர்ப்பம் நிரைவாகிப்பேர் காலம்
ஆசியாமரியமும் அண்டர்கள் வந்தங்கே
ஆகியே யொளிவாகியே உதையாகியே
ஒஹி நபி பிரந்திடும் (துய்)

2. அன்னாளில் நபிப்பட்டம் நாலாண்டுபின்
அன்புறும் நபிஇரவினில்
மன்னனே உமரபுஜஹில் ஒண்ணில்
தன்னையாகிலும் தாவெனில்
தன்னாலேயுரு கிமனங் கெஞ்சியே
தங்களுமர்வரும் பாதையில் மிஞ்சியே
தாண்டியே ரிஷபந்தோண்டியே போர்சேண்டியே
மிஞ்சஆண்டது காரணங் (துய்)

3. மன்னவன் ஹபீ பீன்றிடும் தசை
மாதவப் பெண்ணாய் சமைக்கவே
அன்னதைக்கண் ணுற்றவர் யாவரும்
அற்புதமென உரைக்கவே
கன்னியைப் பெற்றிடும் ஹபீபரசனுங்
கணக்கிலடங்காப் புளகிதமாகியே
காத்திமே கலிமாத்தரும் பாவம் வீழ்த்தரும்
எனைவாழ்த்த அருள் செய்யும் (துய்)

4. ஆதிநபியின் ஹிஜரத் தாகியே
ஓது முன்னைம்பான் ஆண்டினில்
சோதியின்நபி துயில்கொளும் வேளை
பாதிராவிருள் கூண்டினில்
நீதிஜிபுறியீல் வந்து புருக்கினில்
நேர்நபி தங்களை வைத்ததிலேற்றியே
யேகியே பைத்திலாகியே வானம்போகியே
கடந்தேகன்முன் பேசிடுங் (துய்)

5. தேன்மலர்க்காவும் திருமணமூவும்
மான்மதம் மக்குபு ருவினில்
வான்மலர் வீசும் மதிஞவில் வாழும்
கான்மலர் ஆதம் நுதலினில்
தான்வரும் அப்துல்லா நெற்றியின் புத்திரர்
தவமணியாகும் மஹ்மூதர் பாதத்தை
தாங்கியே பவம் நீங்கியே பலன் ஓங்கியே
மீறுஹஜனைப் பாங்கருள் (துய்)

இன்னிசை.

கலவுதருஞ் சொர்க்கலிமா நாட்டும் பருலைப்போல
அலவுதிறந் தேசபையில் ஆண்டார் நபிமீதில்
தலமீ துவப்புவைத்தே சர்க்குருநா மங்கேட்டு
சலவாத்தை யோதுவது சகலருக்கும் பருலாமே.

இராகம்-பிலகிரி-திரிபுடை தாளம்.

பல்லவி.

சலவாத்தை யோதிக்கொள்வீர் நபிமீதில்
சலவாத்தையோதிக்கொள்வீர் தினந்தினம்
சலவாத்தை யோதிக்கொள்வீர்.

அநுபல்லவி.

பெலமா மறையிலின் னல்லாஹு வென்றுதி
பெரியோனருள் தூதர்பேரில் நாயன்
புகலும் சலவாத்தைச் சேரில்
பொன்னூரில் பொன்னூரில் (சல)

சரணங்கள்.

1. ஏற்றமா ஆயிஷா இரவில் துணிதைக்க
யெரியும் தீபம் நிற்க கண்டார் அன்று
போற்றும் சலவாத்தை விண்டார்
புதுமைகண்டார் புதுமை கண்டார் (சல)

2. சாலிஹொருவர் தின மோதி வந்ததால்
சயனமதில் நபிவிண்டே அவர்
வாயை முத்திதருமெண்டே
வாசங்கண்டே வாசங்கண்டே (சல)

3. பின்பர் நபியேறி ஆமீன் மூன்றுசொல்ல
அன்பர் மஆதுரை கேட்டார் நபிநாமம்
சலவாத்தை விட்டார்
நரகந்தொட்டார் நரகந்தொட்டார் (சல)

4. அனசுவைத் தொட்டும் அருள்நபி சொன்னதால்
ஆராறு மாயிரமோதில் அவன்
ஆளுந்தலம் சொர்க்கமீதில்
அற்றைப்போதில் அற்றைப்போதில் (சல)

5. மாதா ஹவ்வாவும் மஹர் தன்னை கேழ்க்கநம்
தாதா இறைஇடம் உறைக்க அவன்
பூணும் சலவாத்தை விறைக்க
போதும் நிறைக்க போதும் நிறைக்க (சல)

6. ஷறஹா ந்தலாயிலில் தன்பீகுல் அனுமில்
சாற்றும் சலவாத்தின் பரிசை இது
பெரிது பலன் மெத்த வரிசை
பேணும் பிரசை பேணும் பிரசை (சல)

7. எந்தத்தொழுகையில் யெந்த துஆவிலும்
யேகனுறை சலவாத்தை மிக்க
வாகா அமல் கபூலாத்தை
வல்ல வார்த்தை வல்ல வார்த்தை (சல)

8. வரிசை தறாதை மிகவோதி வந்தோர்க்கு
வண்மை சொர்க்கப்பதி வாழும் நபி
உண்மைத் தோழரென்றே நாளும்
உள்ளே யாழும் உள்ளே யாழும் (சல)

9. யெந்த அமலிலும் றாஹ வேணுமிதர்க்
கவ்விதம் வேண்டுவதில்லை அத்தை
யேகன் கபூல்செய்வான் சொல்லை
என்றெசூலே என்றெசூலே (சல)

10. ஆதம்நபிதொடுத் தின்னாள்வரை பலன்
அடங்கமுடியாது அறிதாம் அது
ஆகிர்வரையிலும் பெரிதாம்
யார்க்கும் நெறிதாம் யார்க்கும் நெறிதாம் (சல)

11. எங்கள் நபிநாமம் எப்போது கேட்டாலும்
யெல்லவர்க்குஞ் சொல்ல விதியே அதை
நல்லதினமோத கதியே
நயீம் பதியே நயீம் பதியே (சல)

12. தேசம் புகழ் ஆதி ரெங்கந்தனில் வாழும்
சேக்காதி ரூவுத்தர் பாலன் யோதும்
சிந்தைமீற ஹுசைன் சீலன்
ஜெயவாலன் ஜெயவாலன் (சல)

பதம்-இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கலிமாப் பயனை யறிவீர் ஹக்கான இன்சான்
காமில் குருவைத் தெரிவீர் (கலி)

அநுபல்லவி.

ஒலிமார்களானவிதம் ஒயாதிக்கிரதனுல்
கலிமாப்பொருளறிந்து காக்ஷி ஷுஹூதில் நின்று (கலி)

சரணங்கள்.

1. ஈமான் பருலா மாரினில் யீராகவரும்
இருவினை அல்லாவில் நின்றும் பெரும்
சீமான் படைப் பாகிறதால் அவனுடைய
சிர்ருன கர்ப்பனை என்றும்
தாமான நன்மையன்றி
தனியோன் தின்மை பொருந்தான்
நாமா இபுலீசைப்போல் நாடிப்பின் கெடலாமோ. (கலி)

2. ஈமான் தலைக் கலிமாவாம் அதனின் கல்பு
இறையோன் மரையை யோதலாம் மாயக்
காமாஉடலேதாவது கத்தன் தொழுகை
காக்ஷி திக்கிர் செய்வதுவும்
நேமா வளக்குறது
நேராம் ஜக்காத்து யீகை
க்ஷேமாவாம் றாஹதர்க்கு சிர்ரும் இகுலாசாகும் (கலி)

3. அல்லாபெரிய நாமமாம் கலிமாத் தன்னில்
ஆதி அமைத்ததானது இலாஹி
யெல்லா அசுமாத்தன்னிலும் ஹுஹூராந்தலம்
யேகனல்லாவா மானதால்
நல்லாவராதிருக்கில்
நாயனறியவொண்ணுத்
தொல்லையாப் போகுமென சோறுக்கை சேதமாகும் (கலி)

4. கலிமா நாலாராமக்ஷரம் அதைக்கொண்டெல்லாம்
கத்தோனழித் தாள்கிறதும் வரும்
பெலமான பங்கு ரெண்டினில் முன்கூறு ஹக்காம்
பிந்தின பாகம் கல்கதாம்
நலிவாக பிந்தினது
நாதன்முன் பாதில் சேரும்
பெலமான மூன்றெழுத்தும் பேசும் இலாஹியாகும் (கலி)

5. அவ்வல் கலிமாதையிபாய் உரை மூமீன்க
ளனைவர்கள் றாஹு குல்லியாம் நற்
செவ்வை றாஹுக்கு யேனமாம் சிறந்த ஜடம்
சேரும் பூமிலடங்கினல்
ஒவ்வுமறுவாஹெல்லாம்
உறாஜு நுஜூலுமாக
சவ்வா சோபனத்துடன் சலிப்பற்றிருந்து வாள்வார் (கலி)

6. இன்சானி ரெண்டுபெங்குனில் ஒருபகுதி
யேத்தமொன்றின்சான் காமிலாம் ரெப்பின்
தன்றாஹு ஜல்லியானதால் ஆரிபீன்களின்
தனதாமிலாஹி றாஹுதாம்
பின்ரெண்டின் சாணுக்கீசாம்
பேறுதம் ஜுசியென்றும்
கன்ம றாஹு ஹைவானி கல்காதம் குல்லியல்ல (கலி)

7. நாயன்திக்கிரைக்கொண்டுமே நாடோறும்நெஞ்சில்
நாவிலோதிடும் போதெல்லாம் கெடு
காயச்சரீர கோர்வைகள் குலேபாதென்றுங்
கடினமவுத்து வந்திடில்
சாயல்பூதத்தின் ஜடம்
சாபா இடிந்துபோனல்
தாயம்மி தாலியான தனியோன் தேகங்கொடுப்பான் (கலி)

8. நாதன் துதிசெய் நாகூரில் நாயகமான
நவிலும் ஷாஹுல் ஹமீதொலி உயர்
ஜாதிவழியில் வந்திடும் பீரான செய்கு
சாற்றியே செய்யதலியாம்
போதக் குருவருளால்
புகலு மீருகுசைநல்
ஆதாவாமூமீன்கள் அனைவோரறிய சொன்ன (கலி)

பதம்-இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

லாயிலாஹ இல்லல்லாவின் சொல்லை நிதம்
னுவில்வைத் தோதிருப்பார் தன்னை
நானெனும் ஆணுவந் தீதினையற்றபின்
நாதனின் பாலிருப்பார். (லா)

அநுபல்லவி.

மாயவன் றாய மறையிலருளினன் மன்னனை திக்கிர்செய்
பின்னே திக்கிர் செய்வேன்
காயம்பனுவாகி போகுமுன் கல்பினில்
ஹறக்கனைக் கண்டந்த அக்கரைக்காணலாம் (லா)

சரணங்கள்.

1. வாகா ஹறதீது குதுசியில் வல்லவன்
வண்மையுரைதனை கேளும் யாரும்
வந்தனஞ்செய்தவன் சிந்தைதனி லென்னை
வைத்து திக்கிர் செய்தால் ஆளும் ஒரு
யேகன் நபுசினில் லாகும்படி யென்னை
என்றுந் திக்கிர்செய்வே னும் பின்பு
யேந்தக்குழுதனில் என்னை திக்கிர் செய்யில்
யேத்தக் குலத்துரை மீளும்
மர்கையொரு ஜாண்முடிகி லொருமுழம்
வந்துமுடுக முழமு முடிகினல்
மோகமொரு பாவம் நானும்முடுகுவேன்
மெள்ள நடந்திடில் தெள்ளி தோடிவாரேன் (லா)

2. ஆதிரெசூலே அலியாருரை கேட்ட
ஆகம் ஹறதீது கேள் மானே என்
அல்லா பெரியவன் றாதரிரசூலே
அவனின் முடுகிடுந் தானே இன்னும்
சோதி இடமெத்த சூழும் வரிசையாய்
சுத்தவடியார்க்குந் தீனே அவர்
சொந்தமாய் லேசாய் நடந்திடும் பாதையை
சொல்லி யருவியுங் கேனே
நீதியலியார் நெறியாக கேட்டிட
நேருள்ள நன்னபி சொன்னதருமை கேள்
நாதன் திக்கிர் தன்னை ருசியம் பராசியம்
நாடோரும் செய்வதை நத்திபத்திக்கொள்ளும் (லா)

3. நாயன் ஹறதீது குதுசியில் சொன்னதை
நன்றாக கேளுங்கள் பாரில் மனு
நாடியென் றன்னை நினைக்கு மனந்தன்னில்
நானவன் கூடவே நேரில் வெகு

தூயநபிமிகு ராஜினிரவயில்
தொங்கும் மருஷொளித் தூரில் ஒளி
துன்னும் மனிதனைக் கண்டு ஜிபுரீலே
தோற்றம் ரசூல் மலக்கோரில்
ஆயும்ரசூல்நபி யல்லஅவர்மெத்த
அண்டி முடுகு மலக்குமல்ல நிழல்
சாயலில்லாநபி தங்களும் மத்தினில்
சந்ததம் நாவில் தண்ணீர்போல் திக்கிர்செய்வோன் (லா)

4. யாபியிமாமும் இபுனுஅரபியும்
யாதாயெழுதிடும் ஏட்டில் இதை
யாராலு மேழுபத்தாயிரம் ஓதிடில்
யாதனை தீயெவிட் டோட்டில் வெகு
சாபா நரகத்தை விட்டுஉரிமையாய்
சந்தோஷமாங்கரை மோட்டில் பின்பு
சாலிஹொருவர் விலாயத்தி லன்னையை
சாரநரகத்தின் வீட்டில்
தாபதர்கண்டு சலித்தழுது வெண்ணி
தானுரையேழுபத் தாயிரம் தஹ்லீலை
தீபரமண்ணைக்கி தன்னூதியா னுயன்
தெரிய உரைவன்னி விட்டு சொர்க்கஞ்சேரும் (லா)

5. ஆசைநபி சொல்லும் மூசாகலிமுல்லா
ஆதியிடம் கேட்ட தஞ்சி வெகு
ஆவல் திக்கிர் செய் யரிய வெனக்கு நீ
அருமையா வொன்றனுள் கெஞ்சி யின்னம்
நேசக்கலிமாவை நீயோது மென்றவர்
நேருஇறை இடம் கெஞ்சி உந்தன்
நேறடியாரதைச் சொல்லி வருவதால்
நீ சொந்தமாயருள் கொஞ்சி
மூசாவேயென்றுரை முன்னேழுவானம்
முழுதும் படையென்னை யன்றி மண்ணேழதில்
மூசல் குழுவெல்லாம் மோர்தட்டில் தேக்கிட
முற்றும் திக்கிர் தட்டு மெத்தக்கனத்திடும் (லா)

6\. இமாமுல் குஷைரியினில் முத்தரீக்குனில்
இருக்கும் ரிசாலாவில் பாரு அதி
லேகன் திக்கிரத்து யோகம் விலாயத்தை
இழுத்திடும் கடிவாள மேரு ஞெறும்பும்
தாமாவுருஹுவின் தன்ரும் பாதை காட்ட
தாராபதி யொளினேறு நிஜ
தருகீக்கெனும் இருதத்தை நிரம்பிடத்தானே
பிதாயத்தின் வேறு
தேமா பொழிந்திடும் திருஆதி ரெங்கத்தில்
தீனோர்கள் போற்றிடும் சேக்காதி ராவுத்தர்
நாமாயுரைத்திடும் பிள்ளை மீறுஹுசேன்
நானுங்கலிமாவை நாவிலருளாமீன். (லா)

இராகம்-தேவமனோஹரி-ரூபகதாளம்.

பல்லவி.

எதுவேணும் கேள் மனதே உனக்
கெதுவேண்டாம் சொல் மனதே (எது)

அநுபல்லவி.

கதிதருந் தலமென்னும் மக்கமதிலரசு
கடத்துமிரசூல் வேணுமோ நானுஞ்
சதமென்று உலகத்தை நம்பியே இருந்திடும்
ஷறஹில்லார் செயல் வேணுமோ இதில் (எது)

சரணங்கள்.

1\. நிஷியம் யீமானைத் தெரிந்துபா லருந்திடும்
நெய்நாரின் செயல் வேணுமோ அணுவு
அச்சமா யீமானை காக்காமலிருந்திடும்
அறிவில்லார் செயல் வேணுமோ இதில் (எது)

2\. அஞ்சு கலிமாதனில் மிஞ்ச நயமிருக்கும்
அவ்வல் கலிமா வேணுமோ கெட்ட
கஞ்சா அபினருந்தி பஞ்சபாதகஞ் செய்யுங்
கள்ளுக்குடியர் வேணுமோ இதில் (எது)

3\. நாயன் மலக்குவேதம் மிறசூல் கியாமம் நாளை
கலவு தீதவன் வேணுமோ வெகு
தூயவனீமானில் பருலாரு தன்னையுந்
துதியாதோர் செயல்வேணுமோ இதில் (எது)

4. இசலால் பருகு அஞ்சில் இறையவன் தனக்கஞ்சி
என்றுந்தொழுவோர் வேணுமோ கெடும்
நசலா மவுத்துவருந் திசையை யறியாமலே
நலவை விடுவோர் வேணுமோ இதில் (எது)

5. கர்த்தனருஷில் பேசி முத்திநெறியாவந்த
கலிமாத் தொழுகை வேணுமோ தினம்
புத்திமிகச்சொல்லினுஞ் சுத்தமாவணங்காத
புலையரின் செயல் வேணுமோ இதில் (எது)

6. யீமானனுவிருந்து இறையைப் பயந்து அஞ்சி
இணங்குந் தவத்தோர் வேணுமோ நல்ல
சீமானெனச்சொல்லியே ஒருவர்க்கு மீயாத
சிறப்பில்லார் செயல் வேணுமோ இதில் (எது)

7. அய்யாறு நோம்பையு மெய்யாயுகந்து வைக்கும்
அன்பரின் செயல் வேணுமோ இந்த
பொய்யா மூலகுதன்னை அய்யமில்லாமல் நெஞ்சில்
பொருந்துவோர் செயல் வேணுமோ இதில் (எது)

8. காசுபணமிருந்தும் ஹஜ்ஜு செய்யாதிருக்கும்
கடுநெஞ்சர் செயல் வேணுமோ கெடுந்
தோசியென்றே தீயில் சுருண்டு அதாபுபடும்
சுகமில்லார் செயல் வேணுமோ இதில் (எது)

9. ஏவல் விலகல்தைக் கேட்டு அறிந்து பயந்
திடுவோரின் செயல் வேணுமோ பெரும்
பாவமென்றே எண்ணி பல்காலிரவுபகல்
பாதகச்செயல் வேணுமோ இதில் (எது)

10. எங்கள் நபிபேர் கேட்டு தங்குதடை இல்லாமல்
இயம்பும் தறாது வேணுமோ விட்டால்
துங்க நபிநாயகம் நாளை மஹுஷரிலே
துணையிலா தயர் வேணுமோ இதில் (எது)

11. அல்லா இரசூல் சொல்லை பயந்து புவி இருக்கும்
அருமையுறுவோர் வேணுமோ நபி
சல்லல்லா சலவாத்தை சலித்து விடுத்துக்கெடும்
சார்பிலார் செயல் வேணுமோ இதில் (எது)

12. மேறு மணியாவந்து மீருஹு—சனை யாழும்
மேன்மை இரசூல் வேணுமோ நல்ல
பேருபெறவே அமல் செய்யாமல் கெட்டிடும்
பேதகர் செயல் வேணுமோ. இதில் (எது)

பதம்-இராகம்-இந்துஸ்தான் மெட்டு.

பல்லவி.

ஹாதியின் இரசூலெனும் கருணைகரெ கடிகமள்பதம்
யடிவினையற அடியனுக்கருள்வீர்
காதல் வேதை சுார்ப்பீர் யான் யேழை (ஹாதி)

அநுபல்லவி.

நீதியின் ஹதீதோதிடும் நெறி நாதரே
நதிவிரலதில்—அதிபெருகிட—கதியெவர் பெருகும்
நண்பர் பண்பா நறைபுகழ் தந்தீர் (ஹாதி)

சரணங்கள்.

1. ஆயரின் குலமாதெனும் ஹலிமா மெய்யில்
அயர்வலமுலை—யமுதறிந்திட—அதிசயம் விளைத்தீர்
அங்கு கண்டே அவர்வினையழித்தீர் (ஹாதி)

2. கானகந்தனில் கானவர் வலை மானதை பிடித்து
கணையகன்றிட—பணிசலாஞ்சொல்ல—பிணிதனை கொடுத்து
கன்று வந்தே காரணமெடுத்தீர் (ஹாதி)

3. வானவர்க் கரசானவர் சிபுறீலுமே
வஹிகொடுவர—மனதையம்பெர—வாதருஷிருந்தீர்
வந்து சிந்தை வாதையை யகத்தீர் (ஹாதி)

4. மாதவம்பெரும் வேதிபரெனும் கைபர் வாழ்பவன்
மாமசலாவும்—மாயிரம்பொருள்—மாசறஉரைத்தீர்
மானம் மேன்மை மாதவந்தருவீர் (ஹாதி)

5. காதல்கொண்டிறை வேதபோதகனும் மீருகுசன்
கதிபெறவிரு—பதியினில்நலம்—கதிர்பலன்தருவீர்
கார்த்து பார்த்தே கைரருள் செய்வீர். (ஹாதி)

இன்னிசை.

வஞ்சியெனும் பெண்ணகமே வாரிமலே கானகமுங்
கஞ்சமலர் வாவிகளும் கதிர்மயில்கள் சூழ்ந்துவிழுந்
தஞ்சமதீனு வாசம் தங்கும் றவுலாவினிற்போய்
அஞ்சலிசெய் தேயடியில் அஹ்மதை யழைத்து வாரீர்.

பதம் இராகம்-டிமுமா மெட்டு.

பல்லவி.

வஞ்சியே வென்னே யாள வள்ளல்நபி வருவாரோ

அநுபல்லவி.

மிஞ்சியே கெஞ்சுரேனுன் அஞ்சலிசெய்
தழைத்துவாடி (வஞ்)

சரணங்கள்.

கஞ்சமலர் வாவிசூழுந் தஞ்சமதினுவில் வாழும்
இஞ்சொல்முகம்மதரின் இணையடிகண் டழைத்துவாடி (வ)

1. அத்தனொளி தனிலமைந்தோர் நித்திலமெனச்சமைந்தோர்
சுத்தநபி பாதங்கண்டு சொல்லிக்கெஞ்சி யழைத்துவாடி (வ)

2. பொட்டை யிபுலீசு மெய்யால் தட்டழியும் பாவி கையால்
யெட்டிப்பிடித் தேபதத்தை இருகண்ணில்வைத்தழைத்து
[வாடி (வ)

3. மானின்பிணே யாகநின்று மாய்விலாது மீட்டுதருந்
தீனவரை காத்துவரும் செய்நபிஇங் கழைத்துவாடி (வ)

4. காரூர் கவிந்துநிற்கும் கவிவாணரால் புகழ்ந்துரைக்கும்
மார்மீறு ஹாசைனின்மஹ்மூதைக்கண்டழைத்துவாடி (வ)

இன்னிசை.

கண்ணிலடங் காப்புதினங் காட்டிக்கலி மாவதனே
யெண்ணிலடங்கா நரர்க்கு யீடேத்தஞ் செய்குவரே
மண்ணிலிருந் தேயரசு மதினுவில் செய்துவரும்
அண்ணலிரசூல் நபியே அடியனுக் கிரங்கிடுவீர்.

பதம்-இராகம்-இந்துஸ்தான் மெட்டு.

பல்லவி.

அண்ணலிரசூலே யென் அண்ணலிரசூலே
அருள்வீரெனக்கிரங்கி (அண்)

அநுபல்லவி.

வண்ணமலர்ச் சோலே சூழுந்
தண்ணலர் மதீனம் வாழும் (அண்)

சரணங்கள்.

1. கோதிலான் ஞேழர்திரு கொற்றவரே யுமது
மேதினிதோ யாப்பதம் மேன்மறையெல் லாம் புகழ
யாதுவைத்தே நான்தினம் ஆதரிக்க விதுதருணம் (அண்)

2. வரிசையாய்ப் பரிசளித்த மன்னவன் ஹபீபரசன்
பிரிசமு டன்சுமையைப் பிரட்டுச் செய்யு மபுஜஹீல்க்கு
துரிசர நெடுங்களுத்தன் துலங்கவுரைத்திலங்கவந்த (அண்)

3. அருகின்மேல் சிரசுதொடும் அருள்பதம் தஹா த்தருகேழ்
பரிசெனுங் காரணரே பத்தியுடன் வெற்றிபெற
தெரிசனந் தந்தருளுந் தீன் கலிமாப் பயிர்விளைத்த (அண்)

4. மேகங்கவிகையிட மெய்யில் கஸ்தூரிமணம்
காகம்பருந்தருந்தக் காபர்களை வென்றிடுந்தீன்
யோகம் பெறவேநயம் முதவியைத் தந்தேயருளும் (அண்)

5. உலகில்மனு வாகவந்த உலகமெல்லாம் ஓர் நபியாய்
உடையவனின்றாதரென ஒருவனருள் தூதரென
அலகைஜின்யீமான்கொண்டு அம்புலிவந்தெதிர்பேசுவான்

6. மனமகிழ்ந் துமதுமீதில் மருவுஞ்சல வாத்தையோதி
தினமதில் கவியுரைக்க செந்தமிழால் புகழும் பைய
லெனுமீரு ஹஸனுக்கு நல்லின்பமுடனுண்டருள்வீர் (அ)

கலித்துறை.

எங்குமெய்ப் பொருளாய் இலங்கிடுஞ் சோதி இறைவனருள்
பொங்குமெஞ் ஞானச்சுடரொளி பலர் போற்றிவருந்
திங்களாமைத்து திருமக்கமாந் திரு மதீனம் வாழும்
தங்கள் பதத்தினைத் தந்தருள்வாய் சர்க்குரு நபியே.

பதம்-இராகம் இந்துஸ்தான்-ஆதிதாளம்.

பல்லவி.

தங்களின் பதம் தனை தந்திடும் நிதம் திசை
யெங்கும் வீசும் மான்மதங்கள் துங்கநபியே (தங்)

அநுபல்லவி.

சங்கை சூழ்நிலம் வணங்கு மருள்தலம் அர
செங்கு மக்கமாநகரை யாழும் யாரசூல் (தங்)

சரணங்கள்.

1. ஏகநேரதால் இசுறுயில் வாரதால் உயிர்
தாகமாக வாங்கும்போது யாது செய்குவேன். (தங்)

2. தேகமுறங்கியே உயிர்போகுந்திரிகியே நல்
பாகமா கலிமா தந்து வாகாயாளுவீர் (தங்)
3. கார்த்திடப்பெருஞ் சலவாத்தினைத் தரும் எனை
பார்த்து ரெக்ஷித்தாளுஞ் சக்க ருத்து வேளையில் (தங்)
4. தலமதிலுமை துதிசொல் மீறாஹுஸன் தமை
நிலமதில் ஜெயமுந்தந்து நலமதாகவே (தங்)

இன்னிசை.

பஞ்சப்பயலாய்ப்பிறந்து பாவமிகச் செய்தாலும்
அஞ்சாதிருக்கவெனை ஆதரிப்பா ரில்லையென்று
தஞ்சமதி ளுவில்சென்றே சாபல்லியங் காண்பதர்க்கு
கஞ்சப்பதந் தந்தருளுங் ஹக்கனிற சூல்நபியே

பதம்—இராகம்—டிருமா மெட்டு.

பல்லவி.

கஞ்சப்பத மெப்போதையா கருணை கருணை தந்து
தஞ்சமருளும் வேதையா (கஞ்)

அநுபல்லவி.

மஞ்சுங் கிடைமறுவும் மாமலைசூழ்ந்து
மயிலன்னம் பாடிடுங்
குஞ்சுலாவுங் காவுசூழ்
கோனகராம் மக்க ருஜகுலத்தரே (கஞ்)

சரணங்கள்.

1. எங்கும் நபிகட் கரசரே ஆலம் ஆலத்துக்கெல்லாம்
தங்குமேலறி வுல்லாசரே
துங்கமுறுசல் நேசரே இகம் இகபரமும்
பங்கமில்லாது வாசரே
கங்குலறுத் தேயொளிவுசெய்
கத்தனருளிய வித்தக நாதரே
சங்கை பதத்தை எனக்கருள்
தானவன் தீன்மணி மோன முகம்மதே (கஞ்)
2. அடியேனின் பாவ மீறுதே குடி குடி இருக்கும்
படிமீதில் தௌபா சோருதே
நெடியோனில் ஆசை யேறுதே தங்கள் தங்களின்பதங்
கடிகமழ் வாசம் நேருதே

வடிவுட நேரிற்றெரிசனம்
வஞ்சனிபுலீசு பஞ்சாய்ப் பறந்திட
சடிதி யடிமைக் கிறங்கியே
சான்றோரில் சேர்த்தாளுஞ் சற்குண வேதரே (கஞ்)

3. காலமெல்லாம் வீணாகுதே பேராசை பேராசை கொண்டு
ஞாலமில் நாளும் பூணுதே
கோலம் பலதாய் காணுதே பூலோக பூலோக வாழ்வை
ஞாலமெனவே தோணுதே
பாலமுஸ்தகீம் நாளே
பத்தி நடத்திட சித்திரமாமணக்
கோலமஹூ மூதினிலேறிடுங்
கொத்தவர் கூடவே சித்தம் புரிகுவீர் (கஞ்)

4. ஆழிசூழுலகு மீதினில் பொது பொதுத்தலமாய்
ஊழியுடையோன் னூரினில்
கீழில் வுதித்து மதீனில் அரசாண்ட அரசாண்டருள்பின்
ஞாளில் பிறந்திடுந் தீனில்
தாழிற்கிடந்து மீறுஹூசைன்
தண்டமிழ்ச் செய்யுந்
தமியனுக் கன்புற வாழும்படிக்கருள் செய்யவும்
வந்து முகம்மதே சொந்தமாய் யாளவே (கஞ்)

இன்னிசை.

மஹ்மூ தடையவனு மாறுதுறை மக்காமன்
மஹ்மூ தெனுந்தலத்தில் மன்றாட்டஞ்செய்தருளும்
மஹ்மூதெனு நபியே மாநகரில் வெள்ளானை
மஹ்மூதி லேபவனி வருகுமிற சூலரசே.

பதம்-இராகம்-இந்துஸ்தான் மெட்டு.

பல்லவி.

மஹ்மூதே மலர்ப்பாதமருள் தாருமே (ம)

அநுபல்லவி.

மாசறவே சேரவருள் மானமதைத் தாருமய்யா (ம)

சரணங்கள்.

1. தேகமிலுறையுந் தீவினை யோட்டி தினை
யோகம் பெருவதர்க்கு யறிவதைக்காட்டி
பாகமதைத்தந்து யீமான்
யோகனைக் காண்பிக்கும் ஐயா (ம)

2. நிசுஷய மென்னுளும் நர்ச்செயல் தந்தருளும்
நிலையில்லாப் பாதகனை நினைவில் வைத்தருளும்
பக்ஷமதாய் யேழைமுகம்
பாத்தருளைத்தாரும் ஐயா (ம)

3. நாயனின் ஒருமூகை நபில்களை விடுத்தேன்
நாதா நபி சலவாத் துரைப்பதைக் கெடுத்தேன்
மாயனிபுலீசு மைபல்
வாருதெனைக்காரும் ஐயா (ம)

4. பொல்லாத வைம்பொறிகள் புனலதை விடுத்து
பொங்கும் அருள் கலிமா புகழ்தனைக் கொடுத்து
சல்லா அலைக்கும் அல்லாஹ்
சன்னதிதந் தாளும் ஐயா (ம)

5. வானவர்க்கரசர் விருத்தனுவந்து
வாசநபி முட்டினில் சேர்த்துவைத் திருந்து
தீனதைச் சிறந்து கேழ்க்க
சிந்தைதனில் தேற்றும் ஐயா (ம)

6. மாசற வப்துல்லா மகவா மஹ்மூதராம்
தாசன் மீருஹுசைன் கெஞ்சும்
தனியனே காத்துமிக
தண்டமிழ்க் கிறங்கும் ஐயா (ம)

பதம்-இராகம்-தெம்மாங்கு மெட்டு.

பல்லவி.

வேதா காதங்கமழ் வீசும் பதத்தை தாதா
வேதரே நாதரே போதரே தூதரே
ஆதாரம் பதத்தைத் தாரும் (வேதா)

அநுபல்லவி.

தேகங்கமழ்ந்து வீச பல
தேசத்தரசர் வாழ்த்த
யோகந்தரும் நபியை யென் னுகமதில் காண்பதெப்போ

சரணங்கள்.

முத்திரைசித் தாயுதித்த முதல்வனருள் நேசரே
முற்றிலும் பையல்கிறங்கி முத்திதரும் வாசரே
அத்தனொளி யுற்றுவருஞ்
சித்ரமயில் வேஷரே
ஆலமில் மேலவர் கீழவர் போற்றிடும்
ஆரணக் காரணப் பூரணத் தாள்தரும் (வேதா)

1. முன்னே னொளிவில் சமைந்து
மூவுலகும் போற்றும் நபி
மன்னவரைக் கண்டறிந்தேநான்
மகிழ்ந்தடி பணிவதெப்போ
நாளே நபிமார்கள் தங்கள் நபுசிஎன்ற பேரே
யேழையடிமைக் கிறங்கி உம்மத்தி என்பாரே
ஆளவெனே வேளை தனில்
அன்னேர மொருவரில்லே
ஆனவனேடு நெரிங்கி சுஜூதிடுந்
தீனதயாளர் சிறந்த பதந்தரும் (வேதா)

2. உலகுதனில் யானறிந்து தங்கள்
உதவிபதங் காண்பதற்கே
யிலவுகாத்த கிளியாகாமல் யான்
யெப்போ கண்டுளமகிழ்வேன்
காசினியி லுங்கள்திரு காரணங்கள் யாது
கண்டுகொள்ள வேண்டிட கணக்கிலடங்காது
பேசிவரும் பையலிவன்
பெரும்பாவி யாகிலுஞ் சொன்ன
பேதையன் புகழ்தனை ஆதரவாகிட
பாதையைத் தந்தருள் சீதப்பதந்தரும் (வேதா)

3. கல்புகனி யாகவந்தோர் கொடுங்
கானகத்தில் நீரழைத்தோர்
நல்வழியைத் தந்தருள்க நபி
நாதா பதங்காண்ப தெப்போ
பூலோக வாழ்வானதெல்லாம் பொய்யென்பது மெய்யே
சாலோக பதவியொக்க சாயுச்சியமுஞ் செய்யே

பாவமுகஞ் சறகுநலம்
பகரு மஃ்ளி பாவென்றுனும்
பலன்பெற மீறுஹூசன் றனக்கருள் புரிந்திட
பல்புகழ்க்கிறங்கியே பதியினில் தாள் தரும் (வேதா)

பதம்-இராகம்-பந்துவருளி.

பல்லவி.

நீயருளா என்னை யாளா பதந்
தாயென வுதவுந் தயாளா (நீயரு)

அனுபல்லவி.

தூயவன் மதீனாவில் வாழா உமை
நேயமா யுகந்திடுந் தோழா (நீயரு)

சரணங்கள்.

1. அருவரு விஷமுண்ட வாயா அது
வொருபோது மிடரில்லை தூயா (நீயரு)
2. சருவ பிராணிக்குஞ் சகாயா—தங்கள்
சரண கெதியைத்தரும் நேயா (நீயரு)
3. இறையவனருள் படி தூதா—அக
முறையுயிர் வாங்கும்போ தேதா (நீயரு)
4. மறைகவிமா வெனக்கு தாதா—திசை
நறை கமழ்ந்திடும் நபி நாதா (நீயரு)
5. சுரத்தினில் புனல்தருங் காலா—நல்
வரத்தினற் கருள்தரும் பாலா (நீயரு)
6. கரத்தினைப் பொருத்தனு கூலா—ஒரு
பரத்தினைக் கேட்கும் நகுலா (நீயரு)
7. நாளு மடியவனைப் பார்ப்பாய்—புவி
வாழுமீறுஹூஸனைக் கார்ப்பாய் (நீயரு)
8. மீளுஞ் சுவர்க்கமதிற் சேர்ப்பாய்—யென்னை
யாளு மிறையோனிடங் கேழ்ப்பாய். (நீயரு)

பதம்-இராகம்-டிருமா மெட்டு.

பல்லவி.

வந்தோங்கள் கந்தப்பதமல ரெந்தன் சிந்தைதனிலருளும் வந்

அனுபல்லவி.

சந்தணமகில்செறியுந் திருமதினம் வாழ்
சுந்தர நபிகளின்மேல் நபியே (வந்)

சரணங்கள்.

1. போத்தவே யெங்கினுங் காத்த ரெசூல்
சாத்தவே சுருதியில் வாய்த்த ரெசூல்
ஏத்தவே வானவர் காத்திமுன்னபி திரு
நேத்திர மறிவென்னை பார்த்தருள்வீர் (வந்)

2. ஆர்க்குங் கலிமாதனை சேர்க்கருளும்
கேழ்க்கு டீறிவுகளெல் லோர்க்கருளும்
பார்க்கவே இகபரங் கார்க்கவும் நம்பியே
தீர்க்கமாயென்னையாள நோக்கருள்வீர் (வந்)

3. தானவ னுரைத்திடும் ஆபத்தினில்
மானபி எறிந்தமண் பதுருதனில்
கோனவ னெறிந்தனவே நவம் புரிந்திடும்
மானமதைக் கொடுத்தா னருள்வீர் (வந்)

4. சிந்தையில் வந்திடும் யென் கோரம்
சந்தை கலையும்போல் அந்திநேரம்
சொந்த மீறு ஹுஸைனுக் கந்தப்பதமலரை
பிந்தா துதவும்பலன் தந்தருள்வீர் (வந்)

சிங்கா சிங்கி பாட்டு.

ஆதி திருவொளி வானதிலே பிறந்
தாரணப்பேராக வந்தவராம் சிங்கி சிங்கி
நீதி நெறியா யுரைத்திடுவா யெங்கள்
நேச குலச்சிங்கி வல்லியரே

முடுகு

சோதியறிவு தங்கி சுரர்தகழ் மதீனம் வாழ்
ஏதமணுகாநபி நாதரெனும்
இரசூல் முகம்மதுவே ஓ ஆ யெந்தன் சிங்கா (ஆதி)

1. மேன்மைதருஞ் சொர்க்க வாசல்படி மேலாய்
மேவுங்கலிமா வரிஇரண்டாம் சிங்கி சிங்கா
ஆன்மாவுறும் ஆதம் கீழ்வரி யாரென்ன
அன்னவருறென் றுரையென் சிங்கி சிங்கா
வான்புவி ஜின் மனுக்கள் வாரி இரவியாவும்
தீனபி காரணத்தால் ஆனதென
திருவாய் முகம்மதுவே ஓ ஆ (ஆதி)

2. யேகனுரைப்படி வானவர் கோன்வந்தங்
கேழுவானங் கடந் தாதிமுனம்
மோகமுடன் மிகுறுஜுக்கு யேகிடும்
ஆகமத்தைச்சொல் லென்வல்லி சிங்கி சிங்கா
ஆகம் புருக்கில்யேறி அறஷில் முசியம் பேசி
யோகந்தொழுகை நயந் கொணர்ந்திடு
முண்மை முகம்மதுவே ஓ ஆ (ஆதி)

3. மக்கநக ரப்துல்லா தரும் மாமகரா
ஞமீனு ரீன்ற நபி இரசூல்
தக்கப்பதந்தனை மெய்க்கு மீருஹுலை
னுக்கருளாரென் றுரையென் சிங்கி சிங்கா
துக்கமதனைப் போக்கும் யெக்காலம் வாழச்செய்யும்
திக்கீர்தனை முழங்கவே கிருபை செய்யுந்
தக்கோன் முகம்மதுவே ஓ ஆ (ஆதி)

பதம்—இராகம்—டிருமா மெட்டு.

பல்லவி.

ஆலம் முழுதுங் கண்ணும்
முயிர் பதியே ஆல்
மறை தேறி வுறை
அக மகிழ் நபி பதந்தேடி (ஆல)

அநுபல்லவி.

காலமும் மிறை நெறியைக்
கடத்துங் கொண்டல் கவிகை
கந்தங் கமழ் வீசு மெங்கும்
சிந்து மதீனம் றசூலே (ஆல)

சரணங்கள்.

1. தேடும்பொருள் தக்கவுற வார்கள் சுகி மக்கள்வாழ்வுந்
தேவியர் தரணிசெம்பொன் னெல்லாம் மாய்கையே
ஆடும்பல சூஸ்திரங்கள்
அவனியில் காண்பதெல்லாம்
அத்தன் உஜூதென் றுரைக்குக சுத்தன் சாய்கையே
நாடுங்கலி மாப்பொருளென் நன்மனதில் கண்டறிந்து
தேடுமுசூல் வாசல் தந்து
தூயனென வுகந்தருள் (ஆல)

2. துஞ்சுமுனம் மஞ்சுநேரங் கெஞ்சித்தெழு காதிருந்தால்
தூயனிடந் தவஞ்சேரத் தாயமில்லையே
கொஞ்சமேனும் அஞ்சி இறை
நெஞ்சிலிருக் காதிருந்தால்
கோதர சுவனம்பெற ஞாயமில்லையே
வஞ்சனிபுலீசுவலை வீசுமயக்கம் நீக்கியே
விஞ்சைமேவுந் தவமருள் நெஞ்சகந் தனையறிய (ஆல)

3. ஏகனுரை யேவலெந்தன் தேகமுயிர் வாங்கும்வேளை
இசுறுயீல் வந்திடும் மன்னேரங் கெஞ்சுவேன்
கோகோவென பந்துஜனம் மக்களெல்ல வருங்கூடி
கொந்தழல் விழிநீர் சிந்த கெந்தி அஞ்சுவேன்
சாகவுயிர் போகும்போது தாகந்தீர்ந்து நாவுதனில்
பாகமாக் கலிமா தந்து
பண்புநெறி தந்தருளும் (ஆல)

4. மேதகம் பெருங்குறைஷி மாதவமணி கொழிக்கும்
மெய்க்கும் மக்கப்பதிவாழும் மிக்க குலமே
ஆதரவப் துல்லாதவம் போதகர் ஆமீனுரீன்ற
அன்புறமிறையவனின் நண்பர் பலமே
சீதமுகம் சசியொளி சிந்து மஹ்மூதர் துதி
ஓது மீறு ஹு ஸைன் தமி
ழுற்றிடும் பாவுக்கிறங்கும் (ஆல)

பதம்-இராகம் தேவமனோஹரி-ஏகதாளம்.

பல்லவி.

ஜென்ம நாதாவே ஜீவகாருண்யந் தருவீர் (ஜென்)

அநுபல்லவி.

நான்மறை போற்றிடும் நன்மதினா திரு
நாதா மஹ்மூதே தங்கள்
தேன்மலர்ப் பாதம் சிறந்து தந்தேயருள்
தேகங் கடந்தேற (ஜென்)

சரணங்கள்.

1. உற்றாரிருந்தும் உறவோ ரிருந்தும்
உறைமக்கள் தானிருந்தும் புல
மற்றோர் பயனில்லை வந்து சக்கறாத்தில்
வாதையைத் தீர்த்தருள்வீர் (ஜென்)

2. மன் றப்புக்க வென்று முன்கர் நக்கீர்வந்து
மாட்டும்போது கசையால் அப்போ
யென் றப்புத் தோழ ரவ்வேளை இரங்கிடும்
யேந்தலிரசூலே (ஜென்)

3. ஜெகமீதிலிருவினை செய்திடும் அமல்களை
சேர்த்து மீஜா நிறையில் ஜென்மஞ்
சுகமாக நன்மைத் தருசு கனக்கவுஞ்
சூழ்ந்தென்னை யாண்டருள்வீர் (ஜென்)

4. வெந்து பெறியுந்தீயின் விந்தை நரகமதில்
வீழாமல் காத்தருளும் ஒளி
இந்து மின்போல் பாலம உந்து பதவி தீதார்
யிறை ஷபாயத் தருள்வீர் (ஜென்)

5. தாரா பதிவிலகுந் தவமக்க நகர்வாழுந்
தரு அப்துல்லா மகவாய் வந்த
மீருஹுஸைன் தமிழ்க்கு மிகவா யிரங்கிடும்
மேன்மை முகம்மதுவே (ஜென்)

பதம்-இராகம் கல்யாணி-ஏகதாளம்.

பல்லவி.

வந்திக்க வேண்டுமெய்யா நபிபதம்
சந்திக்கத் தோன்று மையா (வந்)

அநுபல்லவி.

சிந்திக்கச்செய்திடுந் திருமக்க மதீனவாழ்
தேவதூதர் வந்து தெரிசிக்கும் அஹ்மதை (வந்)

சரணங்கள்.

1. நாலுவேதங்கள் பல நாதங்கள் போற்றிடும்
நன்மைக் கொரு லெக்ஷம் நல்மக்கந் தங்கிடும்
பாலனுயிர் தன்னை மீட்டுக் கொடுத்திடும்
பாத்திப ரெந்தனைக் கார்த்து ரெக்ஷித்திடும் (வந்)

2. துஷ்டர்கள் தன்னைத் துரத்தித்தறிக்கவுந்
துசுமனிபுலீஸைத் தூருயொதுக்கவும்
கட்டுமெட்டாக தீன் மார்க்கத்தைக் கார்க்கவுங்
கார்க்கும் நபியிடங் கத்தனுரைக்கவும் (வந்)

3. ஆறுலெக்ஷம் ஹாஜி அறபாவில் குறைந்திட
அண்டர்கள் மானிட வுருவாய் நிறம்பிட
தேருமதினா ஜியா ரத்துச் செய்திட
தேகம் பிறந்திவன் போல் நலந்தங்கிட (வந்)

4. நேருக நாயனின் நேசர் நினைக்கவும்
நேரம் ஷபாஅத் தெனைவந் தணைக்கவும்
மீருஹுஸன் பாட்டை மேன்மை பிணக்கவும்
மேவும் நபியருள் தங்கி மன்னிக்கவும் (வந்)

பதம்-இராகம்-தோடி.

பல்லவி.

எங்கோனருள் வேதா நபி தாதா பாதமே

அநுபல்லவி.

தங்கும் மதீனா வாழும்
தனியோன் திக்கிர் நாளும் அதில்
தன்னோன் மறை கன்ன லுறை பன்னும் போதரே (எங்)

சரணங்கள்.

1. எவ்வேளையும் மஞ்சுவேன்
எந்துயரம் கெஞ்சுவேன்
எங்கள் றசூல் அங்கம் யென்னிருதயத்தில் தங்கம்
எல்லாம் ஜெயம் சொல்லால் நயம் நல்லா தாருமே (எங்)

2. அகமகிழ் வாடியே
அனுதினம் பாடியே
அடியேனுக்கிரங்கி யென் ஆசைமிகப் பொங்கி
அலையாதெனைக் கலையா மலே பலனைக் கொடுப்பாய் (எங்)

3. மான்மதம் வாசரே
மன்பெருந் தாசனே
மையல் மீறுதே தம் மன மீருஹுஸனிதம்
மகிழ் வந்தே புகழ் தந்தே தமிழ்சிந்தை யாள்குவீர் (எ)

பதம் இராகம்-சர்வேரி-ஆதி தாளம்.

பல்லவி.

திரு முகம்படதே யுங்கள் குரு மனமிரங்கியே
திருநெறி தந் தருள்வாய் (திரு)

அநுபல்லவி.

மருவிரி வாவி சூழும் மதீனா நகரில் வாழும்
குருவருள் தந்தேயிந்தக் கொடியேனை ரெக்ஷித்தாளும் (திரு

சரணங்கள்.

1. நாலுவேதமும் னூரு நவிலுஞ்சுஹுபுகளும்
நாகரீகங் குறுனில் நல்லடங்கிப் புகழும்
காலமதில் வோதவுங் ஹக்கின் அமல் அருளும்
காக்ஷி தந்து நல் கெதி மோக்ஷந்தரவருளும் (திரு)

2. ஈமான் இசுலாமின்னம் யோகம் தவுஹீதுவெல்லாம்
இறைமட்ஃரி பாவின்றும் யேகன் தீனின் பருலாம்
தாமா வகையறிவைத் தந்து சிந்தை தெரியும்
தாயகமா யெனக்குத் தக்கோர் அமல்புரியும் (திரு)

3. மன்றுனுரைப்படியே மவுத்து வரும் நாளையில்
மாயனிபுலீசென்னை மயக்கமுறும் வேளையில்
பன்னுள் பவமகற்றிட பந்துக் கலிமாத்தாரும்
பாத்திப ரும்மையன்றி வேற்றோரில்லையே வாரும் (திரு)

4. ஷறஹு முதல் நாலையும் தவறவிடாமல் பாரும்
சற்குண ரெக்ஷகரே ஜென்ம சாபல்யந்தாரும்
பொறை மீறுஹுஸன் தமிழ் பேணி புகந்து காரும்
பீரே முகம்மதுற்ற சூலேயென் பிழைபொறும் (திரு)

பதம்-இராகம்-இங்கிலீஷ் நோட்டு மெட்டு.

பல்லவி.

சந்ததமுங்கள் பதத்தை சிந்தையில் நினைத்து போற்ற
எந்தனுக் கிரங்கியருள் தந்து மகிழ்ந்தே
எந்தனுக்கிரங்கியருள் தந்து மகிழ்ந்தே (சந்)

அநுபல்லவி.

இந்துமின் புறுக்கிலேறி யேகனருஷில் பேசியே
வந்த வழமையருளும் வள்ளலிறசூல் நபியே (சந்)

சரணங்கள்.

1. அஹதிய்யத் திலாஹுதனில் வஹுதத்து முகம்மதிய்யா
பகுத்திடும் வாஹிதிய்யாவில்—பலபொருள்
கொடுக்குமெய் யாதகமை அஹியான் தாபீத்தில்
தனக்குகந்ததைத் தந்தாளும் இகபரமில் ஹஜ்ஜநில்லை
யேகன்பேரில் என்னையாளும் (சந்)

2. ஆதமைப்படைக்குமுனம் போதவொளி வாயிலங்க
சோதி சொர்க்க வாசலின்மேல் தோன்றிடும் நாமம் துலங்க
யேதெனவே கேழ்க்க ஆதம் யெந்தவுல கம்படையேன்
வேதநபியைப் புகழ்ந்து விண்டிட நாயன் அடியேன் (சங்)

3. தர்ப்பர னடிமைகளில் உற்பனம் பாவமே செய்யும்
அர்ப்புதமாக யிறங்கி கற்பனையைக் கார்த்து வையும்
சொற்பனத்தின் மீதில்வந்து சர்க்குண னிகபரமும்
நற்பதவி தந்து என்னை துப்பரவென்ன வரமும் (சங்)

4. நேராக நடத்தியருள் நீதமக்கப் பதியாழும்
ஆராதனை செய்துவந்த அப்துல்லா தவத்தால் வாழும்
மீறுஹுஸன் தன்னைக் கார்த்து மேலோர் புகழும் பதவி
காருர்குடை செய்யுமெங்கள் ஹபீபிறசூலுதவி (சங்)

பதம்-இராகம் பைரவி-திரிபுடை தாளம்.

பல்லவி.

வேதா அதீதா கிருபை வந்தாளு மெந்தனை குரு
தாதா பதிபுகழும் தவமக்க மாளுமெங்கள் (வேதா)

அநுபல்லவி.

நாதா நவம்பெருகும் நாயக நன்னபியே
நத்தவ மெத்தவும் புத்தி தரித்திட
கத்தனின் சுத்தம் முத்தி பெரத்தரும் (வேதா)

சரணங்கள்.

1. இல்லல்லா சொல் பொருளை
யிருதி இணையை விட்டு
சல்லல்லா சொல் துயர்ந்து
ஷரஹில் நடக்க வருள்
சந்திரன் வந்தெதிர் விந்தை புகழ்ந்திட
எந்த னகந்தனில் தந்திரம் வந்தருள் (வேதா)

2. மையலில் விழுந்தே நிதம்
மாதவந் தனைத்தட்டுஞ்
செயல னிபுலீசுட
சிறையி லகப் பட்டே நான்
சிக்கியிருக்கு மிடுக்கமை நீக்கியே
தக்கத ருள்கடை கடைக்கணெ னக்குறும் (வேதா)

3. இறையோ னிருபதியில்
இறங்கி ரெக்ஷித் தருளும்
முறைமீறுஹ-ஸன் பார்வை
முழுது மேந்தியே யாளும்
முச்சக மெச்சவும் மிச்சவும் ரெக்ஷகர்
இச்சமை யுச்சிதம் பக்ஷமே வைத்தருள் (வேதா)

பதம்-இராகம் அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆவிக்குறுந் துணையாம் மேவுமுமை யல்லாமல்
அடிமைக்கிரங்கி யாள்வராரையா (ஆவி)

அநுபல்லவி.

பாவிப் பிழைதவிர்க்கும் பதிமக்கந்தனில் வாழும்
பகரும் யாசீன் சூரத்தில் அதுவித னெய்னுமே
பத்தனெனுற்றிட வைத்தருளுற்றிரு
சித்தமிரங்கியே வெற்றிபெறத்தரு
மத்தனின் றாதருள் பெற்றிடும் நபிகளில்
உத்தம சர்க்குண மெத்தவமேரே (ஆவி)

சரணங்கள்.

1. பாவிகளில் நான்மிகக் கோழை ஐயா தங்கள்
பதமலா தில்லை நாள் போகுதையா
சேவியாத குறைகள் செய்தேனய்யா அமல்
செய்பவர்க்குத் தொண்டுகள் செய்யேனய்யா
செந்துவகந்தனி லுந்துயர் தந்தைய
ருந்திரு முன்றெறி பிந்தி னரிந்திடும்
முந்திலிருந்திக பந்தமில் வந்திடு
மெந்தனில் வந்தனஞ் சந்ததம் நபியே (ஆவி)

2. காக்ஷி தரும் மறையில் வரும் நாதரே வெகு
காரணஞ் சொல்முடி யாதிருத் தூதரே
மீக்ஷி யிருபதியில் தரும் நீதரே யார்க்கும்
மேலோன் அருஷில் பேசுங் குரு வேதரே
மஞ்சு கவிஞ்சு நிறஞ்சு விசும்புர
இஞ்சொல் நிறஞ்சனே மிஞ்சியே அஞ்சுவர்
கெஞ்சிடும் பஞ்சைய னஞ்சவென் றிறங்கியே
செஞ்சர னெஞ்சினில் தஞ்சமென்பீரே. (ஆவி)

3. லெக்ஷம் நாலாயிரம் நபிபுகழே யெங்கும்
மெச்சுமுன் னூத்திப் பதிமூன் றருளே
பக்ஷமுளுல் அஜஸிகள் மகிழே யிந்த
பாரிலீமா னுள்ளோர்க்கு அரும்பொருளே
பக்கமிலக்கண முக்கருவிக்கவிக்
கெக்குலமுந்தொழு மெய்க்கமழும் நறை
மிக்க நலக்குறை சிக்குலத் தக்கவ ரெக்குல ரந்தரு
சர்க்குரு வடிவே. (ஆவி)

4. ஆதம் வழியில் வரும் முழுமதியே ருஜர்
அதுநான் கிளேயில் வந்த புகழ் பதியே
ஜாதியப்துல்லா தவ சந்ததியே மூமீன்
சகலருக்கும் மன்றுடும் பொருள் நிதியே
சம்பிர மியம்பிடுந் தம்ப மகுத்துவ
தும்பமறும்படி அன்பொடு தென்புறும்
செம்பொற் பதந்தனை நம்பும்மீரு ஹஸன்
அன்புதரும் பதம் பண்பருள் குருவே. (ஆவி)

பதம்-இராகம்-ஆதி தாளம்

பல்லவி.

தொழுதே யழுதிருந்து அஞ்சு மனதே நம்
துய்யோன் பிழை பொருப்பான் தஞ்சமுனதே (தொ)

அனுபல்லவி.

பழுது வருமல் நிலம் புழுவது போல்பல
பவந்தனை விட்டு நீயும் பளிங்கது போல்
குழிதனில் வருமுனம் ஒருமன தாய்க்கண்டு
கூடி குலாவி நின்று தொழு மனதே (தொ)

சரணங்கள்.

1. ஏகன் றிருவசன மிந்தனையோது அதில்
இந்தத்தொழு கைந்தையுந் தான்விட்ட போது
ஜாகை ஒயிலாமோடையில் தீயில் வேது புவி
சருவமலே யுருகும் ஜஹன்ன மறிவாய் (தொ)

2. நமது நபி நாயகம் ஹதீதைக் கேளு இந்த
நானிலமில் தொழுகையை விட்ட பாளு
தமையழலெறி எண்பதாண்டுவாறு ஒரு
தனியோன் அதாபு செய்வான் தெரிந்துணர்வாய் (தொ)

3. வானோர்கள் வணக்கஞ்செய் தொழுகையைத்தான் வெகு
வல்லோன் மிகுருஜினில் நமக்களித்தான்
தீனுத மிபுரு ஹீம் யூனுசு வுந்தான் மூசா
துய்ய யீசா நபி யெல்லாம் தொழும் வணக்கம் (தொ)

4. ஹிக்கமெனுஞ் சுலூக்குடனேட்டின் கூறு அதில்
கிருபை யாத்தொழும் கல்பு கண்ணுடி பாரு
துக்கமெனும்பவஞ் சிக்கலாகுந்தெரு கறை
துருசறுஞ் சாணையைப்போல் தொழுதுகொள்வாயே(தொ

5. தொழுகை நம் நாயனுடன் வசனித்திடுந்தலம்
தொடர்ப்பாம் மிஃறுஜென ஆரி போதிடும்
பழுதெனுந் திரைநீக்கி ஷஹுதையும் நீயும்
பலஉஜூதென்னை போக்கில் பரன் உஜூதாம் (தொ)

6. மூசா தவுருத்தினில் முன்னேன் சொன்னுன் வேத
முறை ஆதம் மகனே நீ தொழு அழென்ருன்
பூசாபலமுன் கல்பில் முடிகிடும் நான் அல்லா
பூருவ வொளிதனைக் கண்ட நாயனென்ருன் (தொ)

7. இன்னமும் ஹதீது தலீலனேகமுண்டு அதை
இந்தமட்டும் சுருக்கிக்கொள் அறிவைக்கண்டு
நன்னேரடியா ரிதை புகழ்வாரென்று தொழ
நாடாத பேர்கள் கேடுபாடாய் வரும் (தொ)

8. ஆளடிமை யாக்கிக்கொள்ளு அருளைக்கொண்டு இந்த
அடியேன் மீறு ஹூஸனை ஆதரித்தொண்டு
தாழுவிழுந் தொழுகையைக் காயமாய்க் கொண்டு ஒரு
தனியோன் கிருபை வந்து தந்திடவென்று. (தொ)

பதம்-இராகம்-ஆகி தாளம்.

பல்லவி.

ஆலமுயிர்க் குயிருகிய கோவே
அடிமைக்கிரங்கி யெனை யாள்குவீர் (ஆல)

அநுபல்லவி.

காலங் துதித்திடும் மக்கா புரந்தனிலிரு
கஃபத்துல்லா படைத்தோன் மனேயே
காதலாய் பார்த்ததைத் தொழும் பருலெனவே
நாதாமொழி யென் றறிந்திடும் (ஆல)

சரணங்கள்.

1. வானவர் சோபனந் தீனவர் புகழ்ந்திடும்
வல்லவனுகந் தருளிய பொருளே
வானயமானதை வாக்கினல் மீட்டிடும்
வழுவில்லா மறைநபி முழுமதியே (ஆல)

2. எல்லா நபிமார்களுந் தங்களின் சொந்தமென்
றிருக்கும் லிவாவுல் ஹம்துக்கொடிநிழலே
இல்லல்லா உவந்திட யெனக்கருள் தந்திடும்
இறஸுனி லிறைமுன முறை நபியே (ஆல)

3. துங்கமுறும் புதுமைத் துஞ்சு முயிரில்லாத
துகையிரு நான்குட னுரைபேசிடும்
தங்குமிபுலீ சென்னை சர்வ மாய்கையை விட்டு
தருமமாயென்னை யாளும் குருநபியே (ஆல)

4. பூதலம் வணங்கிடும் பொதுவெனத் துதிதரும்
புரந்திடு மக்கநகர்க் கதிபதியே
போதக ரப்துல்லா தவத்தருள் அஹ்மதே
புகழ் மீருஹு—ஸன் தனைக் கார்த்தருள்வீர். (ஆல)

பதம்-இராகம்-டிருமா மெட்டு.

பல்லவி.

ஏகன் தீபமே ரெசூல் யேழைமுகம் பாரும்

அநுபல்லவி.

1. போகபூமி யேழிலும் புதினமா மதீனம் வாழ்
தாஹாநபியே பதம் தந்துதவி தாருமே (ஏக)

2. நாலுவேதம் போற்றவே நாகலோகம் வாழ்த்தவே
மேலவ னுடையவஹி விண்டறியும் ஹாமிதே (ஏக)

3. தேட்டமாக ஜின்களும் திருவடியில் கூடவே
நாட்டமாக மானைக்கொண்டு தாஷ்டீகஞ்செய் போதரே (ஏ)

4. மாதுமக்கா மன்மஹ் மூதெனுந் தலத்திலே
நாதன்முன் மன்றாட்டஞ்செய்ய யாவுயிர்த்துணைவரே (ஏக)

5. நாயனடி யானுங்கள் நாளும் பாதம் போற்றியே
தாயுமாய்ப் புகழ்வதற்கென் தீதகற்றி யாளுமே (ஏக)

6. கூறுனிகள் வாழ்ந்திடுங் குலவுஞ் சொர்க்க மீதினில்
மீறுகுலை னுக்கருள்செய் மேவு மஹ்மூதரே. (ஏக)

பதம்-இராகம்-இந்துஸ்தான் காப்பி-ஆதிதாளம்.

பல்லவி.

பேரின்ப வமுதத்தைத் தேடு அருள்
பிரியா சுகங்கூடு மனமே

அநுபல்லவி.

ஆரம்பஞ்செய்தவர் தனிலே சாடு
ஆதியை யனுதின முறவாடு (பேரி)

சரணங்கள்.

1. ஜெகஜால மூலகே நிலையாது
ஜென்ம மிருப்பதுவே நிஜமேது
பகலிரவில் பவம் விடுவது நலது
பாசத்தை போக்கிடி னுனக்கது தனது (பேரி)

2. இல்லறந் தனிலே பொருள்கள் சம்பத்து
இதுநிலை யாமதர்க் கோடியாந் தத்து
சொல்லும் பொய்யுரைநின் வாயிலாபத்து
தொழுகா திருந்தாலோ யாதனை விபத்து (பேரி)

3. சோற்று லெடுத்திடுங் காயமின் னட்டம்
சுற்றி செய்தாலது வேநல மேத்தம்
போற்றுதவர் ஜடமழியா னிமித்தம்
புத்தியைக் கழுவது கரையேர சுற்றம் (பேரி)

4. பார்வையில் காண்பதெல் லாம்பொய் வேஷம்
பரகெதி யடைவது நிஜமெனுந் தேசம்
காரத்த பொருளுனக் கென்ன விசேஷம்
மீருகுஸன் மொழி யேயுபதேசம் (பேரி)

பதம்-இராகம்-சுத்த சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

தங்கள் பதந்துணை மெய்யா மனக்
கங்குலறுங்குறை ஷிய்யா

அநுபல்லவி.

எங்கள் கோன் துதியே இகபரமாணிதியை
அங்கர் தருங்கதியே அவ்வல்கனி மாதியே (தங்)

சரணங்கள்.

1. எங்கும் பிரகாசக் கருவே சாய்கை
இங்கில்லை யாலரு வுருவே
பங்கமிலா வாச மருவே துணை
பரமகெதி தரும் குருவே
சங்கை கொடுத்து ஜென்ம சாபல்ய முன் தருவே
திங்களழைத்து பேசுந் திரு அப்துல் காதிருவே (தங்)

2. நாளும் புகழ்தனை நினைத்தே யென்
நாயன் வணக்கத்தை நெகிழ்ந்தேன்
பாளாம் புவியாசைப் படைத்தேன் மாயப்
பாவைய ராசையைப் பிடித்தேன்
ஏழாம் நரகம் விட்டு ஈடேற்றமுஞ்செய்தேன்
ஆளுமிது வேளையில் அருமைக் கிருபை தந்தே (தங்)

3. ஏவலறியேன் தீதெம் மாத்திரம் என்
இடதும் பரிசளிக்கவும் காத்திரம்
நாவில் சலவாத்துத் தோத்திரம் ஒரு
நாயன் வழிதரும் பாத்திரம்
பாவ தோஷங்கண்டு பயந்தே னெனக்கு பாத்திரம்
பூவில் தரவெனக்கு புதுமை குரு வென் னேத்திரம் (தங்)

4. பாசவினையை நீக்கும் சீலா நல்
பதவி தந்திடும் அனு கூலா
ஆசைவைத்தேன் பதம் நல்லா மிக
அன்புதருங் குண வல்லா
நேசமாயடியேனை நினைத்திடுந் திக்றுல்லா
தாசன் மீறுஹுஸன் தனக்குப் பகர ரசூலா (தங்)

பதம்-இராகம்-இந்துஸ்தான் காப்பி ஆதிதாளம்.

பல்லவி.

தொழுதானந்தத்தை நாடு பல
தொடர்வினை போம் பாடு மனமே (தொ)

அநுபல்லவி.

அழுதிடுமேக்க மருளினைக் கேளு
அனுதினமும் பயந் தேகினந் தாளு (தொ)

சரணங்கள்.

1. இந்தப்புவியில் காணும் வீண் விளை யாட்டு
இதிலென்ன லபத்தம் வெருமனே யாட்டு
யெந்திரம் போலொன் ஜீவனின் ஊட்டு
இதுவறிந்தாலஞ்சித் தொழுகையை நாட்டு (தொ)

2. காயமுஞ் சுகியும் நிலைக்குநில் லாது
கத்தனுறைக் குயிர் க்ஷணப்பொழு தேது
மாயனின் வசனத்தை மறக்கவொண் ணாது
மவுத்துரு முன்னெறி வணக்கத்தை யோது (தொ)

3. மூதாதாநபி தொழுதழு தார்கள்
முறுசலனவரும் பணிந்து செய் தார்கள்
நாதாநம்நபி இறைஞ்சி வந் தார்கள்
நமக்கது கதிபெற கடவுள் தந் தார்கள் (தொ)

4. குத்பு நாயகங்கீழ் வந்திருக்கும் பாக்யம்
குருவொலி மார்விழுந் தொண்டஞ் சலாக்யம்
மெத்த காலம்விடாமல் தொழுதால்நல் யோக்யம்
மீருஹாஸன் தமிழி லுபதேச வாக்யம் (தொ)

பதம்-இராகம்-டிருமா மெட்டு.

பல்லவி.

சாகாதிருக்க சனதுண்டுமே [illegible] யிற
சூலருள் வாக்கியத்தில் [illegible] அதைத்
தாயமடையத் தவம்புரிய[illegible] வாழ்வு
சாருது பாக்கியத்தில் (சாகா)

அநுபல்லவி.

வாகாத்தெரிந்து யிறையை யறிந்தி[illegible]
வாய்க்கும் வாய்க்கும் வாய்க்கும் நல் யோக்கியம் (சாகா)

சரணங்கள்.

1. முன்னே அஹதிய்யா மேலான தாத்தது
முற்றும் வஹ்தத்தாகி அது
முந்திக் குறித்த முஹம்மதியா வெனும்
மோனமாம் வித்தாகி
அன்னே வாஹிதிய்யா ஆதம் ஹக்கீகத்தில்
ஆக்கும் ஆக்கும் ஆக்கும் விதியாக்கும் (சாகா)

2. இந்த மூன்றும் கதீ மான மறுத்தபா
இனிவரும் நாலைக்கேளும் நூரு
இயல்புறும் ஆலம் அறுவாஹெனும் றாஹு
யெந்திரம் போல் நாளும்
தந்திரம் ஆலமிதாலாகி சூறத்து
தங்கும் தங்கும் தங்கு மருள் பொங்கும் (சாகா)

3. ஆறுமறுத்தபா ஆல மஜிஸாம்
அனுசிரு நாலைக் கொண்டு மேல்
அருஷு முதல் பூமி வரையி லடங்கின
ஆலம் ஷஹாதத் தென்றே
ஏறும் ஆலமின் சான் அஞ்சை யுங்கூட்டி
யேத்தும் யேத்தும் யேத்தும் இன்சான் தோத்தும் (சா)

பதம்-இராகம்-லாவணி மெட்டு.

பல்லவி.

வித்தொன்றிருக்கு தின்சான் வீடுதனி லறைக்குள்
வியனுலகும் நிறைந்த விண்ணொளிவாம் (வித்)

அனுபல்லவி.

1. வெற்றிபெற இகூமை சித்தமதில் கருதி
விரைந்து ஷுகூது செய்தால் தெரிந்துகொள்வாய் (வித்)

சரணங்கள்.

அத்தைத் தெரிந்துகொளா திடப்போமோ
அறிந்த குருவைக்கண்டு விடத்தகுமோ
கத்தன் சமைத்துவைத்த சத்தை யறியாமலே
காலமதைக் கழியா தறிந்துணர்வாய் (வித்)

2. அவ்வலி லரூபியாய் அமைந்து தன்னிலிருந்து
ஐனெனும் ஹுப்புதாத்தி யெனப்புரிந்து
ஆலமெஜிஸாமதில் யாவும் பொருளாய் நின்று
ஆகும் மழிவதனைத் தெரிந்துகொண்டு
நவ்விபின் தொடர்ந்திட்ட நபியைக்கொண்டு
ஞானவலி பாசின்குரு துறையில் நின்று
பௌவமற உயிர்கள் வஹுதத்தில் உஜூதென்று
பார்த்தறியாதிருந்தால் மாத்துணர்வாய் (வித்)

சாகாதிருக்க சனதுண்டு என்ற பதத்தின்
தவறிப்போன 4-வது அடி.

4. தன்னையறியும் வகையிது தானென்று
தாரணி யோரறிந்தால் இன்சான்
தானும் பணுவாகி தான்சாகு முன் செத்தால்
தன் ஜட மழியாது காண்
முன்னே நாம் சொன்னது மீறுஹூலன் தமிழ்
மூத்தாம் முத்தாம் முத்தாம் வழிக்கெத்தாம் (சாகா)

3. ஈமானின் மகுனவைக் கண்டு மனங்களித்து
யிலங்கும் அஷ¬ஹதுடன் பொருள் தனித்து
இன்னம் தொழுகைமுதல் ஐந்துடன் சிற்றுகளை
ஏதெனப்பொருள்களைப் பரிகரித்து
நாமே நாமென்றுணுவம் பனுவாக்கி
நாட்ட மவனை வைத்து தரிபாடாக்கி
கோமா னவனைக்கொண்டு குருபு வாசலைக்கண்டு
கோதர உகூலமக்கு அதிலிருப்பாய் (வித்)

4. சோதி ஷ¬ஹ¬துதன்னில் யோதும் பலவகையில்
தோற்றமா கைது மொத்தம் அறிந்து செய்வாய்
சூழ்ச்ச முறுக்கபாவில் ஹக்கை ஹாலிராக்கியே
துலங்கும் அனுஙிய்யத்தே அறப்போக்கி
ஆதிரெங்க மெனுமூர் தனில் நாளும்
அடுத்த கட்டிநகரைச் சேர்ந்து வாழும்
ஓதும் சேக்காதி யெனும் ருவுத்தர் புத்திரரென
உண்மை மீருகுஸன் சொல் உகந்துணர்வாய் (வித்)

பதம்-லாவணி மெட்டு.

பல்லவி.

தையிப் கலிமாதன்னில் தனியோன் அஸ்மாக்களில்
தாங்கும் பெரிய இஸ¬மாம் தெரிந்துகொண்ட
தவத்தோர் வணக்கம் நிஜமாம்

அநுபல்லவி.

அய்யமில்லாமல் காணும் வையமனுகர் தன்னி
லாடும் உஜ¬தின் வேசமாம் குருடாம் நெஞ்சி
லறியாக் கண்ணின் காசமாம்
மெய்மையுடைய மூமினோரை
மேன்மை யுஜூதென்றெனும் பேரே
அய்யுஜ¬தாகிவந்த ஆலமஜிஸா மதில் ஆதிக்கருவையசலாம்
அதினுள்ளமை அறிந்தாலோ தீனிலிசுலாம் (தை)

சரணங்கள்.

1. அல்லாகு நூறுஸ்ஸமா வென்னும் ஆபத்தின் பொருள்
அண்டம் புவியொளிவதாம் அது இருளி
லாக்கும் நூரின் அல்லாதான்
நல்ல நூரினின்பொருள் உள்ளஉஜ¬தென்றது

நாயன் அமானிதமதாம் ஹக்கைக்கொடுக்க
நாதன் உனக்குச் சொன்னதாம்
வல்லோனனுகூல நாடுவோரே வண்மை பனுவை தேடுவீரே
எல்லா ரகசியமும் நபுஸி லிருக்குதென்று
யேகனுரைத்த அசலாம் அரிந்துகொண்டா
லோடுமுன் கல்பின் ஸலாம் (தை)

2. தையிப் கலிமாப்பெறும் தருவின் வேர்களோடியே
தாங்கிப் பூமியில் நிற்குமாம் பணர்கள் மேலே
தாவிலாவி வானி நிற்குமாம்
வையமில் நிற்குமாம் வல்லோனுத்தாரம் கொண்டு
வாகா தீனைக் கொடுக்குமாம் வேதத்தில் வந்த
வண்ண மனுக வைக்குமாம்
நய்யும் பனுவை நாடுவோரே நபுசு றாஹா ஜடத்தை வேறே
அய்யலிபுலாம் ஹாவும் ஆதிக்கலிமா தன்னில்
ஆளும் உஜூதின் தலையாம் வெளியுஜூதுன்
அழியும் உஜூதுள் நிலையாம் (தை)

3. சர்வலோகர்கள் வந்து சாருந் திருநாகூரில்
சம்பன்னரான ராஜராம் கஞ்சசவாய்
ஷாகுல் ஹமீது போஜராம்
மருவும் சந்ததி செய்கு மார்களணியில் வரும்
மன்னர் செய்யதலியராம் எங்களின் குரு
மார்களின் விசுவாசரும்
புருஷம் புத்து ஹா தன்னில் பார்த்தே
புதுமை யறிவுகளைக் கோர்த்தே
அருமை மீறு ஹாஸன் சொல் ஆலம் கபீரில் நின்று
ஆடும் உஜூதே யசலாம் மூமின்களெல்லாம்
அஹதை யறியும் பசலாம் (தை)

பதம்-கோட்டு மெட்டு.

பல்லவி.

ஹக்கனை நீ திக்கிர்செய்தால் ஹக்குடன் நீ மனமே
மக்கநபி சலவாத்தை மிக்கவோது தினமே (ஹக்)

அநுபல்லவி.

ஆதிமுத லொருவனென்றும் அறிந்திடுவாய் மனமே
சோதியொளி விலமைந்த துய்யநபி மனமே (ஹக்)

சரணங்கள்.

1. முன்னோரெனின் சிற்றுகளின் மூதறிந்தோர் மனமே
கன்னல்தருங் கஜாஞுவாம் காத்திம் நபி மனமே (ஹக்)
2. ஆதம்றா ஹூக்கு மிடை அங்கத்துக்கும் மனமே
நாதநபி எஜமானி நாயகமாம் மனமே (ஹக்)
3. மண்ணில் நின்றும் தாதாவை மன்படைத்தான் மனமே
அண்ணலிர சூல்படைப்பு அவநூரில் மனமே (ஹக்)
4. நாயன் கையால் ஆதமுவை நன்படைத்தான் மனமே
தாய் நபியை தாத்துகொண்டு தான்சமைத்தான் மனமே ()
5. முத்திபெற மீறுகுஸன் மொழியாமென் மனமே
சித்திநெறி தந்தருளும் செய்திரசூல் மனமே (ஹக்)

நபிநாயகம்பேரில் எண்சீர் ஆசிரிய விருத்தம்.

ஆதியொரு நாதனரு ளேதுநபி யேஹாமி தானமகு மூதுநபியே
ஆதமுத லானநபி மார்களனை வோர்களிலு மாமுறுசலான நபியே
சிதமுத வேதநெறி நீதிநபி யேயறிய சீலமுள ஆலநபியே
தீதகல வோதுகலி மாவுரைக ளேவிவளர் தீன்பயிர் விளைத்தநபியே
ஆதரவி னோர்மைமற வாதநபி யேயடிமை யாசைமிக வானநபியே
ஆதரவு நீரலது வேறுதுணை யாருமிலை யாதறியு மாலநபியே
மாதவ மதார்மதினம் வாழுநபி யேமக்க வாசரபுல் காசிம் நபியே
மாதரணி நீதப்துல் லாதருரு மாரரென வானவர்கொண் டாடுநபி
[யே

வெண்பா.

ஆணுவத்தை நீ போக்கி அஹதியத்தை யொன்றாக்கி
காணவறி தானவனைக் காலமைந்தும்—பூணுகின்ற
வணக்க மதைச்செய்து வரிசை கதிபெறவே
இணக்கமொடு செய்வா என்றும்

பதம்-இராகம்-தேவமனோகரி ஏக தாளம்.

பல்லவி.

வணக்கஞ் செய்வாய் மனமே காத்து
வாரிடுந் துரும்பதுபோல் உன்னில்
இணக்கமுறும் றூஹை இசுறயீல் கொடுபோமுன் (வண)

அநுபல்லவி.

கணக்கில்லா புகழுடையோன் தன்னை
கண்டது போல்வணங்கி நாளும்
பிணக்கொன்றுஞ் செய்யாமல் பெரியோனை எக்காலம் (வ)

சரணங்கள்.

1. உன்னை வணங்குகிறோம் உந்தன்
உதவியைத் தேடுகிறோம் நீதி
பன்னரும் செவ்வுற்ற பாதையி லென்றனும் (வண)

2. குல்ஹுவல்லா சூரத்தில் சொல்லுங்
குதரத்தால் சமைந்தவனே இந்த
எல்லையை விட்டுமண் ணிருளறை போகுமுன் (வண)

3. காலையில் மாலையிலும் நித்தங்
கார்க்கு மிஸ்திருபாரைச் செய் யென்
வாலைப் பருவம்போய் வயதாகு முந்தியே (வண)

4. உள்ளச்ச மாய்வணங்கி உள்ளில்
ஒன்றுபட்டே இணங்கி நாளும்
கள்ளத்தனம் விட்டு கல்பைத் தெளிவாக்கி (வண)

5. ஜின் மனு வோர்களையும் நாயன்
ஜெகமீதில் படைத்துதான் நாளுந்
தன்னை வணங்கும்படி தனியோ னருளியதால் (வண)

6. காணிக்கையாந் தொழுகை அதை
காயமாய்க் கொண்டுவந்தால் நயம்
பாணிக்க வொண்ணுத பலன்பெற்றுக் கொள்ளலாம் (வண)

7. நானூத்திச் சின்னந்தலந் தன்னில்
நயமாக தொழுகச்சொல்லி யெங்குங்
கோனேற்ற மானவன் குருஆனி லருளினுன் (வண)

8. மாறுக் கருணை வெள்ளம் வந்து
வளமாக்கு மிறையவன் றன் பையல்
மீருஹுஸனுக்கு மிகுந்தருள் புரிவோனை (வண)

பதம்-இராகம்-டிருமா மெட்டு.

1. கண்கொண்டுந் தண்டிய அதிலொன்றிய
கருவுரு பொருள்தனை யறிமனமே

காக்ஷியது தீக்ஷியதால் மீக்ஷி பெற மோக்ஷமதாய்
கதிகுருவென் நிதிபெறவென் (கண்)

2. சூக்ஷி தமிழ்தனை நித்தமும் போற்றிடில்
சூழ்வினை பாழி லொழிந்திடுமே
சோபனமே லாபமுடன் ஸ்தாபனமில் வியாபனனே-
சுறந்ததிரு உறைந்திரை வென் (கண்)

3. அல்அல்லா சொல்லிய நல்லது தல்லிய
அருஉரை திருவுள வாக்கியமே
ஆலமெல்லாம் கோலமதாய் ஸ்தூலமீலே ஏலமென
அண்டர் புகழும் கமளண்டளவன் (கண்)

4. முன்அற்புத கற்பன னனுதின முறைதரு
மீரு ஹாஸனுக்கிரங்கி
மூவுலகம் பாவலன்மீ தேவனுடன் காவலருள்
முழங்கும்பல னிலங்கிட வென் (கண்)

பதம்-இராகம்-குந்தளவராளி ஆதி தாளம்.

பல்லவி.

தினந்தினம் உமையே புகழ்ந்தேனே
மனமகிழ்ந்தருள் யாசீனே (தின)

அநுபல்லவி.

கனம்பெரும் யோகா கருணை நிருவாகா
பனுவை போகா பரனருள் தாஹா (தின)

சரணங்கள்.

1. இரவினில் தொலேயே இறைவனை நிலேயே
அரனரு ஷிலேயே அருமொழி யுலேயே
வரமருள் குலேயே வஹிவரு மலேயே
கரம்பொரு தலேயே கதிதரும் கலேயே (தின)

2. புகழ்தரும் அருவே பொருமையி னுருவே
நிகழ்தனிற் கருவே திசையெங்கு மருவே
மகிழ்வுருந் தருவே மதினமின் திருவே
இறைவனண் புருவே யெனையாளுங் குருவே (தின)

3. அகமும்யிற் கிணேயே ஆடியேனின் னணேயே
ககனவர் பனேயே கருதலர்க் கணேயே
ஜெகமெங்கும் பிணேயே செய்தவத் திணேயே
மூகமீருஹா¬ஸனுக்கு முழுதினுங் துணேயே (தின)

பதம்-இராகம்-ஆதி தாளம்.

பல்லவி.

மயித மயித வேதா பாதம்
மனமிரங்கி தாதா (மயி)

அனுபல்லவி.

ஜெபகுலா அதிசய ப்ர காதா
ஜீவகாருண்யமே மரு மூதா (மயி)

சரணங்கள்.

1. கைறு ஷற்று இவ்வித மென்ப தறியேன்
கார்க்கும் லெக்ஷ கர்த்தா தவம் புரியேன்
பயினும் நூல்வழி அகமியங் தெரியேன்
பாவினுன் செய்த தீவினைக் குரியேன் (மயி)

2. நாயன் வேதத்தில் புகழ்ந்திடுந் திருவே
நபிகள் வழியில் ஐம்பத் தொருமுறை கருவே
தூயதாய் தந்தை மூசுலிமென் பூருவே
துணே யெனக்கிலே நும் பதந்தருங் குருவே (மயி)

3. ஆதமன் தண்ணிக் கிடையுறும் நபியே
அவனியி லுயிர்களுக் கருவெனும் ஹபிபே
நீதமின் சூரத்தி லுரைத்தநூ சபியே
நிறைபதி தந்தென யாண்டிடும் அபியே (மயி)

4. ஆகமம் பெறும் மக்கமின் ஹாமிதே
அப்துல்லா சந்ததி அமுதவ ஹாமதே
மேகம் முதவுங்கர கோடைமஹ் மூதே
மீருகுஸன் தமிழ்க் கிரங்கு முகம்மதே (மயி)

பதம்-இராகம்-சுருட்டி-திரிபுடை தாளம்.

பல்லவி.

தாஹா நபிதம் புகழ்தனேயே நிதம்
சாற்றிடும் பொக்கிஷத்தில் வந்து
சார்படையச் சங்கை செய்யு மனுவது
சாறுது கக்கிஷத்தில் (தா)

அநுபல்லவி.

வாகா இறையவன் வேதத்தில் போற்றிய்
வண்மை வண்மை வண்மை யறிவுண்மை (தா)

சரணங்கள்.

1. நாயன் அஹதாகும் நத்தும் வஹாதத்தில்
நாதா முஹம்மதிய்யா இதில்
நாடும் ஆலம் ஷூயூன் தாத்திய்யா வென்றிடும்
நாமம் சிபாத்திய்யா
தூயமிகும் ஹாப்பு தாத்தி லமைந்திடும்
தோற்றம் தோற்றம் தோற்றம் வெளிக்கேற்றம் (தா)

2. காரணமாகிக் கருவி லமைந்திடுங்
காத்திமுன் நன்னபிதான் இதில்
காணும் புவியில் பலவுயிர்க் கண்ணுக்குள்
காக்ஷிய தாகவுந்தான்
ஆரண மென்னுங்கலி மாவிரை தூவி
ஆளும் ஆளும் ஆளுஞ் சொர்க்கம் வாழும் (தா)

3. ஏகனைக் கண்டு மிஃறாஜிரவினில்
எல்லா ரகசியமும் ஈய பேசி
இறையோன் விதித்திடும் ஐம்பதை அஞ்சதாய்
இறஞ்சப் பறுசியமாய்
போகமா வந்து புவியிலனைவரும்
போற்றும் போற்றும் போற்று மனுமேத்தும் (தா)

4. அல்லா வருளிய வோதுங் குர்ஆன் தனில்
அஹ்ஸாபெனுஞ் சூரத்தில் வந்த
ஆயத்தி னின்பொருள் நாயன் மலக்குகள்
அருள் சலவாத் தோரத்தில்
எல்லா மூமினுஞ் சலவாத் துரைத்திட
என்றும் என்றும் என்றும் பருலென்றும் (தா)

5. நேருங்கஃபாவை நின்று வணங்கும்
நெறிமக்க மாநிலத்தில் வாழும்
நீதரப் தில்லாவின் நெற்றியி லுற்றிடும்
நீள் ஆமீனா வயத்தில்
யாறசூலாகும் மீறுஹாஸை னுக்கருள்
மீக்ஷி மீக்ஷி மீக்ஷிதருங் காக்ஷி (தா)

பதம்-லாவணி மெட்டு.

பல்லவி.

நின்றேன் நின்றேன் நேர் கலிமாவின் பொருளதை
நிறுத்தியென் னறிவாலே புகழ்
நிருமல தெரிசன மிருதய கமலமில்
நிறைகுரு வருளாலே (நின்)

அநுபல்லவி.

முண்டகத் திரையகற்றி மண்டல மூன்றுந்தெரிய
கண்டதுபோ லிறைவனைக் கொண்டாடித் தொழுதுபோற்றி

சரணங்கள்.

1. மூலமில் குறிப்பில்லாத மொத்தமா யறிந்தனுதி
மோனமாம் வித்தையறிய நின்றேனே ரீ ரீ ரீ பின்பு
ஆலமின் ஷஃயூனின் தாத்து யேகமின் பேருசை கொண்ட
அஹ்மதர் சிபாத்தறிய நின்றேனே ரீ ரீ ரீ
கோலமும் பலதாய் நின்ற காலமில் இசுமறிந்து
ஞாலமில் உஜூதறிய பாலமுத மருள்தர (நின்)

2. ஆதமின் உள்ளமையென்ற காதல் மஹ்மூதரொளி
அமைந்து அஹ்யானென நின்றேனே ரீ ரீ ரீ இதில்
ஏதேதுக்குத் தக்கப்பொரு ளானதைக் கொடுத்தளித்த
இயல்பு வாஹிதை யறிய நின்றேனே ரீ ரீ ரீ
போதநாத னளித்ததை நீதமென வேதெரிந்து
வேதவுரை வந்தபடி யோதவே யுகந்து கண்டு (நின்)

3. ஆயுமாலமெறு வாஹில் யாவுயிர் பிரிந்த குரு
அபுல்அரு வாஹறிய நின்றேனே ரீ ரீ ரீ பல
தாய் வயத்தில் வந்ததால் ஸ்தூலமெனுஞ் சூரத்திடம்
தங்குமால மஜிஸாமதில் நின்றேனே ரீ ரீ ரீ
மாய மண் தண்ணி நெருப்பு மாருதம் அருசுமுதல்
காயபூமி வரை மரம் காய்பழம் விதமறிய (நின்)

4. பண்டு பொக்கி ஷப்பொருளி னிண்ட உஜூ தகஷரத்துள்
பரவெளியி லர்கிகாமா நின்றேனே ரீ ரீ ரீ கால
கண்டமெனுங் கீழ் பவத்தில் கஷ்புகள் மறைந்துமின்சான்
காமிலாகாமல் நாக்கிசாய் நின்றேனே ரீ ரீ ரீ
அண்டிவந்த வழி தந்து தண்டமிழ் மீருஹுஸனுக்குக்
கண்டரும் புவியோர் துதிக்கின்றதற் கிரங்கியருள் (நின்)

பதம்-இராகம்-சாவேரி-ஆதி தாளம்.

பல்லவி.

அல்லா அல்லா வென்றால் எல்லா வினையும் போகும்
அகமியப் பொருளறிவாய் (அல்)

அநுபல்லவி.

நல்லா யிறை யுஜூதை நாடிய றிந்தாலன்றி
வல்லோனை யறிவதெவ் வண்ணம் நிறைவாகாது (அல்)

சரணங்கள்.

1. முன்னே கோலமில் லாதாய் முழுதுந் தூயவனாகி
மூலத்திருவி லிருந்து
அன்ன தஹதியத்தில் ஆரா லறிய வொண்ணு
ஆதி தாத்தெனச் சமைந்து
சொன்ன குன்கூவின் தாத்தை சுகமாயறிய நாடில்
வின்னமில் வீணாகும் வேதமொழி வசனம் (அல்)

2. முந்தி யுரைத்த குறி முதலோன் தாத்தும் சிபாத்தும்
முற்றும் உஜூதாத்தையும்
அந்தம் விபரியாமல் அறிவும் அறிந்தவனும்
அறிவாக்கப் பட்ட வஸ்தையும்
எந்தவித மொன்றான யேகன் வஹூதத்தினில்
சொந்தமே லாசைகொண்டு தோன்றும் முகம்மதியா (அல்)

3. மூன்றும் படியறியும் முன்னோன் வாஹிதிய்யாவில்
முறையாக நாமம் குறித்தான்
யேன்ற ஜலால் ஜமாலும் யேகோபித் தம்மோதியே
யீன்ற நபியொளிவில் தான்
தோன்றும் பல வுயிர்க்குத் தூண்டாய் ஜீவன்கொடுத்து
தான்றோன் றதுதனக்கு தக்க வியல்பளித்த (அல்)

4. ஆசைக்கலீமுல்லா யென் னையனெக் காலம்வரை
ஆண்டாள்கிறு யென்றுரைத்தார்
பாசவுலகதுபோல் பத்தெட்டாயிரம் நகர்
படைத்தோன் கடுகை நிறைத்தார்
கூசுமொரு கண்குரு டானப றவையொன்றை
தேசமாய்ப் படைத்தாண்டுக்கோர்வித்தை பருகென்ற (அல்)

5. அந்தக்கடுகெவையுந் தீர்ந்தெழு பத்தாயிரம்
ஆதிக்குழுவைப் படைத்தான்
சொந்தவயதெழுபத் தாயிரம் யீந்தளித்தான்
ஜெந்து ஆதமைப்படைத்தான்
இந்த ஆதமைப்படைத் தெழுபதாயிரம் வயதை
சந்தமளித்த பின்னும் தக்கவியல்பளித்த (அல்)

6. கியாம முடிவாயிரம் கொஞ்ச மஞ்ஞூற்றுக்குள்ளே
கிட்டியேபூமி பாழாகும்
நியாயமாம் அல்லா அல்லா நாடிசதா காலமும்
நவிலுவோர் கலீபாவாகும்
பயாநல்லா திக்கிர்செய்வோர் பூமியின் கண்ணிருந்தால்
கியாமமுடியாதெனக் கத்தன் நபிஹதீதில் (அல்)

7. வெத்திஉத்துலுமா ஜலிஸில் வேதவசனமது
வலதிக்றுல்லாஹி அக்குபர்
சித்தமதில் அல்லாஹு திருநாமம் திக்கிர்செய்தால்
தேர்ந்தவரிசையாம் திக்கிர்
சுத்த அசுமாக்களில் சோதி யிசுமுல்லாதான்
முத்தி யிசுமுல்லலிலம் முகிய்யித்தீன் வாக்குறைத்த (அல்)

8. ஆதிறப்பைவணங்கும் ஆலம் றப்மானைப்பின்
அல்லாவைத் தொழும் நெஞ்சமே
சோதியிசுமுல்லாவில் தோன்றிமலுஹறுகி
ஜுவய முஹம்மதர் தஞ்சமே
நீதி ஆரிபீன்களின் நெறியாம் கிந்தாபில் வந்து
ஓதும்மீருஹுஸன் சொல்லுரை அல்லா திக்கிர்நாளும் (அல்)

பதம்-இராகம்-இந்துஸ்தான் காபி-ஆதி தாளம்.

பல்லவி.

என்மேலே கிருபை இரங்குவீர் நாளும்
பொன்மலர்ப் பாதம் புரிவீரே யாளும் (என்)

அநுபல்லவி.

பன்மலர் சோலை பதிபதீனு வாழ்
நன்முகம்மதர் பாதம் நல்கிட நாளும் (என்)

சரணங்கள்.

1. சோதியில் கண்டு சுருதியில் நின்று
பாதி மதியம் பகர்ந்திட விண்டு
நீதிமுறை நெறியதைக் கண்டு
நாதர் நபி பாதம் நான் காண் ஆளும் (என்)

2. என் பாவம் பெரிது என் திரேகஞ் சிறிது
பொன்பாத மல்லாது புரிந்தேனு னேழை
முன்செய்த வினையை முற்றுமகற்றி
நன்செய்கை நபிபாதம் நட்புட னாளும் (என்)

3. காத்திமுன் னபியே கதிர்வீசு மொழியே
தோத்திர மெய்யில்காண் தோன்றும் பின் வழியே
சூஸ்திரப் பாவை போல் சூதான யடிமையை
நேத்திர மிவ்வேளை பார்த்தென்னை யாளும் (என்)

4. தேறாத சிறியேன் மாறாத அடியேன்
தாருதரந்தது தமியேனைக் காரும்
மாறாத வாழ்வும் மனமகிழ்ந் துகந்து
மீறுஹுஸனுக்கருள் புரிபாதம் நாளும் (என்)

பதம்-லாவணி மெட்டு.

1. அவ்வலிலே அருவுருவாய் அஹதியத்தில்வரும் முதற்கலிமா
அவ்வுறையாலே அறுஷெனும் கல்பில்
அசுமா இலாஹியதில் ஹுகூமுக்கி
அம்பரம் புவனம் நிரைந் தெம்பிரான்
சுயஞ் சோதியைக் காணும் அதில் தோணும்
அஷ்ஹதிலும் அவன் ஷஹ்ஹாதாம்
ஆலமஜிஸாமதில் ஸ்தூலம் பலதாம் முஜா
தொன்றும் அலீபு நிலை யறிந்துணர்வீர் (அவ்)

2. சிற்ரதனில் வெளிவாகி சேர்ந்த நெறியதனில் காற்றாகி
சேர்க்கையாந் தண்ணீர் செறிமண்ணுவதிலே
சிறந்திடும் மனுவதி லுருவாகி
செந்திரு ஆதமில் வருஞ் சுந்தர ஹவ்வாவும்
வெளியாகும் தேவியாகும்
ஜெகமதனில் சகல வித்தும் தின்று புசித்ததனால்
ஜென்ம வடிவாம் விந்து நாதந்தெரிந்து
நிலையறிந்துணர்வீர் (அவ்)

3. முதலவன்றன் மறைதனிலே மூமீன்றனையறியவடையாளம்
   மொழிவதிலுண்மை யொருவனின் பயமும்
   முகமதில் பரஞ்சாட்டல் சஹிஹாஹி
   முற்றிலு மஞ்சுந் தொழுது
   பற்றியே ஜக்காத்து நோம்பில் சாரும்
   நாவைக்காரும் முழு அபத்தைப்பேணி வாரும்
   மூதறிவா யெவர்பின் பாவின் துயர்ச்சி நீக்க
   மூல மின்சானின்குண மறிந்துணர்வீர் (அவ்)

4. நாயகராம் நபி ஹதீதில் நல்ல மூமீன் தனக்கு வடையாளம்
   நாயனுமல்லா நாடும் கலாத்தன்னை
   நாளும் பொருந்தி நோக்கி சபூறுகி நாதனின் நிகுமத்துக்கு
   நீதமாய் சுக்கூர் செய்து
   வந்தே நிஜம் தந்தே நாவதிலும் நிறைவேத்தல்
   நாளும் நம்புதல் மூமீன்
   நபுஸம் மாறுவை விட்டால்
   நாடும் ஈமானிறப்ப மறிந்துணர்வீர். (அவ்)

5. அஹறதொருவன் ஆதமுவை ஆலமதின்சூரத்திலவன் சிபத்தி
   லமைத்ததினுலே றகுமானின் மஹுஹர்
   ஆலமின்பொருள் தெரி அடையாளம் அம்புஷியில்
   கண்டியம்பியவ னடந்தொருவன்
   சென்றுன் அவனைக் கண்டான்
   ஆலமதில் யெழு சிபத்தாம்
   ஆக கூடிய தாகை அற்றஹ்மானின் யெழுத்
   தேழா மின்சானின் படைப் பறிந்துணர்வீர் (அவ்)

6. குகையதிலே குருவுஜூதாம் கோனவன் குணம்
   கல்கின் குணமதிலே
   கூடுவதாலே குறைநய முளதால் குணக்கில்லா
   உரூலென்னும் குருவை நாடில்
   கூறும்பனு இல்லாவிட்டால் கொள்ளருட்சியேகாவிட்டால்
   கோதாம் அறிய தீதாம் கல்க்கென்றது கானலைப்போல்
   காணுங் கண்ணுடி தோற்றம் காண்பவ னல்லாதில்லை
   ஹக்கன் உஜூதிலை யறிந்துணர்வீர் (அவ்)

7. வாரணஞ் சூழ்நாகையில் வாழ்
வள்ளல் ஹமீதொலியின் வழியில் வரும்
வரிசையில் மேலாம் நம் குலக்குருவாம்
வளமுறுஞ் செய்யதலி சாஹிபானோர்
வந்தனஞ் சொல்லியுமவர் இந்தவித முபதேசம்
புரிந்தோர் வழியறிந்தோர்
மறையறிவால் துரைகாட்டி வாழ்த்தும் இபுனறபி
யேற்றமபுஸஊஸாரைத்த வாரும்
மீருஹாஸன் சொல் லறிந்துணர்வீர் (அவ்)

இதுவும் லாவணிப்பதம்.

1 மூமீன் குலத்தோரே முசலீமானபேரை முசலீமானபேரை
எங்கும் மூலமதாகி வந்த ஆலநபிக்கீமான் கொண்டோரே
ஆமீன் கூருவோரே அறிவு மிகுந்தோரே அறிவு மிகுந்தோரே
வரும்அல்ஹம்துக்குடையவன் அற்றஃமானின் சிபத்தோரே
நேமமுடன் வாரும் நிலமிசையுட்காரும் நிலமிசையுட்காரும்
வெகு நீடி சலாமுரைத்தேன் பாடுவதைக் கருத்தில் தேரும்
வெரு மூமைகனவில் கண்டவாரே கண்டவாரே அமைந்திருக்
கின்றீரே றஹீம்மெயறிவதெந்தச் சீரே அந்தச்சீரே
இசைத்திடுவீ ரென்னேரே (மூமீ)

2 தன்ஜீஹரியார்கள் தஷ்பீஹரியார்கள் தஷ்பீஹரியார்கள்
ரெண்டுந்தன்ஜீஹாமஹாவினைத்தெரிந்துணர்ந்தவர் தவத்தோ
ர்கள் யென்ஜீவ னரூபி யறிந்தவர்க்குரூபி யறிந்தவர்க்குரூபி
முன்எவ்விதத்துண்மையானோன் அவ்விதம்அல்அறுவின்ஸாபி
இன்சொல் உலகோர்கள் இபுலீசறியார்கள் இபுலீசறியார்கள்
அவன் யெந்த நபுசில் நின்றும் வந்த வழி கேட்டால்
சொல்லார்கள் தூண்டில் துஞ்சிடும்
பெருமீனைப்போல மீனைப்போல சுழன்றிடுவதாலே
மனு தஞ்சமென் றிடுந்தல மேலே தலமேலே
வந்த வகை புகலும் மென்னேரே (மூமீ)

3 முன்னே யிருளாகி முதலவன் தன்னாகி முதலவன் தன்னாகி
அவன் மூந்தி அஹதியத்து சொந்தமின் வஹதத்திலாகி
தன்னையுருவாகி சகலதுமொன்றாகி சகலதுமொன்றாகி

தானவ னுஜூதுதான் மூன்று மருத்தபாவிலாகி
பின்னே அறுவாகில் பிறந்தமிதாலாகி பிறந்தமிதாலாகிஇந்த
பேதகமான ஜடம் பின்பு மஜிஸாமதிலாகி இதி
லென்னை யறியச்சொன்னதாலே சொன்னதாலே யேழா
மறுத்தபா இன்சான் தன்னையறிவதிதனாலே இதனாலே
யறிந் துணர்வீ ரென் முன்னாலே (மூமீ)

4. தொழுகை நலவென்ன தொலையும் பவமென்ன தொலையும் [பவமென்ன
துன்னும் வணக்கங்களில் முன்னே நிலை நிறுத்தலென்ன
சுழிமுனையில்நாட்டிசுரூபமதைக்காட்டிசுரூபமதைக்காட்டி
தன்னில்சூக்ஷமிரு கண்ணிடை காக்ஷியதாக நிற்கப்போட்டி
ஒளிமுகத்தில் காணும் உஜூதிரண்டு தோணும் உஜூதிர [ண்டு தோணும் அதில்
உள்ளசூரத்தைவிட்டுந் தெள்ளிதானவனென்றுந் தோணும்
இது பழுதிலா வணக்கஞ்செய்வீரே செய்வீரே யுயர்பதவி [யோரே
ஞானம் முழுதும் மீறுஹஸன் சொல் நேரே சொல்நேரே
மஹ்ரிபாவின் வீரே (மூமீ)

பதம்-இராகம்-லாவணி மெட்டு.

பல்லவி.

குன்னென்றான் பயக்கூனுவென்றே தன்
குதரத்தி னல்சமைந் ததுவுடனே (குன்)

அநுபல்லவி.

மன்னனொருபொருளை மதித்து அதமில் நின்றும்
மாய உஜூதுதனில் வர நாடினால் (குன்)

சரணங்கள்.

1. குன்பயக் கூனெனுங் கோன் மொழிதான்
குல்லும் நபியொளிவில் படைத்ததுதான்
இன்பஉஜூதுதனித் திருக்கு மறிவதற்கு
இல்லாமையெனும்ரெட்டை யறிந்துகொள்வீர்(குன்)

2. அற்றஹ்மானின் யெழுத் ததின்சூக்ஷம்
ஆலமனைத்தும் படைத் ததில்மோக்ஷம்
சிற்றான சிபத்துகள் சிறக்கவெளியாந் தலம்
சீர்பெரும் ஆலம் கபீரறிந்துணர்வீர் (குன்)

3. நாதனி லௌகு கலம் ஒளி ஜடமாம்
நாயன் படைத்துயேவ வழியிடமாம்
நீதன் இயாமம்வரை ஆனதாகாததுவும்
நிறைந்தோ னுத்தாரங்கொண்டு வரைந்ததுவே. (குன்)

4. சகலஹா லுகள் முதல் தக்தீறுடன்
சரிலௌகில் தீட்டுதல் ரெண்டினுடன்
அகல ஆலமிலதை வெளியாக்கு மூன்றதாம்
ஆலமாகிறங்கூலி நாலாவதாம் (குன்)

5. அஹது உஹது வாஹிதிய்யாதனில்
அவனின் உஜூது வெளி யாயிவனில்
ஜெகமீதில் பல பல ஒவ்வாவண்ணமாய் நிற்கும்
ஜீவ சராசரத்தின் கருவறிவீர் (குன்)

6. ஆதியுஜூதே யறியாவிடிலோ
அஹதை யறிதல் நிறை யாவிடிலோ
சோதிப்புவியில் ஆடு மாடெனச் சொல்லவும்
சுருதிமொழி இதனை யறிந்துணர்வீர் (குன்)

7. மூலம் அஹது முதல் தனியானேன்
மூதுவஹதத்தில் உஜூதொளியானேன்
ஆலமஜிஸாமதில் அல்ஆனமுன்போ லானேன்
அவனை யறிந்து ஷுஹூதெளிவாய்ச் செய்வீர் (குன்)

8. சேகுமார்களின் வழி செய்யதலி
சிறந்திடும் அறுதிச் சொல் லெடுத்தகலீ
பாகுருவாமருள் பாரக்கித் தாபின்னுரை
பரிவுடன் மீறுஹூஸன் பொருள் தெரிவீர். (குன்)

லாவணிச்சந்தம்.

1. தானவனுகந்திடுந் தீனவர்களே சலாம் வாரும்—தயவுடனே
நீரும்—தருத்திபாயுட்காரும்—உம்மை தாங்கிசவா லுரைத்தே
னேங்கியதற்கு விடை தாரும்—மெங்குங்கோனவனொருவ
னென்றுன தலீலறிந்து நிண்டீர்—குருக்கலிமாவிண்டீர்—அதற்
குள்ள பொருள் தெரியா யெள்ளள வீமானில்லா கிண்டீர்
இந்த நானிலமதில் முந்தி நாயனை யறியவுமென்று—ஞான

வான்களன்றானவின்றிருந்தா ரென்று—மார்க்கநெறியாங் கிதாபுகளால் நிறையுமறிவுகளைக் கண்டு—போத கியான முடைய வுறவோர்கள் வுறவோர்கள் விள்ளுங்—கோனூலை யறிந்துணர்வீர்கள்—உணர்விர்கள் பெரி (தான)

2. ஆதியஹதில் நின்று சோதிவந்த வகையை வெல்லும்—அஷ ஹதினைப் புல்லும்—அவன் ஷஹதில் நில்லும்—இந்த ஆலமஜிசாமதில் கோலவுஜூதென்றதைச் சொல்லும்—பர நீதி யென்பதுமுன் னறுதியென்பது மென்ன விண்டு— விளையும் வித்தைக் கண்டு—விரும்பியதில் சென்று—சொர்க்க வீடு அடைவதற்குத் தேடி அமல்புரிந்து நின்று—ஞான மோதியறிந்ததுபோல் சேதி பேசினுலென்ன சாரம்—மனதி னுள்ள தீரம்—மவுத்து வந்தால் பாரம்—முன்னாள் மன்னன் தாமீக்கதனில் சொன்னமொழி மரகாதாரம்—யெதிர்வாது பேசிடு முலகோரே உலகோரே—வீண் சேதி சொல்வதை விடுவீரே விடுவீரே—தினந் தேதிபுது சீரனந் தீனவர்களே சலாம் வாரும்—நயவுடனே நீரும்—தருத்திபா யுட்காரும்.

3. ஹக்கனைக்காண்பதற்கு பக்கமிரண்டுவகை சாரும்—தன் ஜீஹதனில்சேரும்—தஷ்பீஹதில் தேரும்—இதை தடுத்து மஹலுதனை யெடுத்துநின்றுனந்தமாய்க் கூடும்—ஒரு தக் கோன் வெளியாகுமுன் யெக்காலங் துய்யபொருள் யாது அவ்விதம் இப்ப தாய்து—அவன் மஹுஹர் ஓது—இது அண்டி அண்டாமல் பூவின் செண்டு வாசனை போலிராது ஏதும்ஒக்காதுவமானிக்கசக்கில்லா வந்ததைச்சொல்முன்ன அதை நிதானித்துன்ன—அறிந்துயெக்கின் வுன்ன—நாட் டம் அவ்னின்ஹ வியத்தினில் புவனம் ஜல்லியத்தாகி வன்ன இதை ஷக்குவைத்துப் பின்பேசலாகா பேசலாகா தன்னுல் மிக்கோர் முனிவுவரப் போகா வரப்போகா—நாயன் திக்கிர் முழங்கச்செய்யுந் தீனவர்களே சலாம் வாரும்.

4. கலிமா வகையறிய நலமாகச் சொல்வதையுங் கேளும்— கருத்ததனில் நாளும் ஹக்கனின் ஜல்லி வாழும்—உன்னில் ஹருபு தெரியாமலே உருவமுஜூது அரசாளும்—யெழுத் தலிபுலாம்ஹேபதனில் பலனை பாக்கியான தேதை அதற்கு நபியாது இதுபாத்தெனும்போது நாளும்—ஆனந்தக்கலிமா

வும் தீனிந்தார் றாஹுகுல்லி யோது—யாரும் ஒலியாக வேணுமென்றால் கலீபாவின் காரியத்து வீசும்—அவரின் குணம் வாசம்—அறிந்தவர்க்குப்பாசம்—இதால் அகத்தை யறியச்சொல்லி இகத்திலுரைத்தென் விசுவாசம்—ஞானம் மலி மீறுஹுஸன் மொழி மேரே மொழி மேரே—பாடல் நலியாமல் நீதக் துதிப்பீரே துதிப்பீரே யென்றுஞ் சலியா துடன் பிறந்த தீனவர்களே சலாம் வாரும் தயவுடனே நீரும் தருத்திபாயுட்காரும்.

பதம்-இராகம்-ஹிந்துஸ்தானி-ஆதி தாளம்.

பல்லவி.

ஹுவைதான மஸ்கூத்திலே யது குன்ஹுதாத்து தன்ஜீஹுவாம்
யேவலுள்ளவன் குன்ஹுதாத்தினை
யேத்திடாரொலி நபீயுமாம் (ஹுவை)

அநுபல்லவி.

அஞதியாகிய கோலமற்றவன் அஹதியத்தினில் வித்ததாம்
கனதி நாட்டங்கொண் டாசையானது
ஹக்கு முகம்மது வஹ்ததாம் அது
ஹக்கு முகம்மது வஹ்ததாம் (ஹுவை)

சரணங்கள்.

1\. வன்னிப் புகழைப் பேரிட்டுக் குறிக்கவும்
வாஹிதிய்யத்தின் விபரமாம்
தன்னுடன் ஜலால் ஜமாலு மோதியே
தாத்தின் னூருமுகம்மதாம் தன்
தாத்தின் னூருமுகம்மதாம் (ஹுவை)

2\. இந்த மூன்றதும் யெதிர்நீத மொன்றில்லா
யேக துய்யநாப் பூர்வமாம்
சொந்தமா வண்ணஞ் சொல்வதுங்குபிற்
சுருதிமுறையினி லறியலாம் சொல்
சுருதிமுறையினி லறியலாம் (ஹுவை)

3. மாயபூமியில் மஷ்றிபாதனை
மனதிலறிந்தமல் புரிவதாம்
தாயமாகிரம் பயிர் செய்யுந்தலம்
தரிபாடானவீ டல்லதாம் துன்யா
தரிபாடானவீ டல்லதாம் (ஹ-வ)

4. லாவைக்கொண்டு கலிமாவின் நபியது
நகரதெந்த ஆலமெல்லாம்
ஆவலாகும் அல்லாஹ¬ வல்லாது
அனுதினம் வேறில்லையாம் யெங்கும்
அனுதினம் வேறில்லையாம் (ஹ-வ)

5. குருவினிடத்தில் கைகொடுக்கு முன்னதே
குணமுஜ-தது ரெண்டதாம்
கருவிலுற்றவன் கல்கதோ ஹக்கு
கனதையமற ஒன்றதாம் மனங்
கனதையமற வொன்றதாம் (ஹ-வ)

6. கலிமாவென்றது மூன்று வஸ்துவாம்
ஹக்குதாத்து சிபாத்துமாம்
நலவினப்ஆலும் இதன்பொருளது
றாஹ¬நப்ஸ¬ஜிசுமுவாம் பொருள்
றாஹ¬நப்ஸ¬ஜிசுமுவாம் (ஹ-வ)

7. சேரும்றாஹினைச் செவ்வையறிந்திடில்
செயிகின்சூரத்தில் தோற்றமாம்
யாரும் வோர்மைய தாமுஷாஹதா
அறிந்தஜடமது அழியாதாம் கண்டு
அறிந்தஜடமது அழியாதாம் (ஹ-வ)

8. அறிவுசேர்ந்திடும் ஆதிரெங்கத்தில்
ஆளும் சேக்காதி ருவுத்தர்
திறமை நேர்வழி யாகுமைந்தரில் மக
தீன் மீறுஹ¬ஸன் பாடலாம் கவி
தீன் மீறுஹ¬ஸன் பாடலாம் (ஹ-வ)

லாவணிப்பதம்.

1. ஆதியிறையொளி யஹமதின் திருவே
அனுதின மென்னடிமை கொள் யுருவே
சோதியினின்நபி வழியில் ஆகிருவே
சுருதி கலிமாப் பயிர் பலன் தருவே
காதலாங் கல்பில் கைரியத் தருவே
கரைத்துத் தெளியவைக்குங் கண்ணுடிக் கருவே
ஓதிடும் புகழ்தனக் குபதேசந் தருங் குருவே (ஆதி)

2. நாயனருளெனும் மவுத்துறம் நாளே
நமனும் வரும்போ தெனைக்கார் ஏழை
காயமதிலுயிரைக் கைப்பற்றும் வேளை
கலங்காதெனக்குதவி தந்திடுந் தாளே
தூய கலிமா நாவில் துலங்கவுங் காளே
துசுமனிப்லீசுவந் துடருமல் கோளே
தாயமிரங்கியருள் தமியனுஞ் சொந்த ஆளே (ஆதி)

3. அவ்வலதிருப மனுதி இறையே
அஹதொளிவில் முகம் மதின்பொரு ளுறையே
எவ்வுலகும்வொளி யிடும் அசல் துரையே
இலங்கும் பெயர்இறை யருஷினில் வரையே
செவ்வைஆதம் றாஹக்கும் ஜடத்துக்கும் முறையே
சேர்ந்த நபியாயிருந் தேனெனும் உறையே
இவ்வேளை யெனக்கருள் இசைதரும் மறையே (ஆதி)

4. முகம்மதிய் யொளி வெளி யறிந்தோர்
முதலறுஷின்மேல் வரிமுறை தெரிந்தோர்
சகலம் பதிலெளகில் தன்புக ழறிந்தோர்
ஜவாபுமீதாக்கினில் முத லறைந்தோர்
முகமனுஜின் உம்பர்க்கும் முற்றும்நபியா வந்தோர்
மன்னபி கீழ்லிவாவுல் ஹம்துக் கொடிக் கு வந்தோர்
இகதிலறுஷில்தங்கிஇறைமுன்னிரவில்மொழிந்தோர் (ஆதி)

5. பாகமுமைப் படைக்க நாடின பொழுது
பரவொளிமண்ஜிபுறீலும் மெடுத் தினிது
தேக கபூர் ஷரீ பின் தலத்தி லுளது

தீர்த்த தசனீ மால் முத்துப்போ லானது
ஆகம் அனுசிரதால் அமைத்து றாஹு பூந்தது
ஆலம்படைத்ததும்மை யறிவதர்க்கே யல்லாது
மோகமீருஹுஸன்சொல் முறைவழியைத் தந்தோது (ஆதி)

பதம்-இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தை துயர் தீர்ப்பாயோ மஹ்மூதா யெந்தன்
சிந்தை துயர் தீர்ப்பாயோ (சிந்)

அநுபல்லவி.

தந்திகலகந் தீர்ந்து தரையில் ஐம்பதாம் நாளில்
வந்து பிறந்த வள்ளல் மஹ்மூதா யெந்தன் (சிந்)

சரணங்கள்.

1. ஐவர் பஞ்சத்தனென்று அருளிய போதகரே
வையமதிலே யேழைமேல் மஹ்மூதா யெந்தன் (சிந்)
2. யேதுமற்ற பாவியென் றிகழ்ந்து விடாமலென்னை
சாதுவைத்துபயஞ்செயி மஹ் மூதா யெந்தன் (சிந்)
3. மீகூதி இருபதியில் மீருஹுஸனை யாளும்
மோகூமெனக் குரு வே மஹ்மூதா யெந்தன் (சிந்)

பதம்-இராகம்-டிருமா மெட்டு.

பல்லவி.

இன்னம் வரக்காணேனடி எங்கள் மஹ்மூதரடி (இன்)

அநுபல்லவி.

மன்னன் மிகத்துதிக்குஞ் சீலா
மருவி யெனக்கிரங்கும் பாலா (இன்)

சரணங்கள்.

1. ஹக்கனுக்குந் தோழரடி கல்பில்நமக் கீமானடி
ஷக்கில்லாம லடியார்க்கடி ஷபாஅத்து செய்வோரடி (இன்)
2. வேதம் வேதாந்தரடி வேதம் வரும் போதரடி
காதங்கமழ் வாசரடி கார்த்தருளுந் தஞ்சமடி (இன்)

3. முதலவன்மீதாக்கிலடி முந்திஜவாபுரைத்தாரடி
பதலைபோல் கல் மிதந்ததடி பணிந்துசலா முரைத்துதடி

4. நெடியமிகுருஜிலடி நெருப்புக்கடல் கடந்தோரடி
உடுமதியைப் பிளந்தோரடி உகுதனில்கண் மீட்டோரடி (இ

5. கன்னுசெனும் பிபுலீசடி கடத்தித்தூரத் திடுவோரடி
மன்னன் மீரூஹூஸனுக்கடி மகிழ்ந்துபதந் தருவோரடி (இ

பதம்-இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மதிபதியெந்தன் துயரந்தீரும் மஹ்மூது வேதா
அதிவித சுகபதவி தாரும் அஹ்மது நாதா (மதி)

அநுபல்லவி.

ததியிலிரங்கி அடியேன் தனக்கு தயவினைத் தாராய்
கதிபெறத் திருவடி யைத்தந்து கார்த்திடப்பாராய் (மதி)

சரணங்கள்.

1. பாவவினையால் புவியில் யானும் பாரமாய் பிறந்தேன்
காவலெனவரும் சலவாத்தை கருத்தினில் மறந்தேன் (மதி)

2. நாயனேவலெமன் வதைக்கு நடுங்கினேன் பாலா
தாயகமாக் கலிமாத்தரும் சர்க்குண சீலா (மதி)

3. கல்லுங்கையில் தசுபீஹோதுங் கனமுறும் யோகா
குல்லுமெனுவான் படுவான் சுறுக்கி குணமறிவாகா (மதி)

4. கபுரில் மங்கை யதனையெழுப்புங் காரணரையா
அபுருவுடையதேவி நசலை யகத்திடுமெய்யா (மதி)

5. வாழ்த்தும்நேசர் அனசுதனக்கு வயசதையெடுப்பாய்
தாழ்த்தியிருமான் வயசையெனக்கு நோவறக்கொடுப்பாய்

6. வேண்டி கேட்கும் மீரூஹூஸன் வேட்கையைத் தீர்ப்பாய்
ஆண்டிருந்து வாழும்படி அனுதினங் கார்ப்பாய் (மதி)

பதம் இராகம்-நாட்டை-ஆதிதாளம்.

பல்லவி.

அஹதில் சமைந்துவரும் அண்ணலிறசூலே எந்தன்
அல்லல் தீர்த் தருள்வீரையா (அஹ)

அநுபல்லவி.

ஜெகமீதினிலே தோற்றம் ஜீவஜெந்து கட்கெல்லாம்
அகமகிழ்ந்தேயமுத மனிக்கு மிறைவன் றாதர்
அஷுஹாது தனில்வரு மவனி முசிலிமெலாம்
பிசகற வுருமொழி யவர்கள் பரகெதியில்
லிசைதரக் கேட்டரு ளிறையினுத்தரம் பெருங்
ஹஜரத்துப் பயஹாம்பர் காத்திமுன்னபியே (அஹ)

சரணங்கள்.

1. என்னைப்படைத்தபல னேத்தமின்சானுகியும்
அன்னையீன்ற புவியி லசுபலஸ்ஸாபிலீனால்
தன்னையறியாமல் நான் தவக்குறைகள் செய்தாலு
முன்னைவரவெனக்கு மோக்ஷங்கொடுத்தருளும்
முதலவ னருஷினி லுருதிரை மறைவிலா
இதமுற அதுனவி லணிபத கபுசொடு
பதம்பெற பலமொழி வகைரக சியமுறுஞ்
சதவழிநெறியருள் ஜகதசர்க் குருவே (அஹ)

2. இரவும் பகலுஞ் சிந்தித் தினியகாதலாய் கொள்ளும்
பரிதாபமே கலையாய்ப் பரிந்துகெஞ்சுமன்னேரங்
தரவருளிரங்கிடுந் ததியிலாதாரந் தஞ்சஞ்
சரணகெதியல்லாது சார்பு யேதாலுமுண்டோ
சர்ச்சன சம்பன்ன சர்வ வைபோகா
நற்செயல் வழிமுறை நரர்களுக்கருகா
துர்ச்சனமிருள்நெறி துரத்திடும் யேகா
தற்சமயத்தருள் தற்பரன் தாஹா (அஹ)

3. பதலைபோல் கல்மிதந்தும் பரிவு சலாம் சொல்லவும்
மதலை காத்தபு மகன் வன்னியில் கரிந்துபோய்
குதலைவாயுமிழ் நீரால் குணமா சுவாத்தியஞ்செய்
முதலே படைத்தொளிவை மூதறிந்தோரல்லவோ
முகமலர் மீதாக்கில் முதல் ஜவா புரைதருஞ்
சுகமாதம் றாஹாயிருஞ் சடமிடை கபிவரும்
அகமருஷினில் வரி அஹுமதென் றரிவா நம்
இசும்படைக் கைம்பதாயி ராண்டுமுன்னபியே (அஹ)

4. ஆதிதாத்திலமைந்து அவனொளிவுருவாகி
சோதியாதமுதுகில் தூய்யோன் பிணையாக்கிப்பின்
நீதிவழி ஐம்பத்தோர் நிலத்தில் அப்துல்லாபெருஞ்
ஜாதிக்குரைஷிக் குலத் தவத்தின் மணியாய்வருஞ்
சந்திரன் பணிசெயுந் தந்திருபிளவதாய்
அந்தமிகுருஜினில் அக்கினிக்கடல் சென்றோர்
நந்தமின் விரல்தனில் நதிகள் வரப்பருகும்
உந்தன்மீறுஹூஸனை யாளு முகம்மதுவே (அஹ)

பதம்-இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சொர்க்கப்பதி வாழ் பலனை யார்தரு வாரினி
யார்தருவா ரினி யார்தருவா ரினி (சொ)

அநுபல்லவி.

மக்கககாளுமெங்கள் மஹ்மூதால்லாதெனக்கு(சொ)

சரணங்கள்.

1. பாவமெனும்நோயதர்க்குபருலெனுந்தௌபாவைக்கொண்டு
யேவலுடன் அமல்புரிய யெனக்கொருவ ராருமிலை (சொ)
2. வந்தவழி தெரியாமலே மாயை செய்யு மருவலரை
பிந்தவிட்டு காத்தருள பேர்தருகவேரிலையே (சொ)
3. நாலுபகை யோரில் வரும் நானெனும் பெருந்துடக்கை
ஜாலந்தருஞ்சிறுதுடக்கைத் தள்ளியார் தருவோ ரினி(சொ)
4. எனதுயிரை வாங்கும்போது இபுலீசுவந்தடரமலே
மனதுகந்து ஆதரிக்க மன்னவரே வேறில்லையே (சொ)
5. மாதலமக்காமன்மஹூ மூதினில் மன்றுடியென்னை
கோதலத்தில் குடிபதிவாழ் கொற்றவரேவே ரிலையே (சொ)
6. தாயுங்காயு மாய்ப்புகழ்ந்து தண்டமிழால் கவியுரைக்க
ஆயுமீறு ஹூஸனுக்கருள் அண்ணல்யாமுகம்மதுவே(சொ)

பதம்-இராகம் தோடி-அடதாளம்.

பல்லவி.

புவியிலே நபிபேரில் முனஜாத்தை
போற்றிச்சொல்வதுங் கைரடா லேசாய்
தாழ்த்திப்பேசவுங் குறைவடா நாளைப்
பூரணமன் றுடுவார் கெடு மூடா (புவி)

அநுபல்லவி.

செவிகொள் துதிசெய் சிறக்குஞ் சபையில்
செய்யிதிறசூலின் நாமத்தின் தோத்திரஞ்
சவியாக்கேட்டொரு சலவாத்தோதவே
சாகான் பத்து சலவாத் துரைக்கின்றான் (புவி)

சரணங்கள்.

1 ஆதியஹதாம் உஹதுரு வாஹிதிய் யானமுகம்மதராம்—உம்பர்
அம்புவியில் காண்பதெல்லா வுயிர்க்கும் அபுல்அருவாஹின [ராம்—பரஞ்
சோதியருஷில்பதிவுறும்நாமம்றெசூலென் றறிந்தவராம்—வானந்
துன்யா படைக்குமுன் னுண்டன்பதாயிரந் தூண்டாவிளக்கி [னராம்

நீதியதாலிறையோன் மண்ணின் ஆதமை
நேராய் படைத்ததில் றாஹைறூதுமுனம்
காதன்மீதாக்கினில் நன்மொழி வாங்கித் தன்
ஞலேயறிந்தமுன் ஞலே நபியடா (புவி)

2 அஹது சமது ஹலரத்தின் னூரி லானமுகம்மதிய்யா-யெல்லா
அந்தரங்கத்தின் ஹக்கிகத் வெளியான அஹ்மதொளிவதை [யா—யெங்கும்
ஜெகநாதன்னடிமுந்திப் படைத்தது செய்ய தொளிவதையா [வேலே
செப்புவியில் வஸ்தடங்கலேயும் படைத்தானபி ஒளிவிலய்யா
தொகையுள்ளோன் றிருத்தூத ரில்லாவிடில்
துய்ய ஆதம்முதல் மைற்ற யாவையும்
வகையதாய்ப் படையேனென்று வல்லவன்
வண்மையாச் சொல்வதர்க் குண்மை யில்லேயோடா (புவி)

3 நபிகள்நாயகம்பேரில் மவுலூது நாடோறும் ஓதிவந்த-பேர்க்கு
நன்மைஷபாஅத்துசெய்வதுவாஜிபாம்நம்நபிமொழிந்தார்மிக
அபிநவம்நபிஅவதாரச்செய்தி யாருமுகந்துரைத்தோர்—அப்ப
அல்லாறஹ்மத்துவாசல் திறந்திடும் அண்டர்துஆவுஞ்செய் [வார்
சபியாம் நபியின் மவுலூதைப் பெருஞ்
சங்கையாக ஓதல் முஸ்தஹப்பா மென்றுந்
தபுசீறு ரூஹுல் பயானில் வந்ததை
தரணியிலிதை சரணஞ்செய்யடா (புவி)

4 கோடானுகோடி யிமாம்களோலிமார்கள் குத்துபுகள் உலமாக்
[களும்—நபி
கொள்கை மவுலூது ஓதுரதைப்பற்றி குணமாப் புகழ்ந்தோர்
[களும்—இந்த
நாடுகளில் மவுலூது ஷரீபினை நலிகுரை வாய் சொர்க்களும்
[சொன்னால்
நாதாக்கள் சொற்படி பாவியாவானென்று நல்ல கந்தூரிகளுஞ்
[செய்ய
ஆடுமனதில் அகம்பெருமை யில்லா
அன்புடன் உண்மைப் பலாவு சோறுகறி
கூடுதலாச்செய்து மவுலூதோதிப்பின்
குலவும் விருந்திட்டால் நலவும் நபியடா (புவி)

5 தோத்திரஞ்செய்யும் நபியின் அற்புதஞ் சொல்லமுடியாதடா
[முதல்
தோன்றும் ஆத மிவர் பொருட்டால் ஜெய சோபனம் பெற்
[றாரடா—வெகு
நேத்தியாமிகுறாஜில் நெருப்பெனும் நீளாழி சென்றோரடா
[விரலில்
நேசமாயமன்பது னுயிரம் பேருக்கு நீர்த்தாகந் தீர்த்தோரடா
போற்றிடும் பனிஇசுறாயில் நாளில்
புலூக்கிய்யா நபிமேல் காதல்கொண்டிட
செத்தவர்க்கருளெல்லாம் புரிந்திட்ட
செய்திகளைக்கேட்டுங் காதலிருளோடா (புவி)

6 பாரில்பெரியகஃபுப்புலவோரும்பானஸ்ஸு ஆதுரைத்தார்-நபி
பாலி லொளிவிடும் வாளெனச்சொல்லவும் பரிவட்ட முங்கொ
[டுத்தார்—முந்தி
பூருவநாதரைப்போற்றிபுருதாவும்பூஸரிமாமுரைத்தார் மனம்
புந்திக்கலகஞ்செய் பக்ஷவா தந்தன்னை போக்கிஷபாவுஞ்செய்
[தார்
கோரல் பெரும்பாவமெல்லாம் பொருக்கவே
கொலையுள் ப்டநபி மன்றாடுவாரெனக்
காரணமெல்லாங் கருத்தி லறியாமல்
ஹக்கனபி புகழ் தூக்கமுனக்கடா (புவி)

7 ஆண்டவர்பேரில் ஆசைவைத் தோர்களுக் காசார மெத்தவே
[ணும்—வெகு
அன்பாய் மஜிலீசைத் துப்பரவாக்கியங் கத்தர்பூவா செங்கெ
[ணும்—பின்பு
பூண்டிடும்நபி பேரில்முனு ஜாத்தைப் போத்திப் புகழப்
[பூணும்—அப்பா
பூவாசமாநபி வந்துமிதாலாகிப் போவார்களென்று தோணும்
காண்டகா காரணஞ்செய் ஹபீபினைக்
கண்டவுடன் சலவாத்தை மிகுக்கவே
மூண்டிடும் பாவ மெல்லாம் முதிர்ந்துபோம்
மூமீன் தனக்கெல்லாம் ஆமீன் கபூலடா (புவி)

8 மக்கநக ரப்துல்லாவின் தவத்துநி மாதாமினு செல்வரே-மேல்
மஞ்சுகுடையிடு மாமதிவைாழும் வள்ளல் மஹ்மூதரே—ஒரு
வுக்கொன்றில்லாதவர்க் காதரவாய்வந்து சன்னிதிதருவோரே
[இந்த
தாரணியி லுங்கள் தோயாப்பதத்தினைத் தந்தருளும்பிரே
யெக்காலமுந்துதி செய்யு மஜிலீஸில்
யேவுமுனுஜாத்திலோது சலவாத்தை
திக்கிருகச்செய்யும் மீருஹூஸைனுக்கு
சிந்தை தெளிவுயிர் தந்த நபியடா (புவி)

பதம்-இராகம்-இந்துஸ்தானி.

பல்லவி

என்துயர் தீர்த்தருளய்யா இந்த
ஏழைதனக்கிரங்கி யாளவுமெய்யா

அநுபல்லவி.

ஜென்சுகமதீனு வாழ்மஹ்மூதா
சீர்பாதங்காணுமல் தியங்குறேன் நாதா (என்)

சரணங்கள்.

1. பொய்யாளனிவனென்று புறந்தள்ளா தேழை
செய்யாமல் செய்யுதவி செய்வதிவ்வேளை (என்)

2. கவலையெத்தனை வந்து கண்டாலிங்குடனே
அவையறப் போக்கிவைத்துன் ளுள்வதுங் கடனே (என்)

3. ஏவல் விலகலீதென் றறியாத பாவி
ஆவலுன்மேல் புகழ்ந் துன் னடைக்கலங் கூவி (என்)

4. கடனும் பருனுகளை கலாவாகச் செய்தேன்
திடனு னுங்களின் தஞ்சம் சிந்தையில் வைத்தேன் (என்)

5. கவுத்துவஞ் செய்துவருங் கன்னுசை யோட்டி
மவுத்து வரவுங்கலி மாப்பாலே யூட்டி (என்)

6. மேம்புகழ் கவிபாடு மீரு ஹா-ஸனே
சோம்பலில் லாதருளுஞ் சொர்க்கம் யாசீனே. (என்)

பதம்-இராகம் தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதியொளிவினில் வரும் நபியே ஆம்
அனுதினமருள் தர ஆதி

அநுபல்லவி.

சோதி மணியாயெங்குந் தூண்டா விளக்காம் பரி
சுத்த வொளியா வருஞ் சித்த மிரங்கிக்காரும் (ஆதி)

சரணங்கள்.

1. இந்த ஜனன மவுத்தானதில் கூடாம்
யேகன் வணக்கம் நிலே யுனக்கது வீடாம்
சொந்த சலவாத்தினை சொல்வதும் பாடாம்
சுவர்க்கமு மெனக்கருள் புரிவது வீடாம் (ஆதி)

2. பயமொடு விலகலே யகலவைத் தேரும்
படிமையல் அடியோடு விடநலமேரும்
நயமொடு யேவல்செய் நன்மையில் சாரும்
நபிபதந் தந்திடில் நல்கதி சேரும் (ஆதி)

3. தரையினுள்ள தலீலால் தலைவனை யறிந்து
தஞ்சமஞ்சு பருலே நெஞ்சினில் புரிந்து
இறைவன் தொழுகைதனை இயல்பாகக் கொணர்ந்து
என்றும் நபி சொர்க்கத்தி லெனைவைத் துகந்து (ஆதி)

4. முந்திரேசுமீ தாக்கில் முதலுரை தந்த
முறைமீரு ஹா-ஸன் கவிக் கிரங்கவும் வந்த
எந்த நேரமு முள்ளில் யெழிலா யிருந்த
இகபரசுகந் தரவெனக்கருள் சொந்த (ஆதி)

பதம்-இராகம் தன்யாசி-ஆதிதாளம்.

பல்லவி

ஒருவ ஞெளிவில்வரு மிருபதி யரசரின்
உபயடி நினை மனமே (ஒரு)

அநுபல்லவி.

மருவு மலருஞ்செறி மதினுவில் வாழும்
மஹ்மூதைத் தேடி விழிமலர் மாரி வீழும் (ஒரு)

சரணங்கள்.

1. கானலே ஜலமென காண்பதும் தன்மை
காயமுஞ் சுகமது கனவிலு மின்மை
தானமுந் தவநெறி தவறுவதின்மை
தாஹா நபிமீதில் சலவாத்து நன்மை (ஒரு)

2. விதிபருலி லேசதும் மிகுபார மிருது
விலகல் ஹறாம் பெரிது மிகச்சிறி தவிர்த்து
பதியில் பெருஞ் சிறிது முடையோர்மேல் விடுத்து
பற்றிடும் நெறியிது பாகமாய் கொடுத்து (ஒரு)

3. அஹதில் ஜாயம் நிண்ணயம் அமலாம் நல்லாங்கு
அவனின் இபாதத்தினில் அகநயமோங்கு
உஹதின் வேதத்தின் நலம் உண்மையை தாங்கு
உறை மீறுஹாஸன் கவிக் குபையஞ்செய் பாங்கு (ஒரு)

பதம்-இராகம் பியாக் ரூபகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வந்து தயவா புரிபத மெந்தனின் நாதா ஒளி
வா மஹ்மூதா (வந்து)

அநுபல்லவி.

எந்தன் மனதில் அந்தி பகலாய் இஷ்டம் ரெசூலா இக
பந்தவினை யகற்றியருளும் பானலஞ்சீலா மேன்பதவிதா
[அவுலா (வந்து)

சரணங்கள்.

1. கனத்த சுன்னத்ததனை விடுத்து காதல் துதிசெய்ய தங்கள்
மனத்திலுகந்து மன்னுனிடத்தில் மன்றாட்டமுய்ய
பெருமன்பு வைத்துய்ய (வந்து)

2. அனசு தமக்கு நூத்தி யிருபதாயிசுங் கொடுத்து அவர்
தனது முதுகில் வரும் பாலகர்க்குத் தானீளத்தொடுத்து
வயதந்தருள் அடுத்து (வந்து)

3. ஆண்டவர்பேரி லுவப்புவைப்பது யாருக்குங் கடனும் மனம்
பூண்டவர்க் கீமான் ஷறுத்தாகுமென்றும் புனிதமாய் திடனும்
எனைப்பூர்த்தி செய் யுடனும் (வந்து)

4. நாயன் தனக்கு கோபம் வரவும் நான்பவஞ் செய்தேன் தூய
[மாய நபிக்கு
மாற்றமுஞ்செய்து வன்பிழைக ளெய்தேன்
பெரு மாய்புச்செய்தழுதேன் (வந்து)

5. முற்றப்பருவ வயசு தன்னில் மோகமாமுன்னே நான்
குற்றங்குறைகள் செய்த போதிலுங் கோழையா மென்னே
குணங் குருனுகுமன்னே (வந்து)

6. வசந்திசையில் வீசுமெய்யில் வசமொளி வேதா மாயக்
கோச பாச வாசைவிடுத்த கோனகர்த் தூதா
மீரு ஹூஸன் கவி தாதா. (வந்து)

பதம்-இராகம் சாமா-ஆதிதாளம்.

பல்லவி.

அகிலவாழ்வை நம்பி அல்லா தனே மறந்து
ஆகா செயலேன் செய்கிறாய் (அகில)

அநுபல்லவி.

திஹிலான மவுத்தினுல் க்ஷணப்பொழு தேகம்போம்
தீயா தீயா தீயா நரகியா (அகில)

சரணங்கள்.

1. பெண்டுபிள்ளைகள் பணம் பிரியா மனதில்வைத்து
பேசாமல் வாய்மூடி நீ சாகிறாய்
புண்டோடிப்போவதினு லாவதென்னடா
பேயா பேயா பேயா அதாபேயா (அகில)

2. உலகில்தாழ் பிரவில்லாதுயிர் மனுவாகி வந்து
உரியோனை வணங்கா நாளேன் போக்குறாய்
தலையுயிர் போகும்போ தேதாகிலும் வருவ
துண்டா உண்டா உண்டா சொல்லண்டா. (அகில)

3. வாழ்வை இழந்து போவாய் மவுத்து முன்னே வருகும்
வையமீதி லாசைவைத்து யேன் கெடுறாய்
தாழ்விலா அமல்தன்னை செய்தால் துணையாகுமே
சரியா சரியா சரியா வழிநெறியா (அகில)

4. வாலைப் பருவமென்று வாழ்நாளை நம்பியே
வந்தனை செய்யாம லலைகுறீரே
காலன் திடீரென்று வாங்கும்போ துயிர்நெஞ்சங்
கலங்கும் கலங்கும் கலங்கும் ஜடங்குலுங்கும்(அகில)

5. இச்சைவைத்துப் பணம் லெக்ஷம் லெக்ஷமாய்த்தேடி
இறையவன் சொற்படி யிய்யாவிடில்
சிக்ஷை செய்வான் நாயன் தேடி அமல்தன்னை
செய்வாய் செய்வாய் செய்வாய் சுகம் பெறுவாய்(அ)

6. மக்கநபியின் தாசன் மீறுஹுஸன் கவிக்கு
மருவில்லா திறங்கியே நமை ரெக்ஷிக்கும்
ஹக்கன் கெதியல்லா லுதவியொன்று மில்லை
கண்டாய் கண்டாய் கண்டாய் நெறிவிண்டாய்(அகில)

பதம்-இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வள்ள லெந்தனுக் கிரங்காய்
மஹ்மூதெனும் (வள்)

அநுபல்லவி.

புள்ளி திருமுத்திரைக் குள்ளநபியே கெதி
விள்ள வுரைத்தேனிது தெள்ளிதா யுள்ளவுள்ள (வள்)

சரணங்கள்.

1. தந்தைதாய் குரு வொஸ்தா தெந்தனுயிர்க்கு நாயன்
சொந்தமாக வருளுந்தாதா தாதாவென் (வள்)

2. பாராய்ப் பெருங்கவலை தீராய் சுரத்தில் புனல்
ஆறாய் நதிபெருகுஞ் சீறூ றூறூ றூறூ ரென் (வள்)

3. பாயிர முங்கள்நாமம் ஆயிர மாகையினாலே
தாயக மாயிரங்கி நாயக மன் மன் (வள்)

4. தன்மை மீறுஹுஸனும் நன்மை பதம் நம்பினேன்
வன்ம மகற்றியாளுஞ் ஜென்ம சுகம் சுகம் (வள்)

பதம்-இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அண்ணலிற சூலேயுங்கள் அன்புவர வுங்காணேன்
யெண்ணாதது மெண்ணினேனய்யா நானென்ன செய்வேன்

அநுபல்லவி.

அல்லும் பகலுமுங்கள் அனுக்கிரகத்தை நம்பும்
புல்லனை இருந்தாகிலும் பொருத்துக் கொள்வாய் (அண்)

சரணங்கள்.

1. உலையின் மெழுகதுபோல் உருகுதென் திரேகமெல்லாம்
தலைவிதி நானறிகிலேன் தமியென் செய்வேன் (அண்)

2. பாவி படுந்துயரம் பரிதாபமாகக் கெஞ்சும்
நாவினுங்களைத் துதித்தேன் நானென்ன செய்வேன் (அண்)

3. கலம்பத்துல் லாவைக்கண்டால் கணக்கில்லா தீவினைபோம்
மருபாவி கிடைக்காதுகாண் மக்கம் மதீனா (அண்)

4. ஏழு மனாருதன்னை இருகண் குளிர பார்த்தால்
ஏழு நரகத்தைவிட்டு யீடேத்தமாவார்கள் (அண்)

5. அல்லா ரசூலேமுந்தி அதன்பின் தாய்தந்தை குரு
எல்லா வினையும் நீக்குவாய் இறையோனின் தூதே (அண்)

6. எனதுயிர் தந்தை நீயே இலங்கும் பொருளும் நீயே
தனது சன்னதி காட்டுவாய் தாஹா நபியே (அண்)

7. சிறுபாவம் பெரும்பாவஞ் செய்த வினைகளெல்லாம்
பொறுக்கும் படியே மன்றுடும் பொற்பதி சேர (அண்)

8. பூரண மஹ்மூதை போற்றி முனாஜாத் தோதார்
தாரணியிருந்தென்ன வாந்தவ மில்லாது (அண்)

9. மேன்மை ஆதிரெங்கத்தில் மீறுஹுஸன் தமிழ்க்கு
பான்மைநேர் வழிதந்தருள் பயஹாம்பரே (அண்)

லாவணிப்பதம்.

கூறக்கேளுமூமீன் தொழுகவேணுமென் றருருஆன் ஹதீதுமுதல்
வெளியாக குலவும் ஆரிபீன் மெஞ்ஞான கிதாபுகளில் குருவாக்
கருளைப் பாருந் தெளிவாக வாரிசூழ் புவியில்பிறந்த
மூமீன்களே வள்ளல் நபியின் உம்மத்தனவோரே

வல்ல நாயன்தனை யறிந்து யீமான்கொண்டு வாகா பரு
லஞ்சையுந் தொழுவீரே வாருசொல்லி நாலுவேதம்
சுகுபுகளும் வண்மை முறசல் நபிமாருமே
வரிசை வணக்கந்தன்னை தினமு மெடுக்கச்சொல்லி
வழங்கி வருவதைப்பார் நேருமே கூறும் ஆதமுதல் நமது
நபிவரையில் குல்லும் நபிதொழுது முடிவாக
குருஆன் நானூத்திச் சின்னந் தலந்தனிலே நாயன்
குறித்து விரித்தான் படிப்படியாக (கூற)

2. ஒருவராறும் விதித்தொழுகை மறந்துவிட்டால்
ஓயிலாம் நரகமழல் மனையிருந்து
உருகும் உலகுமலை யதிலேயதாபு பட்டு
உழன்று கருகும் அஞ்சித் தொழுதிருந்து
அரூப நாயனை வணங்கக் கடமையென்று
ஆறிபொலிகள் குத்து பனைவர்களும்
அறபி முகிய்யித்தீனுஞ் சூபி யோகிகளும்
அணுவும் விடா வணக்கம் புரிவர்களும்
குறியாக் கழுவுதனில் லெபி இருந்த பொழுதும்
குமிழி தண்ணீரிற் றாழ்ந்துங் குறியாகக்
கொலை செய்ய காட்டினில் புலியெதிரே வந்தாலும்
கோனைத் தொழுகவேணும் நெறியாக (கூற)

3. ஆதியிடத்தில் மிகுறாஜில் நபியுஞ் சென்று
ஐம்பதை ஐந்தாய் அருளாக்கி
அகிலமில் தீன்குல முசுலீங்க ளனைவர்க்கும்
அடிமை வணக்கமென்றும் பொருளாக்கி
சோதி வேதம் நூத்திப் பதினாலு சூறத்தில்
தோன்றும் நானூத்திச் சின்னந் தலந்தனிலே
சொல்லி வருவதையுங்கேட்டு அறிந்து வீணாய்
சும்மா விடாமல் தொழும் நிலந்தனிலே
ஹுமதை வந்து சுழன்றெடுக்குந் துரும்பா முயிர்
கொண்டுபோக முனம் துரிதாக
கும்பிதனில் அதாபு ஹையெனும் ஒடையில்
கொடுமைப் படுமுன் தொழும் விறுதாக (கூற)

4. மண்டலத்தில் பொய்க் குருவாஞ் சேகுமார்கள்
மறுட்டி இபுலீசைப்போல் தொழுகையது
மருளும் வெளிச்சமென்று சொல்லிவிட்டு
மாறுங் குபிர்ச்செயலுக் கருகயிது
என்றுந் தொழுகைதனை யெந்தவிதம் விடவும்
இடமில்லை யென்றுவேதந் தனிலாகும்
எங்கள் நபியும் உபாத் தாகும்போ தோசியாது
இடைவிடா தருளிய முடிவாகும்
கொண்டல் கவி நபியின் தொண்டன் மீருஹாசனின்
குணமுள்ள கவியது நெறியாக குல்லும் உடன் பிறந்த
முசுலீம்க ளாகையால் குறைவின்றித்
தொழும் நயம் சரியாக (கூற)

பதம்-இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அண்ணலிர சூலடிகளைத் தேடியே ஆசையாகு ரென்றான் நபி
அன்பு வருமென்று சிந்தைதனில்நித்தம் ஆவலாகுரண்டி (அ)

அநுபல்லவி.

திரு முன்பு கண்ட தூரம்பின்பு தெறிமகு மூதறுகுமடி சோதி
முச்சுட ரச்சு பிடரிக்குங் கீழாலே முன்னவன் முகராம்
முதலோன் திருவொளி வேசர் முறுசல் நபிகளின் நேசர்
அதி நேர்வழி தீனின் போஜர் அடியேனுக் கேதுணை
ராஜ ரன்றியே ஆதாரமில்லையே (அண்)

சரணங்கள்.

1 எங்களிரசூலின் காரணத்தைச்சொல்ல யேழுவாரியும்லொன்றாய்
எழுதும் மசியாகச் சேர்த்து மரங்களை யெல்லாங் குச்சிய
[தாய் மேல்
துங்கவானம் பூமியேழின் திறள் யாவுந் துயர்ச்சியாக கூண்டு
[றும்பத்
துயரங்கியாமத்து நாள்வரை யெழுதினால் துலையாதாங்கீர்த்தி
[துதியே
தருந்திருநாதர் துலங்கும் ஒளி மஹ்மூதர்
பதியாம் பிரபல நீதர் படைத்தோனின்
தோழரல்லாது வேறில்லை பாதமே கெதியே (அண்)

2 தேசாதி தேசத் தரசர்கள் போற்றிடுஞ் ஜெகத சர்க்குருவே [தங்கள்
தேகங்கஸ் தூரியின் வாசத்தைக்காணுமல் தினமுங் கெஞ்சுரே [ஞன் கெடு
பாசவலையெனு மாய்கையில் சிக்கியே பாவியானமூதேன் இந்த
பாருலகிலென்னைப் போலே நபுசுக்குள் பட்டவனிலையே
பயந்தேனல்லாவுக்கு யானே பலகால் துஆயிரந்தேனே
நயந்தேன் நபிபுகழ்தானே நபிநாயகம்பேரில்
ஓதும்சல வாத்தை யானுகந்தேனே [அண்]

3 ஒண்ணுக்குலெக்ஷம் உயர்நன்மைதங்கிடும் ஒருவனின் நகராம் [புகழ்
ஓதிடும்மக்கம் கஃபத்துல்லாவெனும் ஒருபொருள்வீடாம் கோர்
கண்ணுக்கடங்காத காக்ஷியைத் தந்திடுங் ஹக்கனின் அருளாம் [உள்
கருவினுயிருகி பேரொளியாயெங்கும் காத்திமின் பொருளாம்
கருணாகரக் கடவுளாம் கரைசேர்க்க மன்றும்பெயராம்
குருவாம்மீரு ஹூஸைன் நினைவாம் குருஆனின் தீன்வழி
நேர் நடாத்திய கோன் முகம்மதுவே (அண்)

பதம்-இராகம் ஆரபி-ஆதிதாளம்.

பல்லவி.

அனைத்தாளும் வல்லோன் இனத்தில் மனுவானோர்க்கு
அருளும் வாக்கியந்தானே (அனை)

அனுபல்லவி.

தனக்கோர் நிகருமில்லான் துணையன்றி வேறில்லான்
சந்தத மவன்றனைப் பூசனை செய்யசசொல்லி (அனை)

சரணங்கள்.

1. புவியினில் மனுவாகப் பெரியோனமைப் படைத்து
புதினமெலாங் கொடுத்தானே
யவனை வணங்கும்படி அனைவர்த காலமும்
அடிமைத் தனத்தை விதித்தானே மாயக்
குவலயம் பெண்ணிச்சை பொருளிச்சை தனைவிட்டு
குருவை யரிய உரைத்தானே
தவறுமல் விலகல்விட்டு யேவலைக் கொடுவர
துரையி லிருக்கமட்டும் நிரையீதென் றுரைத்தானே (அனை)

2. ஈமானின் பருலாறும் இசுலாத்தில் பருலஞ்சும்
யீரஞ்சு மொன்று மென்றானே ஆறும்
ஓமான கலிமாவும் ஒருவன் தொழுகையஞ்சும்
ஒருக்கால் விடப்படா தென்றானே மூன்றுந்
தாமான தக்குவாவும் தவநிலை நோம்பையுந்
தானமும் யெளியோர்க் கென்றானே பவ
காமா வினைகளற கறையன்றிப் பிறந்தோன்போல்
ஹஜ்ஜையு மதினாவில் நிக்ஷயம் போவென்றானே (அனை)

3. மண்டல மனுடரை மண்ணால் படைத்து தன்னை
வணங்கும்படி யருளினானே விட்டால்
விண்டிடு மாடாடு போல்நமைச் சொல்லவும்
வேதத்தில் திருவுளமானே அப்ப
கொண்டிடும் பூலோக வாசையிலழுந்தினால்
கோனவனை மறந்தானே மவுத்தில்
கண்டு வினைகள் யாவும் கலிமாத்தனை மறந்தால்
கலங்க உயிரைவாங்கி மலங்க வாதனை செய்வான் (அனை)

4. துனியாவில் பெரும்பாவம் துணிந்தொருவன் புரிந்தால்
துயர் தவுபா செய்யென்றானே கெட்ட
சனியான சிறுபாவஞ் சறஹைத் தள்ளியே செப்பில்
சரி நன்மை யதைப்போக்குந் தானே நாயன்
முனில் நோக்கும் நேர்வழி தனிலிருந்தே நின்றால்
மோக்ஷம் நிக்ஷயம் பெறுவானே இந்த
பனியாதமக்களில் இனி மீருஹூஸனுக்கு
படைத்தோன் கெதியன்றி யெவ் விடத்தி லொன்றையுங்
[காணேன் (அனை)

பதம்-இராகம் காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னின்ன விதமாகத் தன்னை வணங்குமென்ற
யேகன் சொல் கேள் மனமே (இன்)

அநுபல்லவி.

மன்னனை யறிந்தோர்கள் முன்னோன் மவுத்து வரும்
முன்னே அமல்புரிந்து மோக்ஷ கெதியைப்பெறும் (இன்)

சரணங்கள்.

1. முந்திக் கலிமாச்சொல்லி மூமீன் குலத்தில் சேர்ந்து
முசுலீமாகியே தீனில் இசுலாம் பருலைத் தேர்ந்து
சிந்தித் தொழுகை யஞ்சி தினமு மெடுத்தே யோர்ந்து
ஜீவநாயகந்தனை ஜென்மமட்டுமே தாழ்ந்து (இன்)

2. சிந்தை தனிலேநமக் கீமான் பருலு ஆராம்
செய்யு மிசுலா மஞ்சில் ஜெயமாங் கலிமா பேறும்
ஐந்து நேரந்தொழுகை அனுதினம் பணிந்தோராம்
அவனைப் பயந்துகண்ட அடியார்க் கடமை வாராம் (இன்)

3. தன்மீதில் விதியான தவத்தினுள் வணக்கமாம்
தவுஹீது மஹாரிபா முஷாஹதா யிணக்கமாம்
நன்மை முறுக்கபா நம்திக்கீர் விளக்கமாம்
நவமாம் பிக்குஹாகளும் நல்குண முளக்கமாம் (இன்)

4. வெளியான வணக்கத்தில் வெகு சுத்தி கரமாகும்
விதியான தொழுகையும் மேலாஞ் சக்காத்தாகும்
களிப்பான நோம்புடன் கருதும் பித்துருவாகும்
ஹஜ்ஜா உம்ரு இல்மும் கருணையாப் படிப்பாகும் (இன்)

5. குருஆனை யோதலும் குருசல வாத்தோதல்
குல்லும் பருலு யீது குணமாயிருத்து வாழ்தல்
தரும் ரவ்வில் முளித்திட்டு தஹஜ்ஜத்து தொழுகுதல்
தனிலுஹாயிஷ்ருக்கு தனதவ்வாபீன் தாழ்தல் (இன்)

6. தனியிஸ்திகாருவும் தஹிய்யத்தில் மஸ்ஜிதும்
தங்கும் வுலூவியும் தனிலேத்த மானதும்
இனித்தக்க சுன்னத்தும் இயல்நோம்பு தராஜாத்தும்
எளியோர்க்கு சதக்காவும் இஹஸானும் செய்யேத்தம் ()

7. வாயாலுதவி வேணும் வலக்கையா லுதவியும்
வழங்கும் சாதாத்லைதயும் வலு உலமாவையும்
தாய்போல் பெரியோரையும் சங்கித்து மிகச்செய்யும்
தரணியி லிதுவெல்லாம் தனியோன் வணக்கமுய்யும்(இன்)

8. வாரத்தில் யேத்தமாம் வலு ஜும்ஆ கொண்டாடும்
வல்லிமாம் ஜமாஅத்தை வருந்தியே நயந்தேடும்
தீரும் ஜனாஜாவில் சேர்ந்தே தொழுக கூடும்
தேரிநல் நடத்தையும் செய்து வரவும் நாடும் (இன்)

9. தக்குவாவின் வணக்கத்தில் தனில் மூன்று வகை காணும்
தாழ்ந்ததையாகிலும் தணையெடுத் திடப்பேணும்
ஹக்கான தவ்பாவில் கைசேதம் மிகவேணும்
கருத்தில் பயமும் வைத்து மரித்தல் கடனைப்பூணும் (இன்)

10. இசுலாத்தில் வாஜிபு யேழாகுஞ் சிறந்திடும்
இசுலாத்தின் ஹக்குகள் ஆறாகும் தெரிந்திடும்
இசுலாம் சுன்னத்து பதி னேழாகும் பொருந்திடும்
இன்ப மீருஹுஸன் இதை சொன்னேன் அறிந்திடும் (இன்)

பதம்-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

இப்போதருள்புரி யொண்ணுதா ஹாமீ
தென்மேல் யேதாகும் வாதா (இப்)

அநுபல்லவி.

எல்லா நபியவர்க்கு மேலே
யீடேத்த மாகவந்த தாலே
பொல்லாஎனெனை நல்லானுக்கும்
சல்லா அலைகில்லா வே (இப்)

சரணங்கள்.

1. என்னை அலைக்குதையோ ஆசை
யெவ்விதம் வெல்வேனிந்தக் கேசை
தன்னையறி வன்னையைப்போ
லென்னைவைத்து சன்னை காட்டும் (இப்)

2. வஞ்சமிதை யந்தனில் கேடு
மாற்றியொளி செய் நல்ல வீடு
அஞ்சவேணும் நெஞ்சில் வைத்து
தஞ்சமென்று கெஞ்சி வந்தேன் (இப்)

3. மெய்க்கபி சந்தமக்க காதா
மீருஹுஸன் கவிக்கருள் தாதா
ஹக்கு நபி மிக்கவர்கோன்
இக்குவில் லாசிக்க வந்தேன் (இப்)

பதம்-இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

தமியேன் மீது வாதா தா ஹா
சரணந் தரவொண் ணுதா (தமி)

அனுபல்லவி.

கமகமென் றிடுங் காயமே அதில்
ஹக்கனின் முகர் சாயமே
நமது குலத்துக் காதாய மேவரும்
நபிகள் நாயகந் தாயகமே இன்னம் (தமி)

சரணங்கள்.

1. நாளு மெந்தனிருதயமே வல்ல
நாயகத்தனின் பயமே
சூழும் விதியென்ன மயமே யெனை
சுத்தனென்றருள் நயமே
பாழும் வினைகளை மாற்றுவாய் நல்
பதவி தந்தெனைத் தேற்றுவாய்
வாழும்படி யெந்தனை போற்றுவாய் எங்கள்
வள்ளல் வந்துகரை யேற்றுவாய் (தமி)

2. உலக மாய்கை யாபாசம் அதை
உகந்தவர்க்கினி வாசம்
விலகல்தனிலும் விசேஷம் நான்
விரும்ப நன்மையில் மோசம்
புலனை ஐந்தையு மாட்டுவா யெந்தன்
புந்தி தெளியவுந் தீட்டுவாய்
கலையானதை போட்டுவாய் அருள்
ஹக்கன் வழிதனைக் காட்டுவாய் (தமி)

3. அல்லும்பகலுமுன் துதியாம் தங்கள்
ஆஞ்ச வைத்திட நிதியாம்
நல்ல வேளையித் ததியாம் நபி
நாயகம் பதங் கெதியாம்
புல்லனாகிலும் பொருத்துவாய் இந்த
புவியில் நல்லமல் வருத்துவாய்
கல்லை யிபுலீசைத் துரத்துவாய் யென்
ஹக்கில் சொர்க்கவா ழிருத்துவாய் (தமி)

4. அடியர் தன்பரி பாலா குரு
ஆனின் சற்குண சீலா
முடிகளின் நபி மேலா தனி
முதலவன்பின் றசூலா
குடிகளுக் கனுகூலரே உயர்
குறைஷி வங்கிஷக் கோலரே
மிடி யகற்றிடும் பாலரே பையல்
மீருஹாஷன் கவி மூலரே (தமி)

பதம்-இராகம்-ஆதிதாளம்.
பல்லவி.

அரசுநீர் அரசுநீரய்யா நபிகட் கெல்லாம்
அரசுநீர் அரசுநீரய்யா படைப்புக்கெல்லாம்
அரசுநீர் அரசுநீரய்யா (அர)

அநுபல்லவி.

அருஷினில் சென்றங் காதிமுன் பேசிய
அத்தஹிய் யாத்தினில் வருமஹ்மூதே (அர)

சரணங்கள்.

1. அவ்வலிலே யவனுடியே கல்கினை
யாக்க பிறுதத்துக் கொளுவினதாம்
அவ்வையின் யாதொரு குறிப்பில்லா தாகிய
அஹது ஹலறத்தினில் சமதிய்யத்தாம் (அர)

2 சமதிய்யாவொளி வானதில் வெளிவருஞ்
சகல ஹக்கிகத்தின் முகம்மதிய்யாம்
அமலன் முதலில் படைத் தஹ்மதொளிவாமற்ற
அண்டம் உமதொளியில் படைத்ததினால் (அர)

3. நித்தனை யொருவனென் றறிந்து யீமான்கொண்டு
நீடித் தவம்புரிந்தோ ரானு னுமவர்
உத்தமனதிலும்மை உண்மைகொள் ளாவிடில்
ஊழி நரகத்தைக் கார்க்கறிதாம் வந்த (அர)

4. அடிமுடி நடுவும் அகண்ட சராசரமும்
அடங்கலும் முதலியா னுருவாகும் இந்த
படிபதந்தோயார் நடுவில்லாதிருக்கில்
பலபடைப் பெவையுமுண்டாகாதாய் (அர)

5. ஆதம் முதல்தொடுத்து யீசா நபி வரையில்
அடியார் கியாமத்தில் மன்ருட்டங் கேழ்க்க எல்லாம்
தீது சொல்லியே தாங்கள் சீர்பாதம் போவென்ன
திருமுன் அருஷின்கீழ் மன்ருட்டஞ் செய்யும் (ஆர)

6. ஆலத்துக் கசலாம் அபுல் அறுவாஹறாம்
அடிமைகளில் சிறியேன் றுதியினுக்கிரங்கி
வாலகுருவாய் வந்து வழியினைக் காட்டவும்
வள்ளலே மீறுஹறுஸன் றனக்கருளும் (ஆர)

பதம் இராகம்-மோகனம்-ஏகதாளம்.

பல்லவி.

ஆரணத்தோர் நபி காரணஞ்சொல்ல நா
வாயிரம் வேண் டாமோ

அனுபல்லவி.

பூரணமானவ ரெங்கும் நபியாகப்
போற்றுமறை நாலும் யேற்றிப் புகழ்ந்திடும் (ஆர)

சரணங்கள்.

1. சித்துக்கள் சத்தா யிலங்கிடுஞ் ஜோதி
சின்மயரூப தயாபர நீதி
கத்தனருள்கொண்டு வந்தவர் காதி
காத்திமுல் லன்பியா வென்றிடுஞ் சாதி
முத்திபெற மூமீனுக்கருள் வாதி
முன்னவனைக் கெஞ்சி மன்ருடும் போதி
வித்தருணத்தி லுதவிதந் தோதி
எந்தனுக்கு வழி தந்தருள் ஹாதி (ஆர)

2. ஆயிரம் நாமத் துயர்ந்திடும் போதா
அண்டர்கள் வந்து பணிந்திடும் பாதா
ஞாயத்துரையாங் குருஆனின் வேதா
நற்றவம் பெற்றவர்க் குற்றருள் நாதா
மாயக்கடனை யகற்றிடும் நீதா
வண்மை பரக்கத்தை செய்தருள் வீரா
தாயிற்சிறந்தருள் தந்திடும் மாதா
தர்ச்சமை யத்தி லெனக்கருள் தாதா (ஆர)

3. வானவர்கோன் ஜிபுரீலுக்கு மூந்தோர்
வண்ட ணிபுலீசு மாய்கையைத் தீர்த்தோர்
கானக மானின் பிணையின் றவத்தோர்
காசினி யெங்கும் நபியென் றிசைத்தோர்
மீனமனுகாம லெப்பவுங் காத்தோர்
எங்கள் வழிக்குரு வாகுந் திறத்தோர்
மேனிதனக்காக மேகங் கவிழ்த்தோர்
மீருஹாஸனுக் கிரங்கும் தனத்தோர் (ஆர)

பதம் இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சுபஹானல்லா சுபஹானல்லா
துய்ய பெரியோனை யென் பிழைபொறு நல்லா (சுப)

அனுபல்லவி.

ஸம்பஹ வில்லாஹியின் தசுபீஹுடையவனை
சகல இணையை விட்டுந் தனிமுத லோனை
மெய்ப்பொருள் தானு யிலங்கு மெங்கோனை
யெங்கும் பராபரிக்கும் இயல்புடையோனை (சுப)

சரணங்கள்.

1. சுபஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி
சொன்ன காசியத்தீது தப்ஸீறில்லாஹி
சுபபில்லா நற்கலிமா தம்ஜீதில்லாஹி
தரையிலிதை யோதினால் தன் வினை போகி (சுப)

2. உலகின் பிறப்பன்றியே உண்டாகும் ஆதம்
உரைதரும் பாஷை யேழு லெக்ஷமாம் நீதம்
அல்கை ஜின் மனுவெல்லாம் அமைத்திடும் நாதம்
அறிவோன் திருநாமம் நாலாயிரம் வேதம் (சுப)

3. அசுஹாபுல் கஃபுகளை யழித்திடா திறையோன்
அவனருள் செயலெல்லாம் அற்புதமுடையோன்
கசுலா அமல்கள் தன்னை கார்க்காத கொடியோன்
கடுநரகில் போனாலும் கத்தாதன் துய்யோன் (சுப)

4. காபர் மூசுலீம்கட்கும் கடிசான சண்டை
கார்க்கு மிறையை யென்ன காரண மெண்டே
தாபதர் கனவில் தன்பகுதாதில் கண்டே
தானவன் செயல்தகா தெனவிறை விண்டே (சுப)

5. அடிமைக் கிரங்கியொந்தன் அருளதைக் காட்டு
அறிவுதரும்பா லமுதத்தை யூட்டு
படிக்கும் மீருஹு-ஸன் சொல் பளிதமா யாட்டு
பத்தனை ரெக்ஷித்து பகர் வகை கேட்டு (சுப)

இன்னிசை.

லாயிலாஹ இல்லல்லா லாஹிரிலும் பாத்தினிலும்
பாயங்குமிழ்போலு மெங்கும் பரஞ்சோதியா யாளும்
ஆயும் பொருள் வேத மதிலடங்காப் புக ழானவனே
நீயடி யனுக்கிரங்கி நீயரு ளாயாயிலாஹி.

முனாஜாத்து பதம்.

பதம்-இராகம்-இந்துஸ்தான் காபி-ஆதி தாளம்.

பல்லவி.

யாயிலாஹி அடியேன் கெதி
யாரகுமா நீயே

அனுபல்லவி.

லாயிலாஹ இல்லல்லாஹு வனுதி
லாமலிபா முயிராளுஞ் சோதி
காயமிலானைக் கருத்தாற் றினங்
கண் கொழுந்துணை நீயே (யாயி)

சரணங்கள்.

1. அரசு பிரணவ மில்லாத நாயன்
அல்ஆன மிதுலமா கான தூயன்
வரிசையளிக்கு மிறையே யெந்தன்
வணக்க முரியோ நீயே (யாயி)

2. வானினுடைவை வறைந்தாலு மென்ன
வாரியில் நீந்தி யெழுந்தாலு மென்ன
பானுவின் மேலும் பறந்தா லென்ன
பலனைத் தருவோ நீயே (யாயி)

3. மேகத்துளியை யெண்ணினாலு மென்ன
மித்திரனெதிர் வந்து பேசி லென்ன
போக மணலை காணித்தா லென்ன
புகழ் தருவோ னீயே (யாயி)

4. ஆல மனைத்து மரசாண்டு மென்ன
அந்தரத்தோர் புதுமை யோதி லென்ன
காலந் துதிக்குந் தவத்தோர்க் கென்றுங்
கருணைபுரிவோ நீயே (யாயி)

5. காபுமலையேகி வந்தாலு மென்ன
கருவி சிகந்தார் கடல்போகி லென்ன
நாப்புமிசிர் நதியின்னீள் போயும்
நலவு தருவோ நீயே (யாயி)

6. சிக்கந்தர் அடைத்தரன் போயி லென்ன
ஜெகமீதில் மலைதெரிந் தெண்ணி லென்ன
பகாப்பூமியை சுத்தி பார்த் தென்ன
பதவிதருவோ நீயே (யாயி)

7. மாறுகச் செய்து வரும் பாவி யென்போல்
மானில மதில் காணும் நாளு முன்போல்
மீறு ஹா¬ஸனுக்கிடர் தீர்த்து வைத்து
மெய்க்கும் வல்லவ நீயே (யாயி)

இன்னிசை.

தாயிலான் தந்தையிலான் தங்குதுணை யொன்றுமிலான்
தாயுங் காயுமாயிருந்து சருவஉல காள்பவனே
நீயருளும் நாயகமாய் நேரில் வந்த யாரசூலே
லாயிலாஹ இல்லல்லாவை நானறியத் தந்தருள்வீர்.

பதம்-இராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

லாயிலாஹ இல்லல்லா வெனு மறிவை
நாடியறியவருள் தாரீரோ

அனுபல்லவி.

தூயவன் மஹ்மூதே மிகுறாஜில்
தோன்றும் காபகவுசைனி லறுஷில்
ஆயும் பொருள் கலிமா ஓதிடும் பரிசில்
அடியனை யிரங்கிக்கண் பாரீரோ (லாயி)

சரணங்கள்.

1. அல்லாஹூ மனுஹூரி லொன்று இன்சானி
அவனி லிருக்கும்உஜூ தரிவ தயானி
யெல்லாம் படைக்குமுன்ன மறிந்தபி மானி
யெந்தனுளந் தெளிவைத் தாரீரோ (லாயி)

2. அன்பியா அனைவர்க்கும் அரசா யமைந் தோரே
அவனொளிவில் சமைந்து வுருவாவந் தோரே
யென்பிழை பொருத்துநல் வழி தரு வோரே
யெவ்வுயிர்க்கும் பொருளைத் தாரீரோ (லாயி)

3. அருஷூக்குடையவனின் அருள்வீடு கஃபா
அதிநன்மை லெக்ஷமாகும் அறிந்திடும் பொதுவா
குருசி நபியை யேத்தி குருஆனில் வெகுவா
குருவே முடிகியருள் தாரீரோ (லாயி)

4. சகல வினையகற்றும் ஜகதசர்க் குருவே
சங்கையப் துல்லா தவம் வந்தநற் கருவே
இகலற மீருஹூஸைன் நவமோன குருவே
இதுவேளையிலருள் கண் பாரீரோ (லாயி)

நாகூர் ஹஜரத் ஷாஹூல் ஹமீது ஆண்டவரவர்களின் பிள்ளைவழி சாஹிபுமார்களில் தக்வாவுஞ் சற்குணமுஞ் சிறந்தோங்கி பேர்பெற்ற செய்குவென்னுங் குருவாகிய

ஹஜரத்து செய்யது அலி சாஹிபு அவர்கள்

உபாத்தான சங்கதியைப்பற்றி

ஷை மீருஹூஸன் சாஹிபவர்களா லியற்றிய

சரம கவி.

ஆசிரிய விருத்தம்.

உலகெலாம் புகழுநம் மாதியினுஜூதந்த
ஆழினிற் றனியேதுமோ
ருள்ளவன்னிப் பேனுமொரு நாமமெனினுமற்
றுவமிக்க வுருவாயினும்
ஒருமதிப் பாயினுங் குறிகுணந் தன்னைவிட்
டுயர்சுத்த வஹதியத்தாம்
உண்மையாந் தாத்தொடு சிபாத்துபன் மவுஜூது
மொன்றைவிட் டொன்று பிரியா

தோர்மொத்த வண்ணமா யறிவெனு மறத்தபா
வொன்றுபடும் வஹ்தத்திலே
ஊன்றிய ஹகீக்கத் முஹம்மதிய்யாவென
வுரைத்தது முதற்குறிப்பாம்
ஒன்றினுங் கலவாத விதமாய்ப் பகுத்தறிவி
னுரியபொருள் வாஹிதிய்யா
உயருமின் சான்ரக சியத்தின் சிபத்தினிலை
யுற்றது குறிப் பிரண்டாம்

அலகிடற் கரிதாய வுயிர்கள்பல வாகியே
ஆலமறு வாஹுானபின்
அன்னவுயிர் கட்குள்ள ரூபம்வெளி யாந்தான
மாலமுல் மிதாலுமாகி
அகிலமண் ணீருலவை யனலென்ன வோதிடு
மஞசிறுகள் நான்கினுலே
அனைத்துமுண் டான கண்டிப்புகட் கும் பெயர்க
ளால மஜிஸா மென்றதாம்
அவ்வழியி லேழாகு மாலமின் சான் காட்சி
யாகினோர் காமிலென்பார்
அற்புத வுஜூதினுல் வந்தவகை யறியவே
யருமறைகள் நபிமாரினை
அவனியிலனுப்பினது போல்நபிகள் நாயகமு
மரசுரிய மக்காவினின்
றளவிலா வளமதின மாநகரி னுக்கேகு
மாண்டு ஹிஜ்ராத்தானது

இலகுளத் தெவருமறி யோராயி ரத்திமூனு
மூன்றுநூற் றிருபானிலே
இயல்ரஜபு மாதமா றுந்திகதி யரசுநா
ளிரவேழு மணிவேளையில்
எங்கணும் புகழ்நாகூர் காதிறுெலி மகவழி
யிலங்குமா லீங்கண் மணியாய்
எழில்செய்யத் சாஹிபெனு மாலீமருள் மைந்தரா
யேகனருள் பெற்ற செய்ஹா

எத்தகை முரீதீன்க ளுக்குமிறு ஷாதுசெய்
திறைவனைக் காட்சி தருவோர்
இனிமைதரு மஃரிபா தௌஹீதி னில்மிலு
மெடுத்துரை விரித்துரைப்போர்
எவ்வகை ஷுஹூதிலு முராக்கபாச் செய்வதோ
டியல்பனு ஹாசிலானோர்
எங்கள் குரு மாதவச் செய்யதலி சாஹிபா
ரிறைமவுத் தாலுறங்க

பெலகுருவு நூருதீன் றகுமத்துல் லாவெனும்
பிள்ளைகட் பேரமாரும்
பெரிதுளம் பதறியுட லுருகியே விதியென்ன
பேதவாட்டந் தவிர்ந்தார்
பேரறிவி னுலிமொடு ஸாலிஹீன் செய்குமார்
பீருமார் ஹாஜிமாரும்
பேணுமுசுலீம் சீஷ ரெண்ணிலார் கூடியே
பிரியமொடு கிரியை செய்ய
பிரபல்ய நூருசா வென்னுமோர் சீஷர்நிதி
பெருகவே சிலவு செய்தே
பெரியோர்கள் நீராட்டி கபனிட்டு கொடுபோய
பின்னர் தொழுவித்து தருகா
பேட்டியுள கால்மாட்டு மண்டபக் கீழ்புறம
பெரியதலங் கபுர் தோண்டியே
பிசுமிலொடு வைத்தினி தடக்கினர் பிழைநீக்கி
பிருதௌசை யருள் நாயனே.

வாழிப் பதம்.

லாவணி.

முந்தி பிஸ்மில்லாவை ஆதியே அதை
முற்றும் நினைவில்வைத் தோதியே அருள்
தந்து இசுமுல்லாவைப் போற்றியே வரும்
தானவன் பரக்கத்தும் வாழியே

1. அல்ஹம்து லில்லாஹி யடுத்திடும் செப்பில்
ஆலமீன் புகழ்சொல்லை தொடுத்திடும் உதவிச்
சொல்வந்து தமிழ்தனைக் கொடுத்திடும் சுப
சோபனம் கூறருள் வாழியே

2. ஆதி பெரியவன் நீதியே அவனை
அனுதினம் ஷுக்குருவைத் தோதியே பரஞ்
சோதி நபி சலவாத் தோதியே நாளுஞ்
சொல்லிச் சோபனஞ் செய் வாழியே

3. பாதம் புவிப்படா நாயகம் வந்து
பாகதி தந்திடும் தாயகம் யேக
நாதனருளுறை வாயகம் எங்கள்
நாதாநபி பேரில் வாழியே

4. ஆதம் நூகு இபுறுகீமாம் கலீல்
ஆண்டவர் மூசா யீசாவுமாம் திசை
காதங்கமழ் நபி வாசமாம் யிவர்
கழலடி போற்றியே வாழியே

5. வேதம் குறுன் தனில் வந்திடும் நபி
விளங்கும் நாலாறுபே ரென்றிடும் முறுசல்
ஓதும் முன்னூற்று பன்மூன்றிடும் லெக்ஷம்
ஒரு நாலாயிரம் வாழியே

6. அபூபக்கர் உதுமானலி மகன்
அசன் ஹுஸைனென்றிடும் பேரொலி நபி
நுபுவத்துபின் முப்ப தாண்டொலி இதை
நுவலப் பொருள் தெரிய வாழியே

7. மக்கா முஹாஜீரின் அனைவரும் சொந்த
மதீனம் மன்சாரிகள் துணைவரும் வெகு
தக்கசுஹாபிகளே வரும் பேரில்
தனியவன் பொருத்தமீன் வாழியே

8. தீனுக்குதுணைதாய் நின்றிடும்   யிமாம்
தெரிதரும் நுஹுமானென் றோதிடும்   அரி
தானிமாமலிக்கு ஷாபியும்   பெரி
தான இமாம் ஹம்பல் வாழியே

9. நாலுத்தரீக்குனில் நின்றிடும்   ஒலி
நல்வழி செய்குதா ரென்றிடும்   முகம்
பாலா முகம்மது கௌதிடும்   ஹாஜா
பந்தேநவா ஜொலி வாழியே

10. குத்துபு முகையதீன் தம்மையும்   புகழ்
ஷெய்கு ஷாதிலி யுண்மையும்   யாரும்
நத்தும் நாகூர் காதிரொலியையும்   எந்
நாளும் கபீரொலி வாழியே

11. தபுரேத் ஆலம் நத்ஹுரொலியையும்   நன்மை
தங்கும் இபுறாஹீம் ஷஹீதையும்   சொந்த
நிபமெனும் ருவுத்தர் பஹுலையும்   பாசி
நெய்னா முகம்மது வாழியே

12. பாப்பாஹுரு ஷெய்கலாவுந்தீன்   ஒலி
பரஞ்சோதி மஸ்தா னொலியுந்தீன்   நலஞ்
சேர்ப்பார் திருவாஹுர் ரொலியுந்தீன்   திட்டச்
சேரி மன்சூரொலி வாழியே

13. தராநகர் ஷெய்கு தாவூதே   சங்கை
தரும்புகழப் துல் மஹ்மூதே   எங்கும்
பிரபல்யம் பீரு முகம்மதே   மவுலா
பேர் அபூபக்கரும் வாழியே

14. ஆதிரெங்கம் தனில் வாழ்ந்திடும்   வெகு
அன்பர் முகுஸீமிருந்திடும்   நேர்
பாதை வழிக்கிட்டு வந்திடும்   செந்நெல்
பரவி எங்கும் கீர்த்தி   வாழியே

15. கழனிபலவயல் சேர்ந்திடும் ஜெய
கட்டிநகர் தனில் பிறந்திடும் வான்
முழுமதிபோலே இலங்கிடும் தீன்
மூமீன் முஃசுலீம்கள் வாழியே

16. தந்தை தாய் குருமார்களனைவரும் குலத்
தாயாதிசொந்த மென் றெனவரும் நல்ல
சிந்தை மீருஹுசேன் புகழ்தரும் இந்த
ஜெகமெங்கும் பாவாணர் வாழியே

17. நாளும் பதந்தனைப் பாடிடும் தங்கி
நானிலமதில் அதை கேட்டிடும் நாயன்
வாழும்படிக்கருள் செய்திடும் பிழை
வல்லோன் பொருத் தாமீன் வாழியே

மீருஹுசேன் சாஹிபு அவர்கள் பாடிய பதங்கள்
கிடைத்தமட்டில் இத்துடன்

முற்றிற்று.

இங்ஙனம்
பீ. சி. செய்யிது முகம்மது ருவுத்தர்,
சேனைக்கரை.

PRINTED AT THE
KAMALIA PRESS
KOOTHANALLUR.

அட்டவணை.

	பக்கம்
நூல் ஆசிரிய விருத்தம்	1
பிஸ்மிலின் பயான்	2
புகழின் பயான்	3
ஷுக்ரின் பயான்	,,
அல்லாவின் திரு நாமம்	4
நபிமார்களின் துதியும் நபிநாமத்தின் மகிமையும்	5
சலவாத்தின் பயான்	6
சலவாத்து சொல்லப்படாத தலம்	7
நாலு யார்களையும் பெரியோர்களையும் புகழ்வது	8
அவையடக்கம்	,,
தீனின் பயான்	9
மனிதன்பேரில் முந்தின பருலு கலிமாவென்பது	11
கலிமாக்களின் பயான்	11
ஏழு வசனம் ஓதலின் பயான்	12
ஈமானின் விபரமும் சிபத்துகளும்	13
அல்லாவைக் கொண்டு ஈமான் கொள்ளுதல் விபரம்	14
தாத்து சிபத்தின் விபரம்	14
இதில் 7வது சீர் முதல் மலாயிக்கத்துகளின் பயான்	15
மலக்குகளின் விபரம்	16
ஜிபுரயீல் அலைஹிஸ்ஸலாம் வந்த கணக்கு விபரம்	16
வேதங்களின் பயான்	18
நபிமார் ரெசூல்மார்களின் பயான்	19
25—நபிமார்களின் விபரம்	20
உலுல் அஜமி 6—பேருக்கு விபரம்	20
ஓடுக்கத்து நாளைக்கொண்டு ஈமான்கொள்ளுதல்	21
ஈமானுக்கு ஜவாபு	24
ஈமான்கொண்ட காலத்தின் விபரம்	25
ஈமானின் ஆபத்துகளின் விபரம்	26
முனாபிக் கடையாளம்	26
குபிருன சொர்க்களை பேணுதலின் பயான்	27
மூமீன்கள் அடையாளம்	27
வரிசைக்கிரமப்படி நிர்ணயங்கொள்ள வேண்டியது	28
ஊரில் இமாமை நிருத்துவதும் முசுலீமை தொழுவித்து அடக்குவதும்	29
மிகுறுஜின் பயான்	29

	பக்கம்
ஒலிமார்கள் கராமத்தின் பயான்	30
மவுத்தினர்க்கு நன்மை சேருமென்பதும் பலசேதி	30
பெரும்பாவத்தின் பயான் பலசேதியும்	31
நபிநாயகத்துக்குப்பின் கிலாபத்து பட்டத்தின் பயான்	32
இசுலாத்தின் பயான்	32
கலிமாவிர்க்கு 4—பாதையில் 4—மகுனுக்களின்	34
கலிமாவில் 4—பருலு	34
இசுலாத்துடைய பருலுகள்	35
ஈமானும் இசுலாமும் ஒன்றென்பதும் ஈமான் கொப்புகளின் விபரமும்	35
அல்லாகுத்த ஆலாவுக்கு வாஜிபான சிபத்துகள்	36
இசுலாத்துடைய வாஜிபுகள்	36
இசுலாத்துடைய ஹக்குகள் ஷை சுன்னத்துகள்	37
தௌஹீதின் பயான்	38
மஃரிபாவின் பயான்	39
உஜூதுடைய மருத்தபாக்கள்	40
தக்குவாவின் பயான்	40
இல்மின் பயான்	41
பிள்ளைகளுக்கு பிதாசெய்யவேண்டியது	41
இபுறுஹீம் நபியை 10 கருமத்தைக்கொண்டு சோதித்தது	42
தொழுகையின் வரிசையின் பயான்	42
தொழுகை விட்டவர்களின் வேதினையின் பயான்	44
தொழுகையின் ஹூக்முகள்	45
ஜமாஅத்தின் பயான்	45
ஜூம்ஆவின் வரிசையின் பயான்	46
பரக்கத்துண்டாகும் பயான்	47
மிடிமையுண்டாகும் வகைகள்	48
மறதியுண்டாக்கும் வகை	49
பாடம்வருகிற பயான்	51
பாபு மஹ்ரிபாமாலை துவர்க்கம்	53
சலவாத்துப் பதிகம்	62
சபை வணக்க விருத்தம்	65
சபை வணக்க லாவணி	66
பதங்கள்.	
இன்னிசை அண்ணலிரசூலே என்	81
அல்லா அல்லா வென்றால் யெல்லா வினையும்	111
லாவணி-அவ்வலிலே அருவுருவா	113

	பக்கம்
அஹூதில் சமைந்துவரும் அண்ணலிறசூல்	123
அகிலவாழ்வை நம்பி அல்லாதனை மரந்து	131
அண்ணலிரசூலே யுங்கள் அன்பு வரவுங்காணேன்	133
அண்ணலிரசூலடிகளை தேடியே	135
அனைத்தாளும் வல்லோன் இனத்தில் மனுவானோர்க்கு	136
அரசுநீர் அரசுநீ ரையா	141
ஆலமுழுதுங் கண்ணுடு முயிர் பதியே	89
ஆவிக்குறுந் துணையாம் மேவுமுமை யல்லாமல்	95
ஆலமுயிர்க் குயிருகிய கோவே	97
வெண்பா வணக்கஞ்செய்வாய் மனமே	105
ஆதிஇறையொளி லாவணி	121
ஆதியொளிவினில் வரும் நபியே	129
ஆரணத்தோர் நபி காரணஞ்சொல்ல நாவாயிர	142
இன்னம் வரக்காணேனடி யெங்கள் மஃமூதரடி	122
இன்னின்ன விதமாக தன்னை வணங்குமென்ற	137
இப்போதருள்புரி யொண்ணுதா	139
எதுவேணுங் கேள்மனதே	78
எங்கோனருள் வேதா நபி தாதா பாதமே	92
என்மேலே கிருபை இரங்குவீர் நாளும்	112
என் துயர் தீர்த்தருளையா	128
ஏகன் தீபமே ரசூல் யேழை முகம்பாரும்	98
ஒருவனொளியில் வரு மிருபதி யரசரின்	130
இன்னிசை கஞ்சபத மெப்போதையா	83
கலிமாப் பயனை யரிவீர்	74
கண்கொண்டுந் தண்டிய	106
குன்னென்றுன் பயக்கூனு வென்றேதன்	116
லாவணி—கூரக்கேளுமூமீன் தொழுகவேணுமென்று	133
இன்னிசை—சலவாத்தை யோதிக் கொள்வீர்	72
சந்ததமுங்கள் பதத்தை சிந்தையில் நினைத்து போற்ற	93
சாகாதிருக்க சனனுண்டுமே இரசூலருளவா	101
சிங்கி சிங்கா பாட்டு	88
சிந்தைத் துயர் தீர்ப்பாயோ	122
சுபஹானல்லா சுபஹானல்லா	143
சொர்க்கப்பதி வாழ் பலனை யார் தருவாரினி	125
கலித்துரை—தங்களின் பதம் தனை தந்திடும் நிதம்	82
தங்கள் பதந்துணை மெய்யா மனக்கங்குலறு	99
தமியேன்மீது வாதா	140

	பக்கம்
தா ஹாகபிதம் புகழ்தனேயே நிதம்	108
திருமுஹம்மதை யுங்கள் குருமன	92
லாவணி-தானவ னுகந்திடுந் தீனவாரே	117
தினந்தினம் உமையே புகழ்ந்தேனே	107
இன்னிசை துய்யோனின் மஹ்மூதே தங்களின்	70
தொழுதே யழுதிருந்து அஞ்சுமனதே	96
தொழுதானந்தத்தை நாடு	100
தையிப் கலிமா தன்னில்	103
நாகூர் செய்யதலி சாஹிபவர்கள் உபாத்தான சரம கவி	146
நின்றேன் நின்றேன் நேர்கலிமாவின் பொரு	110
நீயருளா என்னை யாளா	87
புவியிலே நபிபேரில் முனஜாத்தை	125
பேரின்ப வமுதத்தை தேடு அருள	99
மயித மயித வேதா	108
மதிபதி எந்தன் துயர் தீரும் மகுமூது வேதா	123
இன்னிசை-மகுமூதே மலர்பாத மருள்தாருமே	84
முனஜாத்து பதம்-யா இலாஹி அடியேன் கெதி	144
லாவணி-மூமின் குலத்தோரே	115
லாயிலாஹ இல்லல்லாவின் சொல்லே நிதம்	75
இன்னிசை-லாயிலாஹ இல்லல்லாவெனு மறிவை	145
வந்தோங்கள் கந்தப்பதமல ரெந்தன்	87
வநதிக்கவேண்டு மெய்யா	91
வள்ளலெந்தனுக் கிரங்காய்	132
இன்னிசை-வஞ்சியே வென்னையாள வள்ளல் நபிவருவாரே	81
வந்து தயவா புரி பதமெந்தனின்	130
வாழிப்பதம்	148
வித்தொன் றிருக்கு தின்சான்	102
வேதா அதீதா கிருபை வந்தாளு மெந்தனே	94
வேதா காதங்கமழ் வீசும் பதத்தை தாதா	85
ஜென்மதாவே ஜீவகாருண்யந் தருவீர்	90
ஹக்கனே நீ திக்கிர்செய்தால் ஹக்குடநீ மனமே	104
ஹாதியின் இரசூலெனுங் கருணைகரே	80
ஹாவதான மஸ்கூத்திலே	119

பிழை திருத்தம்.

பக்கம்.	பாட்டு லெக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
23	45	7	யீமானுல்	யீமானில்
25	49	11	கலதலத	கனதலதி
29	56	5	ணிறுதிவைத்	ணிறுத்திவைத
,,	,,	16	நரராகு (ல	நரராகா
,,	57	15	விருதாவெனச்சொ	விருதாவென்ச்சொல்
45	89	7	சருவுதல	சருவுதல்
46	91	5	மூன்றுஜம்	மூன்றுஜனம்
56	12	5	ளொக்ஷணத்தில்	லெக்ஷணத்தில்
,,	13	7	கபருந்தேள்வை	பகருந்தேள்வை
57	15	1	றுருப்பு	முருப்பு
63	5	5	கண்டல்லலாதவன்	கண்டாலல்லாதவன்
,,	7	1	மீண்பர்மேல்	மின்பர்மேல்
,,	,,	4	துரைத்திட்டான்	துரைத்திடான்
72	இன்னிசை	4	பருலாமே	பலுலாமே
76	1	7	யேந்தக்குழு	யெந்தக் குழு
,,	2	8	யருவியுங்	யறிவியுங்
77	3	8	செய்வோன்	செயிதோன்
78	6	3	திக்கிரத்து	திக்கிரது
79	4	1	இசுலால்	இசுலாம்
80	12	2	மேன்மைவ	மேமைமை
,,	2	2	பிணிதனே	பிணேதனே
89	பல்லவியில்	3	தேறி	தெரி
90	2	1	கெஞ்சித்தெழு	கெஞ்சித்தொழு
91	5	2	தரு	தகு
97	அநுபல்ல	4	றறிந்திடும்	றறிந்திடுமே
106	5	2	படைத்துதான்	படைத்ததுதான்
107	3	2	அகுஉரை	அருவுரை
108	4	3	கோடைமஹ்றூதே	கொடைமஹ்றூதே
109	5	1	நேருங்கஃபாவை	நேருங்கஃபாவில
111	1	6	வீணுலாகும்	வாணுலாகும்
113	1	1	சோதியில்	சோதியால்
			சுருதியில்	சுருதியால்
,,	,,	3	நீதிமுறை	நீதிமுறையி
,,	3	2	மெய்யில்காண்	மெய்யில்கண்

பக்கம்.	பாட்டு லெக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
113	லாவணி 2	1	நெறியதனில்	நெருப்பதனில்
115	7	8	யேற்றமபுஸோ	யேற்றம்புஸோ
118	2	9	தாமீக்கதனில்	மீதாக்கதனில்
119	அனுபல்ல	3	வஹ்நததாம்	வஹ்நதத்தாம்
		4	வஹநதாம்	வஹநதத்தாம்
139	9	3	தவபாவில்	தௌபாவில்
145	5	2	சிகந்தார்	சிக்கந்தர்
,,	6	3	பகாப்பூமியை	பக்கப்பூமியை
147	விருத்தம்	25	யோராயிரத்திறெ	யோராயிரத்திறெடு
150	8	3	தாணிமாமலிக்கு	தாணிமாமாலிக்கு

அறிவிப்பு.

இப்புத்தகம் ஒவ்வொரு முஸ்லிமானவர்களுக்கும் அவசியம் தேவையானபடியாலும் இதில் சொற்ப பிரதிகள்மட்டும் அச்சிடப்பட்டபடியாலும் இதை மற்றவர்கள் அச்சிடாதபடி ரிஜிஸ்டர் செய்யப்பட்டபடியாலும் அவரவர்களும் முன்னுடியே இதை வாங்கிக்கொள்ளும்படி கோரப்படுகிறது.

புத்தகம் கிடைக்குமிடங்கள்.

ந. அ. முகம்மது அப்துல்காதிர் ஆலிம்சாஹிபு அவர்கள்
ஷாப்புக்கடை
கூத்தாநல்லூர் P. O.

பே. த. நெய்னுமுகம்மது சாகிபு அவர்கள்
நெ. 220, 221, மருந்துக்கடை
S. B. பஜார், ரெங்கூன்.

(எமது புதல்வர்கள்)

P. S. முகம்மது அப்துல் காதிர் பிரதர்ஸ்
H. பிளாக்கு 31, 32 நெ. மருந்துக்கடை
ஜே. ஜோ. பஜார், மாண்டலே.

சேனைக்கரையில் நமதிடத்திலும் நேரக்க விலைக்கும் வி. பி. போஸ்டு மூலமாகவும் கிடைக்கும்.

எமது விலாசம்:—

P. S. செய்யிது முஹம்மது ருவுத்தர்
சேனைக்கரை
தண்ணீர்க்குன்னம் P. O.
(Via) கொரடாச்சேரி *S. I. R.*